32°c
கூடிய வெப்பநிலை 40°c
குறைந்த வெப்பநிலை 27°c
தெளிவான, வரண்ட காலநிலை காணப்படும்.

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 24

விலை: யாழ். – 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=

சுடர்: 29 | கதிர்: 147 | வள்ளுவர் ஆண்டு: 2045 | சித்திரை 09, செவ்வாய் 22.04.2014

22 APR 2014

# அரசுக்குச் சந்தேகம்

## தென்னாபிரிக்காவின் முயற்சியில் திடீர் சிக்கல்

கொழும்பு, ஏப். 22

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில், அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இணக்கம் ஒன்றை எட்ட வைப்பதற்கு தென்னாபிரிக்கா எடுத்து வரும் முயற்சிகளில் சிக்கல் தோன்றியுள்ளது. தென்னாபிரிக்கா பக்கச் சார்பாக நடக்க முயற்சிக்கிறதா என்ற சந்தேகம் அரச தரப்பினரிடம் திடீரென ஏற்பட்டிருப்பதே இதற்குக் காரணம் என்று கொழும்பில் தகவல் அறிந்த வட்டாரங்கள் உதயன் பத்திரிகைக்குத் தெரிவித்தன.

அமைதி முயற்சிகளில் ஒரு மூன்றாம் தரப்பாக ஈடுபடுமாறு தென்னாபிரிக்காவுக்கு இலங்கை அரசே அழைப்பு விடுத்திருந்தது. கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டுக்கு வந்திருந்த தென்னாபிரிக்க அதிபர் ஜேக்கப் சூமா, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து இதுபற்றிப் பேசினார்.

அதன் பின்னர் இலங்கை விவகாரத்தைக் கையாள்வதற்கான சிறப்புத் தூதுவர் ஒருவரை தென்னாபிரிக்க அதிபர் நியமித்தார். அமைதி முயற்சிகளில் மிகுந்த அனுபவம் மிக்கவரும் அதிபர் சூமாவுக்கு நெருக்கமானவருமான சிறில் ரமபோஷா சிறப்புத் தூதராக நியமனம் பெற்றார்.

அவரது அழைப்பின் பேரில் இலங்கை அரச தரப்புக் குழு ஒன்று தென்னாபிரிக்காவுக்குப் பயணமாகியது. அந்த நாட்டின் நல்லிணக்க முயற்சிகள் குறித்து விரிவாகக் கேட்டறிந்த அந்தக் குழு, இலங்கையின் நிலைமைகள் தொடர்பிலும் விளக்கியது.

அந்தப் பயணத்தைத் தொடர்ந்து கடந்த மார்ச் மாதம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழுவினர் தென்னாபிரிக்காவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களுடனான சந்திப்பின் போது தனது இலங்கைக்கான பயணத் திகதியை ரமபோஷா தெரிவித்திருந்தார்.

இப்போது இந்த விவகாரமே அரச தரப்பினரிடையே சிக்கலானதாக மாறியிருக்கிறது. இலங்கைக்கான பயணம் குறித்து அரச தரப்புக் குழு தென்னாபிரிக்கா சென்றபோது ரமபோஷா தெரிவித்திருக்கவில்லை என்று கூறப்படுகிறது. அதன் பின்னரும், தனது பயணம் குறித்து அரசுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்காத நிலையில் பயணத் திகதிகள் குறித்து கூட்டமைப்பினரிடம் அவர் எடுத்துக் கூறியிருப்பது தமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியிருப்பதாக அரச தரப்பினர் கூறுகின்றனர்.

புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான அமைதிப் பேச்சுக்களில் அனுசரணைப் பணியாற்றி வந்த நோர்வேயும் பக்கச் சார்பாக நடந்துகொள்கிறது என்ற குற்

21ஆம் பக்கம் பார்க்க

## கைதி தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.22

வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய கைதி ஒருவர் நேற்றுமுன்தினம் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். அவரை சிறைச்சாலைத் தரப்பினரும் தாமும் இணைந்து தேடிவருவதாக வவுனியாப்

21ஆம் பக்கம் பார்க்க

## வெற்றிலை மென்றபடி வியாபாரம் செய்யத் தடை

யாழ்ப்பாணம், ஏப்.22

வலி.மேற்குப் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட சந்தைகளில் வெற்றிலை, பாக்கு மென்றபடி வியாபாரம் செய்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நிலத்தில் வைத்து மீன் விற்பதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்திலேயே

21ஆம் பக்கம் பார்க்க

## கையில் புத்தர் டாட்டூ குத்திய பெண் கைது

கொழும்பு, ஏப். 22

புத்தரின் உருவத்தைக் கையில் 'டாட்டூ'வாகக் குத்தியபடி வருகை தந்த சுற்றுலாப் பயணி ஒருவர் உடனடியாகக் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். அவரை நாடு கடத்தும்படி உத்தரவிட்ட, நீர்கொழும்பு மேலதிக நீதிவான் ரி.எம்.ரி.பண்டார, அதுவரையில் மீரிகான தடுப்பு முகாமில் சிறைச்சாலை அதிகாரிகள் மூலம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். பிரிட்டனில் இருந்த வருகை தந்த மிச்சேல் கால்மன் (வயது 37) தனது கையில் தாமரையில் அமர்ந்திருக்கும் புத்தரின் உருவத்தை 'டாட்டூ'வாகக் குத்தியிருந்தார் என்றும் அது புத்த மதத்திற்கு எதிரானது என்றும் பொலிஸார்

21ஆம் பக்கம் பார்க்க

## எத்தனை நாள்தான் ஏமாற்றுவீர்?




யாழ்.மாநகர சபையில் வேலைப்பகுதி மற்றும் சுகதாரப் பகுதியைச் சேர்ந்த 113 பேர் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி யாழ்.கச்சேரியடியிலுள்ள வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக நேற்றுக்காலை முதல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(விரிவான தகவல்கள் 3 ஆம் பக்கத்தில்)

## மோடி இந்திய பிரதமரானால் ராஜபக்ஷ மீது விசாரணை

### அடித்துக் கூறுகின்றார் வைகோ

சென்னை, ஏப்.22

நரேந்திர மோடி இந்தியப் பிரதமராகப் பதவியேற்றால் இலங்கையில் இனப்படுகொலை நடப்பதற்குக் காரண

23ஆம் பக்கம் பார்க்க

## இந்திய அரசு வழங்கிய உழவியந்திரங்கள் எங்கே?

### கண்டுபிடிக்காமலே முடிந்தது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.22

வடக்கு மாகாண விவசாயிகளுக்கு என இந்திய அரசால் வழங்கப்பட்ட உழவு இந்திரங்கள் எங்கே என்று கேட்கப்பட்டபோது அதற்கு அடுத்த கூட்டத்திலேயே பதிலளிக்க முடியும் என்று சமாளித்தார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. நேற்று நடைபெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே தமிழ்த் தேசியக்

21ஆம் பக்கம் பார்க்க

## காணி சுவீகரிப்பு அறிவிப்பை திரும்பப் பெறவேண்டும் அரசு

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப்.22

"வலி.வடக்கு காணி சுவீகரிப்பு அறிவித்தலை அரசு திரும்பப் பெற வேண்டும். அந்தக் காணிகள் மக்களிடம் மீளவும் வழங்கப்பட வேண்டும்"- இவ்வாறு யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டு ஜனாதிபதியின் செயலாளருக்கும் அனுப்பி வைப்பதென்றும் நேற்றைய

21ஆம் பக்கம் பார்க்க

## மாகாண சபையுடைய அதிகாரங்களை பறித்தெடுக்கவே ஒருங்கிணைப்புக் குழு

### கடுமையாகச் சாடுகின்றார் வடக்கு முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஏப்.22

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசு பறித்தெடுக்கும் ஒரு செயற்பாடாகவே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை நாம் காண்கின்றோம். அதாவது மத்திய அரசின் கை மாகாண சபையின் நடவடிக்கையில் மேலோங்கும் வண்ணமாகவே ஜனாதிபதி செயலணி, மாவட்ட ஒழுங்கிணைப்புக் குழு ஆகியவற்றின் நடவடிக்கைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன- என்று கடுமையாகச்

21ஆம் பக்கம் பார்க்க

## தடையை எதிர்கொள்ள இலங்கையும் தயாராம்

### கூறுகின்றார் அமைச்சர் ரிசாத்

கொழும்பு, ஏப்.22

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பன இலங்கை மீது பொருளாதாரத் தடைகளை விதிக்குமானால் அவற்றை எதிர்கொள்ள மாற்று வழிகள் கண்டறியப்பட்டுள்ளன என்று கூறியுள்ளார் வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீன்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசுக்கு எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை இலங்கை அரசு நிராகரித்துள்ளதுடன் ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் முன்

23ஆம் பக்கம் பார்க்க

சர்வதேசத்துக்கு சவால்விடும் இலங்கையின் கதி என்னவாகும்?

பக்கம் 12

## வடக்கு கல்விச் செயலர், பணிப்பாளர் மீது அதிகார முறைகேட்டு குற்றச்சாட்டுக்கள்

### மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பதிவானது

யாழ்ப்பாணம், ஏப்.22

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபடுகின்றனர் என்று யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கம் இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளது. குறித்த இருவரும் தமக்கு வேண்டியவர்களுக்கு மாத்திரம், தாம் நினைத்த இடங்களுக்கு இடமாற்றங்களை வழங்கி வருகின்றனர். அவர்கள் இவ்வாறு அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவதால் ஏனைய ஆசிரியர்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே அவர்கள் இருவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று கோரியே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இலங்கை அரசின் தாபன

21ஆம் பக்கம் பார்க்க

## அமலன் கொலை; 8 பேருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஏப்.22
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம்பெற்ற பொன் அணிகளின் போர் துடுப்பாட்டத்தில் குடும்பஸ்தர் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 8 பேருக்கும் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.
மல்லாகம் நீதிமன்றில் மேலதிக நீதிவான் ஜோய் மகிழ் மகாதேவா முன்னிலையில் இந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. அவர்கள் ஏற்கனவே அடையாள அணி வகுப்புக்கு முற்படுத்தப்பட்டு அவர்களில் 5 பேர் அடையாளங் காணப்பட்டனர்.
கடந்த மாதம் இடம்பெற்ற இந்தக் கொலைச் சம்பவத்தில் குருநகரைச் சேர்ந்த, த.அமலன் (வயது -23) என்பவரே அடித்துக் கொல்லப்பட்டார். (ற-4)

# யாழ்ப்பாணத்தில் இன்னும் அபிவிருத்தி ஏற்படவில்லை

## மலேஷிய அரசு கூறுகின்றது

யாழ்ப்பாணம், ஏப்.22
யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு மாகாணம் என்பன இன்னும் முழுமையாக அபிவிருத்தியடையவில்லை என்று தெரிவித்துள்ளது மலேஷிய அரசு.
அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் மலேஷிய நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளது அந்நாட்டு அரசு.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள இலங்கைக்கான மலேசிய தூதுவர் அஷ்மி சைமுதீன்,
"போர் நடைபெற்ற காலத்திலேயே மலேசிய நிறுவனங்கள் தொலைத் தொடர்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளில் முதலீடுகளை செய்திருந்தன.

> “ போர் நடைபெற்ற காலத்திலேயே மலேசிய நிறுவனங்கள் தொலைத் தொடர்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளில் முதலீடுகளை செய்திருந்தன. தற்போது போர் முடிவடைந்துள்ளது. அதனால் அதிக வாய்ப்புகள் கிடைத்துள்ளன.

தற்போது போர் முடிவடைந்துள்ளது. அதனால் அதிக வாய்ப்புகள் கிடைத்துள்ளன. அவற்றை மலேஷிய நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
இலங்கையில் இருந்து கடந்த வருடம் 64 ஆயிரத்து 51 பேர் மலேசியாவுக்கு பயணம் செய்துள்ளனர். 2012 ஆம் ஆண்டு 62 ஆயிரத்து 821 பேர் மலேஷியாவுக்கு பயணம் செய்திருந்தனர். அந்த எண்ணிக்கை தற்போது இரண்டு வீதமாக உயர்ந்துள்ளது.
இந்த வருடம் 70 ஆயிரம் இலங்கை சுற்றுலாப் பயணிகள் மலேஷியாவுக்கு வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது."- என்று தெரிவித்துள்ளார்.
மலேஷியாவைச் சேர்ந்த தனியார் நிறுவனங்கள் இலங்கையில் 1.5 பில்லியன் டொலர் முதலீடு செய்துள்ளன என்று கூறப்படுகின்றது. (ற)

## மண்ணெண்ணை கலந்த குடிதண்ணீர் போத்தல்கள்

கொழும்பு, ஏப்.22
கம்பஹா மாவட்டத்தில் உள்ள உற்பத்தி நிலையம் ஒன்றிலிருந்து மண்ணெண்ணெய் கலந்த குடி தண்ணீர் போத்தல்களை நுகர்வோர் அபிவிருத்தி அதிகார சபையினர் கைப்பற்றியுள்ளனர்.
இங்கு 1500 மில்லி லீற்றர் தண்ணீர் அடங்கிய 12,000 போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக நுகர்வோர் அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்தனர். இதேவேளை 500 மில்லி லீற்றர் அடங்கிய 25,000 போத்தல்கள் குறித்த இடத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளன. இங்கு 5 லட்சம் வெற்றுப் போத்தல்களும் கைப்பற்றப்பட்டுள்ள. (ற)

## மாகாண சபைக்கான நிதியில் பெரிதாக சாதிக்க முடியாது

### சிறு வேலைத் திட்டங்களே செய்ய முடியும் என்கிறார் விவசாயத் துறைச் செயலர்


யாழ்ப்பாணம், ஏப்.22
வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு மிகப் பெரிய திட்டங்களை நிறைவேற்ற முடியாது. சிறு சிறு வேலைத் திட்டங்களையும், ஏற்கனவே நடைபெறுகின்ற வேலைத் திட்டங்களை கொண்டு நடத்துவதற்குமே அந்த நிதி போதுமானது - இவ்வாறு உண்மையைப் போட்டுடைத்துள்ளார் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எம்.ஹால்தின்.
யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. அப்போது தொண்டமனாறு நீரேரியில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணைகள் மூலம் நீர் கசிவு ஏற்படுகின்றது. அதனைத் திருத்தியமைக்க வேண்டும், அதற்குரிய நிதி மூலங்கள் இனங்காணப்பட வேண்டும் என்று வடக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தினரால் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதையடுத்தே இந்த உண்மையைப் போட்டுடைத்தார் எம்.ஹால்தின்.
நீர்ப்பாசனத் திணைக்களத்தினரால் கோரிக்கை விடுக்கப்பட்டதும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறித்த வேலைத் திட்டத்தை வடக்கு மரகாண சபையின் நிதியில் ஒதுக்கிச் செய்ய வேண்டியதுதானே என்று கூறினார். அதன் பின்னர் இந்த விடயம் தொடர்பில் பெரும் சர்ச்சை வெடித்தது.
அதையடுத்து நீர்ப்பாசனத் திணைக்களம் வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் கீழ் வருவதால், அதன் செயலர் விளக்கமளித்தார். "எமக்கு 30 மில்லியன் மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் பெரிய திட்டங்கள் எவையும் மேற்கொள்ள முடியாது. அந்நிதியில் குளங்களின் பராமரிப்புக்கே நிதி ஒதுக்கீடு செய்ய முடியும். தொண்டமனாறு நீரேரியின் தடுப்பணைகளை புனரமைப்பதற்கு அந்த நிதி போதாது. நாம் மத்திய அரசையே நம்பியிருக்க வேண்டிய நிலை இருக்கின்றது" - என்று அவர் தெரிவித்தார். (ற-5)

# முடிவுகள் எட்டப்படாது முடிந்தது கூட்டம்; அடுத்த மாதமும் மீண்டும் கூடுகின்றனர்

யாழ்ப்பாணம், ஏப்.22
நேற்று நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முடிவுகள் எவையும் எடுக்கப்படாது முடிவுற்றது.
அதையடுத்து அடுத்த மாதம் 26, 27 ஆம் திகதிகளுக்கு கூட்டம் ஒத்திவைக்கப்படுகின்றது என்று இணைத் தலைவர்களான வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவணாந்தா ஆகியோர் அறிவித்தனர்.
நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், முதன்முறையாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் இணைத்தலைமையில் நடைபெற்றது.
இந்தக் கூட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, க.சுரேஷ் பிரேமச்சந்திரன், சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், அ.விநாயகமூர்த்தி மற்றும் ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன், ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வஸ்திரி அலென்ரின் ஆகியோர் வந்திருந்தனர்.
அத்துடன் வடக்கு மாகாண அமைச்சர்கள் நான்கு பேரும், வடக்குமாகாண சபையின்யாழ். மாவட்ட உறுப்பினர்களுடன், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், எதிர்கட்சித் தலைவர்கள், பிரதேச செயலாளர் கள், உள்ளூராட்சி மன்றங்க ளின் செயலாளர்கள், திணைக் களத் தலைவர்கள் ஆகியோ ரும் பங்கெடுத்திருந்தனர்.
கூட்டத்தில் கடும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. அதனால் எந்த முக்கிய முடிவுகளும் எடுக்கப்படவில்லை. அதனையடுத்தே இணைத் தலைவர்கள் அடுத்த மாதத்துக்கு கூட்டத்தை ஒத்திவைத்ததுடன், எஞ்சிய விடயங்களை அப்போது ஆராய்வது என்றும் அறிவித்தனர். (ற-5)

# குத்தல் பேச்சுக்கள், காரசாரமான விவாதங்கள்; பயனற்று முடிந்தது ஒருங்கிணைப்பு குழு கூட்டம்

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைமையில் முதன் முறையாக இடம்பெற்ற போதும், நேற்றைய கூட்டத்தில் பயனுள்ள எந்தவொரு முடிவும் எட்டப்படவில்லை. அபிவிருத்தித் திட்டங்களும் ஆராயப்படவில்லை. மாறாக குத்தல் பேச்சுக்களும், காரசாரமான விவாதங்களுடனுமே நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முடிவுக்கு வந்தது.
யாழ்.மாவட்டத்தின் இந்த ஆண்டுக்குரிய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது. முதன் முறையாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இணைத் தலைமை தாங்கினர். கூட்டம் காலை 9.45 மணியளவில் ஆரம்பமானது. யாழ்.மாவட்ட அரச அதிபரும், ஒருங்கிணைப்புக் குழுவின் செயலாளருமான சுந்தரம் அருமைநாயகம் வரவேற்புரையுடன் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.
அரச அதிபர் தனது வரவேற்புரையில் மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பில் சாராம்சமாகத் தெரிவித்தார். இதன் பின்னர் இணைத் தலைவர்களுள் ஒருவரான முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் உரையாற்றினார்.
காரசாரமான உரையின் நடுவில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை தம்பி என்றும் விளித்துப் பேசினார். அவரது உரை முடியவும் மின்சாரம் நிற்கவும் சரியாக இருந்தது.
இதனால் அவையில் சிறிது சலசலப்பு ஏற்பட்டது. இதன் பின்னர் மற்றொரு இணைத் தலைவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றும் போது, முதலமைச்சர் இதை அரசியல் மேடையாக்கிவிட்டார் என்ற குற்றசாட்டை முன்வைத்தார். தான் இங்கு வைத்து பதில் சொல்லப்போவதில்லை என்றும்பின்வாங்கினார். இதன்பின்னர் நிகழ்ச்சி நிரலுக்குள் செல்லாம் என்றார்.
இதன் போது குறுக்கிட்டார் மாவை. சேனாதிராசா. இந்தக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் முக்கிய விடயங்கள் மூன்று உள்ளடக்கப்படவில்லைஎன்றார். அனர்த்தம், மணல் அகழ்வு, மீள்குடியமர்வு தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார். இதற்கு டக்ளஸ் வேறு விடயங்கள் என்று குறிப்பிட்டதிற்குள் ஆராயலாம் என்றார். அதற்கு மாவை எம்.பி. இது இறுதியாக ஆராயப்பட வேண்டிய விடயமல்ல என்று விடாப்பிடியாக நின்றார்.
இறுதியில் டக்ளஸ், தவறு நடந்திருக்கலாம் என்று சமாளித்து அடுத்த விடயத்துக்குள் நகர்ந்தார். இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் மீள் குடியேற்றம் முக்கியமான விடயம். அதைப் பற்றிக் குறிப்பிடாதது மிகப் பெரிய பிழை என்று சேம் சைட் கோலை ஆரம்பத்திலேயே அடித்தார்.




ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் சில காட்சிகள்...

இதன் பின்பு கடந்த கூட்ட அறிக்கையும், அதில் உள்ள விடயங்களும் பற்றி ஆராயப்பட்டது. இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குறுக்கிட்டார். இதற்கு டக்ளஸ் உங்களுக்கு அறிக்கை கிடைச்சுதோ என்று கேட்க, கிடைச்சதால தான் படிச்சுப் போட்டு வந்து கேள்வி கேட்கிறன் என்று கறாராகப் பதிலளித்தார்.
இதன் பின்னர் அறிக்கையிலுள்ள பிழையைச் சுட்டிக்காட்டினார். கடந்த கூட்ட அறிக்கையில் அமைச்சர், பாரம்பரிய கைத்தொழில்கள் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு என்று இருக்கின்றது. அமைச்சு என்று குறிப்பிட முடியாது, அமைச்சர் என்று மாத்திரம்தான் குறிப்பிட முடியும் என்றார். அதற்கு டக்ளஸும் தலையசைத்துக் கொண்டுமுட்டை என்று சொல்ல முடியாது என்றார் நக்கலாக. (கடந்த 2012 ஆம் ஆண்டு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முட்டையில் மயிர் புடுங்கிற மாதிரி கேள்வி கேட்க வேண்டாம் என்று சுமந்திரனைப் பார்த்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது). அதுக்கு சுமந்திரன் முட்டை உங்கட முகத்துக்குத்தான் வரும் என்று பதிலளித்து விட்டு அடுத்த விடயத்தை சுட்டிக்காட்டப் போனார்.
அதற்கிடையில் அரச அதிபர் எடுத்துக் கொடுத்த திருத்தத்தைக் கொண்டு அமைச்சர் டக்ளஸ், அமைச்சர் என்று குறிப்பிட்டு இறுதியில் அமைச்சு என்று குறிப்பிட்டிருப்பது சரியானது தான் என்று வாதாடினார். கடைசியில் சுமந்திரன் நீங்கள் வச்சுக் கொள்ள விரும்பினா அப்பிடியே வைச்சுக் கொள்ளுங் கள் என்று சொல்லி விட்டு அடுத்த விடயத்துக்கு தாவினார்.
கடந்த கூட்ட அறிக்கை தொடர்பில் சர்ச்சை தொடங்கியது. ஒரு கூட்டம் ஒத்தி வைத்து ஒத்தி வைத்து நடந்தால் அதன் எல்லாக் கூட்டங்களிலும் சொல்லப்பட்டவற்றை வைத்தே அறிக்கையில் குறிப்பிட வேண்டும் என்று சொன்னார்.
இதன் பின்னர் மாகாணசபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம்கடந்த கூட்ட அறிக்கை தொடர்பில் நடந்தவற்றைக் கேட்க மீண்டும் சர்ச்சை தொடங்கியது. கடந்த கூட்ட அறிக்கையில், பிரதம செயலாளர் முதலமைச்சருக்கு தெரியப்படுத்துவார் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. பிரதம செயலாளர் அதனை முதலமைச்சருக்குத் தெரியப்படுத்தினாரா? என்று கேள்வியைத் தொடுத்தார்.
இதன் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதை நாங்கள் முதலமைச்சரிட்ட கேட்பம் என்று சொல்ல, நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், முதல்ல பிரதம செயலாளர் சொல்லட்டும்., அதுக்குப் பிறகு முதலமைச்சரிட்ட போவம் என்று சொன்னார். அதற்கு டக்ளஸ் தேவானந்தாவோ உடன்படுவதாகவில்லை. நடாளுமன்ற உறுப்பினர்களும் விடவில்லை. இறுதியில் பிரதம செயலாளர், குறித்த விடயம் வடக்கு மாகாண அமைச்சரவையில் தெரியப்படுத்தப்பட்டதாகச் சொன்னார்.
இதன் பின்னர் அமைச்சர் டக்ளஸ், சரி இப்ப முதலமைச்சரிட்ட கேட்பம் என்று சொல்ல, முதலமைச்சர், அமைச்சரவை சொல்லியிருந்தா அது அந்தக் கூட்டத்து அறிக்கையில இருக்கும். அதை எடுத்துப் பார்ப்பம் என்று சொல்லி முடிவுக்குக் கொண்டு வந்தார்.

(தொடரும்...)

## 100 ஏக்கரில் பூநகரியில் மரமுந்திரிகை செய்கை



கோப்புப் படம்

பூநகரி, ஏப்.22
பூநகரியில் இவ்வாண்டு 100 ஏக்கரில் மர முந்திரிகைச் செய்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.
2013ஆம் ஆண்டு மரமுந்திரிகை மீள் நடுகை ஆரம்பிக்கப்பட்டது.
கிளிநொச்சி மாவட்ட பளை பிரதேசத்தில் 20 ஏக்கர்களிலும் பூநகரிப் பிரதேசத்தில் 100 ஏக்கர்களிலும் மர முந்திரிகைச் செய்கை மேற் கொள்ளப்பட்டது.
இவ்வாண்டு பூநகரி பிரதேச செயலர் பிரிவில் மேலும் 100 ஏக்கரில் மரமுந்திரிகைச் செய்கை இடம்பெறவுள்ளது.
பூநகரி ஜெயபுரம் கிராம மக்கள் மர முந்திரிகைப் பண்ணை ஒன்றை உருவாக்கி வேலை வாய்ப்பை வழங்குங்கள் என்று நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்துவரும் நிலையில் பூநகரியில் பண்ணை முறையில் அல்லது மர முந்திரிகைச் செய்கையை அதிகரிப்பதால் மட்டும் தொழில் வாய்ப்பை ஏற்படுத்த முடியாது என்று தெரிவிக்கப்படுகிறது. (வ-18)

# 50 வீட்டுத் திட்ட மக்களுக்கு அடிப்படை வசதிகள் இல்லை

## உ-யிலங்குளத்தில் அவலம்

கிளிநொச்சி, ஏப்.22
துணுக்காய், உயிலங்குளம், ஐம்பது வீட்டுத் திட்டத்தில் வசித்து வரும் குடும்பங்கள் தமக்கான குடிதண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்றி வசித்து வருகின்றன.
முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள உயிலங்குளம் ஐம்பது வீட்டுத்திட்டத்தில் வசித்து வரும் இந்தக் குடும்பங்கள் தற்போது குடிதண்ணீர் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
குறித்த மாதிரி குடியிருப்பு திட்டத்தில் குடிதண்ணீருக்காக அமைக்கப்பட்ட கிணறுகள் நீரின்றிக் காணப்படுகின்றன. அத்துடன் குடிதண்ணீர்த் தேவைக்கு அமைக்கப்பட்ட இரு குழாய்க் கிணறுகளில் இருந்தே குடிதண்ணீரைப் பெற வேண்டி உள்ளது.
குடியிருப்பு வீதிகள் பயணிக்கக் கூடிய வகையில் இல்லை என்றும் மின்சார வசதிகள் எவையும் ஏற்படுத்தப்பட வில்லையெனவும் தெரி வித் துள்ள இப்பகுதி மக்கள் அங்குள்ள பாடசாலை மாணவர் கள் தினமும் பத்து கிலோ மீற்றர் தூரம் பாடசாலைக்குச் சென்று திரும்ப வேண்டியநிலையும் நிலவு கிறது என்றுதெரிவித்துள்ளனர்.
எனவே தமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு அந்தப் பகுதி மக்கள் தொடர்ந்தும் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-55)



குன்றும் குழியுமாகக் காணப்படும் வீதி

# நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி மாநகர சபைப் பணியாளர் போராட்டம்

## ஆளுநர் அலுவலகம் முன்பாக

யாழ்ப்பாணம், ஏப்.22
யாழ்.மாநகர சபையில் வேலைப் பகுதி மற்றும் சுகாதாரப் பகுதியைச் சேர்ந்த 113 பேர் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி யாழ்.கச்சேரிப் பகுதியில் உள்ள வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக நேற்றுக் காலை முதல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
"சுமார் 8 தொடக்கம் 9 வருடங்கள் வரை மாநகர சபையில் பணியாற்றிய எமக்கு ஏன் இன்னும் நியமனம் வழங்கப்படவில்லை?. எமக்குப் பின்னர் வந்த பலருக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
அவர்களை விட பலவருடங்கள் அதிகமாகப் பணியாற்றிய எமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும். எவ்வளவு காலம் எம்மை ஏமாற்றப் போகிறீர்கள்"- என்று கூறினார் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்.
வேலைப் பகுதியைச் சேர்ந்த 71 பேரும் சுகாதாரப் பகுதியைச் சேர்ந்த 42 பேருமே போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் 'ஆணையாளரே நாம் கேட்பது சலுகையல்ல எமது உரிமை', 'நாங்கள் அனைவரும் இலங்கையில் வாழத் தகுதி யற்றவர்களா?', 'ஆயிரத்து 500 நாள்களுக்கு மேல் வேலைசெய்த நாம் நியமனத்துக்குத் தகுதியில்லாதவர்களா?', "ஆணையாளரே மூப்பு அடிப்படையில் நியமனத்தைத் தாருங்கள்', 'ஆளுநர் அனுமதி வழங்கியும் ஏன் எமக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை?', 'யாழ்.மாநகர சபை நிர்வாகமே எம்மையும் மனிதராக மதியுங்கள்' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளைக் தாங்கியிருந்தனர்.
"கடந்த செப்ரம்பர் மாதம் தொடக்கம் நாம் பணியிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளோம். அதே மாதத்தில் 20 ஆம் திகதியன்று நாம் அனைவரும் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டோம். அப்போது எமக்கு நியமனம் வழங்கப்படும் என்று மாநகர சபையினர் கூறினர். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனால் கடந்த நவம்பர் மாதம் மீண்டும் போராட்டம் நடத்தினோம்.

**கடந்த செப்ரம்பர் மாதம் தொடக்கம் நாம் பணியிலிருந்து இடை நிறுத்தப் பட்டுள்ளோம். அதே மாதத்தில் 20 ஆம் திகதியன்று நாம் அனைவரும் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டோம். அப்போது எமக்கு நியமனம் வழங்கப் படும் என்று மாநகர சபையினர் கூறினர்.**

அதனால் கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி நேர்முகப் பரீட்சை இடம்பெற்றது. நியமனம் வழங்கப்படும் என்று ஆணையாளர் கூறியிருந்தார். அவ்வாறு பல ஆணையாளர்கள் மாறிவிட்டனர். ஆனால் இன்னும் எமது பிரச்சினை தீர்த்து வைக்கப்படவில்லை.
2014 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி நிரந்தர நியமனம் வழங்குவதாக கடந்த வருடம் மாநகர முதல்வர் கூறியிருந்தார். ஆனால் நான்கு மாதங்கள் நிறைவடையவுள்ள நிலையில் ஆளுநர் கூறியதோ மாநகர முதல்வர் கூறியதோ எதுவும் நடக்கவில்லை. வாய்ப் பேச்சுக்கு மாத்திரமே.
நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு நியமனம் வழங்குவதாக ஆளுநர் அனுமதி வழங்கியிருந்தார். 5 மாதங்க ளாகிவிட்டபோதும் அது ஏன் இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை"- என்று வேதனையோடு தெரிவித்தனர் போராட்டத்தில் ஈடுபட்ட பணியாளர்கள். (ற-14)

## கர்ப்பிணியைத் தாக்கிய மாமி, கணவனுக்கு பிணை அனுமதி

தென்மராட்சி, ஏப். 22
நிறை மாதக் கர்ப்பிணிப் பெண்ணைத் தாக்கிய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அக்கர்ப்பிணிப் பெண்ணின் கணவனது தாய் மற்றும் அப் பெண்ணின் கணவன் ஆகியோரை சாவகச்சேரி நீதி மன்றம் பிணையில் செல்ல அனுமதி வழங்கியது.
கடந்த புதுவருடத்துக்கு மறுநாள் குறிப்பிட்ட கர்ப்பிணிப் பெண் அவரது கணவனாலும் மாமியாராலும் தாக்கப்பட்டதாகக் கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தாயும் மகனும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.
இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இருவரையும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள்பிணையில் செல் லுமாறு உத்தரவிடப்பட்டது. (வ-9)

**கர்ப்பிணிப் பெண்ணின் கணவனது தாய் மற்றும் அப் பெண்ணின் கணவன் ஆகி யோரை சாவகச்சேரி நீதி மன்றம் பிணையில் செல்ல அனுமதி வழங்கியது.**

## கொப்பறாவைத் திருடிய நெடுந்தீவு வாசிக்கு மறியல்

தென்மராட்சி, ஏப். 22
கொடிகாமம் நகரப் பகுதி வர்த்தக நிலையம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த 20 கிலோ கொப்பறாவைத் திருடிய நெடுந்தீவைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.
கொடிகாமம் பொலிஸாரால் குறித்த நபருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேக நபரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு உத்தரவிட்டார். (வ-9)

# விவசாயக் கடனை மீளச் செலுத்துவதற்கு இலகு தவணைகள் ஏற்படுத்தியமை வரவேற்கத்தக்கது

## கிளி. அரச அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப்.22
கிளிநொச்சி மாவட்டத்தில் இலங்கை வங்கியால் வழங்கப்பட்ட விவசாயக் கடன்களை மீளச்செலுத்துவதற்கு விவசாயிகளுக்கு இலகு தவணைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கின்றமை வரவேற்கத்தக்கது என்று மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.
கிளிநொச்சி மாவட்டத்தில் 2010 - 2013 வரையான காலப் பகுதிகளில் விவசாயிகளுக்கு வங்கிகளால் வழங்கப்பட்ட விவசாயக் கடன்கள் பெருமளவில் மீளச் செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ளன.
இதற்குக் காரணம் கடந்த 2012 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளப்பாதிப்பு மற்றும் 2013 இல் ஏற்பட்ட வறட்சியும் ஆகும்.
இந்த நிலையில் இலங்கை வங்கி, விவசாயிகளிடமிருந்து விவசாயக் கடன்களை அறவிடுவதற்கு பதிலாக வட்டி செலுத்துவதுடன் கடன்களை நான்கு கட்டங்களாக அறவிடுவதற்கும் முன்வந்துள்ளதை அடுத்து மாவட்ட அரச அதிபர் குறித்த வங்கியின் இச் செயற்பாடு வரவேற்கத்தக்க விடயம் என்றும், இலகு கடன் அடிப்படையில் (லீசிங்) வழங்கப்பட்ட விவசாய இயந்திரங்களை பறிமுதல் செய்வதையும் தவிர்க்குமாறு கேட்டிருந்தார். குறித்த வங்கி இது வரை அத்தகைய நடவடிக்கை எதனையும் கையாளவில்லை என்று வங்கி முகாமையாளர் தெரிவித்துள்ளார். இதே போன்று ஏனைய வங்கிகளும் விவசாயிகளிடமிருந்து கடன் நிலுவையை அறவிடுவதில் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது. (வ-55)

## மாகாண பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தி குறித்த செயலமர்வு

யாழ்ப்பாணம், ஏப்.22
வட மாகாண கல்வி அமைச்சு நடத்தும் மாகாண பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தி தொடர்பான கல்வி ஆலோசனை செயலமர்வு நாளை புதன்கிழமையும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் இடம்பெறும்.
வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தலைமையில் நடைபெறும் இந்தச் செயலமர்வுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் வலய, வகை ரீதியாக பாடசாலைகளின் அதிபர்களும் பெற்றோரும் மாணவர்களும் கல்வியிய லாளர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். (வ-9)

**செயலமர்வு நாளை புதன்கிழமையும் நாளை மறுதினம் வியாழக்கிழமை யும் காலை 8.30 மணி தொடக்கம் கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் இடம்பெறும்.**

## சுகாதாரப் பரிசோதகர் விவகாரம்; தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கை

*ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு*

வலி.வடக்கு, ஏப்.22

வட மாகாணத்தில் கடந்த நாற்பத்தைந்து நாள்களுக்கு மேலாக இடம் பெற்று வரும் சுகாதாரப் பாசோதகர்களின் பணிப்புறக்கணிப்புக் காரணமாக பல்வேறு சுகாதாரச் சீர்கேடுகளும், சட்ட விரோதமான செயல்களும் நடைபெற வாய்ப்புள்ளதால் அதனை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதையடுத்து அதற்கு தீர்வு காணும் நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டன.


தமது பிரச்சினை தொடர்பாக வட மாகாண முதலமைச்சர் சுகாதார அமைச்சர் மற்றும் பிரதேச சபைகளின் தவிசாளர்களுக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட தீர்மானத்தை உரிய முறையில் நடை முறைப்படுத்தாது வட மாகாண சுகாதார அமைச்சும் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களமும் இழுத்தடித்து வருகின்றன என்று குற்றச்சாட்டும் சுகாதாரப் பரிசோதகர்கள் தொடர்ச்சியாகப் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அது குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டதை அடுத்து வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரின் நடவடிக்கை பலத்த விமர்சனத்துக்கு உள்ளாகியதுடன், உடனடியாக வட மாகாண முதலமைச்சர் தரும் பணிப்புரைக்கு அமைவாக குறிப்பிட்ட பிரதேச சபைகளில் கடமையாற்றிய பொது சுகாதார பாசோதகர்களை உரிய பிரதேச சபைகளுடன் இணைக்கும் படியும் இரத்துச் செய்யப்பட்ட ஆளணி வெற்றிடங்களை மீள உருவாக்கவும் ஆளணியை நிரப்பவும் பாரம்பரிய கைத் தொழில்கள் அமைச்சர் நடவடிக்கை மேற்கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. உடனடியாக இது நடைமுறைக்கு வரும்படி செயற்படுத்தப்பட வேண்டும் என்றும் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

(ற-86)

# மீனவர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## இராமநாதபுரத்தில் ராகுல் உறுதி



ராகுல் காந்தி

இராமநாதபுரம், ஏப்.22

இலங்கைக் கடற்படையால் மீனவர்களுக்கு ஏற்படும் பிரச்சினையைத் தீர்க்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராமநாத புரத்தில் தேர்தல் பரப்புரையின்போது காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி உறுதியளித்தார்.

> " மீனவர்களுக்கு இலங்கை கடற்படையினரால் ஏற்படும் துன்பங்களை நான் அறிவேன். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

இராமநாதபுரத்தில் நேற்று காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து பரப்புரை மேற்கொண்டபோது இவ்வாறு கூறினார். இதன்போது அவர் மேலும் கூறுகையில்;

மீனவர்களுக்கு இலங்கை கடற்படையினரால் ஏற்படும் துன்பங்களை நான் அறிவேன். இந்த பிரச்சினையைத் தீர்க்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

நாடு முழுவதும் மதிய உணவுத் திட்டத்தை கொண்டு வந்தவர் காமராஜர். வறுமைக்கோட்டுக்கு கீழ் இருந்த 15 கோடி மக்களை ஏழ்மையில் இருந்து மீட்டுள்ளோம். வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா மிகவும் வளர்ச்சியடைந்துள்ளது. காங்கிரஸ் ஆட்சியில் உணவு பாதுகாப்பு, 100 நாள் வேலைத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. உணவு பாதுகாப்புச் சட்டத்தை காங்கிரஸ் அரசு கொண்டு வந்தது.

ஊழலை எப்படி ஒழிக்கப் போகிறார்கள் என்பது குறித்து எதிக்கட்சிகளின் தேர்தல் அறிக்கையில் இடம்பெறவில்லை.

முக்கிய 5 சட்டங்களை நிறைவேற்ற எதிர்க் கட்சிகள் முட்டுக்கட்டையாக உள்ளன. லோக்பால் பிரேரணையை நிறைவேற்ற எதிர்க் கட்சிகள் பல்வேறு தடைகள் ஏற்படுத்தின. அதையெல்லாம் தகர்த்து இந்த அரசு லோக் பால் பிரேரணையை நிறைவேற்றியது. மக்கள் விரும்பக்கூடிய அரசை தமிழகத்தில் கொண்டு வருவோம். மதசார்பற்ற அரசு அமைய நீங்கள் பாடுபட வேண்டும்"- என்றார்.

(வ)

## மரண அறிவித்தல்



திருமதி **கனகம்மா அருணாசலம்**

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

பாலவி தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த திருமதி கனகம்மா அருணாசலம் நேற்று (21.04.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

பாலவி தெற்கு, கொடிகாமம்.

## மரண அறிவித்தல்

**ஜெயபால் பெர்ணான்டோ அன்ரனி றெக்ஸ்**

(முன்னாள் குமுதினி பாமசி நெல்லியடி உரிமையாளர், குமுதினி பன்முக சேவை நிறைவேற்று பணிப்பாளர்)



வெற்றிலைக்கேணி வடக்கு, வடமராட்சி கிழக்கை பிறப்பிடமாகவும் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயபால் பெர்னாண்டோ அன்ரனி றெக்ஸ் நேற்று (21.04.2014) திங்கட்கிழமை அகாலமரணமானார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
குடும்பத்தினர்
077 3655257

R.C. லேன், சரஸ்வதி வித்தியாலய வீதி,
(கொடிகாம வீதி) கரவெட்டி

## மரண அறிவித்தல்



**சுப்புலட்சுமி உக்குபண்டா**

47 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், கந்தர்மடம் ஆத்திசூடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட உக்குபண்டா சுப்புலட்சுமி (22.04.2014) திங்கட்கிழமை காலமனார்.

அன்னார் காலஞ்சென்ற உக்குபண்டாவின் மனைவியும் ஜெகதாம்பாள், தனலட்சுமி காலஞ்சென்ற விஜயகுமார் மற்றும் சிவகுமார், ஜெயக்குமார் காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் சந்திரகுமார், பிறேமாவதி, பத்மாவதி, பாலகுமார், லீலாவதி ஆகியோரின் அன்புத்தாயும் தவவிநாயகம் காலஞ்சென்ற வினாயகமூர்த்தி மற்றும் லலிதா, மங்கயற்கரசி, பவாணி, மனோகரன், பத்மநாபன், சிவகுமாரி, குகேந்திரன் ஆகியோரின் அன்புமாமியும் ஜெகதீபன், பிரதீபன், பிரதீப், பிரதாப், பிரசன்னா, தயாவதி, தனரூபி, கவிதா, ராஜ்குமார், விஜிதா, சுகி, விவேகா, றோசினி, விதுசன், வினோ, விஜய், வரோணிகா ,தனுசியன், சரண்யா ,அபிசன், தனுசிகா ,யதுசிகா ஆகியோரின் பேர்த்தியும் பொன்சியா, ஜனனியா, லக்சியா, தர்சனா, தர்வின், ஜனா, கவினயா, ஜோதிகா, லோஜிகா, நிசாந்தன், சரவணன், சுரேசன், தனுசா, தர்சன், கம்சாயினி, அபிசான், சதுர்ஜன், லிதுசன், சகானா ஆகியோரின் பூட்டிம் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2014) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

NO.76, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## நெல், வெங்காய உற்பத்திகள் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஏப்.22

யாழ்.மாவட்டத்தில் நெல் மற்றும் வெங்காய உற்பத்திகள் வீழ்ச்சியடைந்துள்ளன என்று தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வரவேற்புரை நிகழ்த்தும் போது, துறைசார் அபிவிருத்திகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

போருக்குப் பின்னரான கடந்த 5 வருடங்களில் யாழ்.மாவட்டத்துக்கு 10 ஆயிரத்து 445 திட்டங்களுக்கு 88 ஆயிரத்து 661 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 2012 - 2013 பருவ காலம், 2013 - 2014 பருவகாலம் இரண்டிலுமே காலநிலை மாற்றத்தால் நெல் உற்பத்தி கடுமையான பாதிப்பைச் சந்தித்துள்ளது.

2012 - 2013 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் நெல் அறுவடைக் காலத்தில் பெருவெள்ளம் காரணமாகவும், 2013 - 2014 ஆம் ஆண்டு பருவகாலத்தில் மழையின்மையால் வறட்சி காரணமாகவும் அழிவுகள் ஏற்பட்டுள்ளன. சின்ன வெங்காய உற்பத்தியும் இவ்வாறானதொரு பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது. எனினும் உருளைக் கிழங்கு உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஆயிரத்து 275 மெற்றிக் தொன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அதில் பெரும் பாலானவற்றை சதொச நிறுவனம் கொள்வனவு செய்துள்ளது- என்று தெரிவித்தார் அரச அதிபர்.

அதேவேளை, கைத்தொழில் துறையில் யாழ். மாவட்டம் அபிவிருத்தியடைந்து வருகின்றது என்று கூறிய அரச அதிபர், யாழ்.மாவட்ட மீள் குடியமர்வு புள்ளிவிவரங்கள் தொடர்பில் தற்போதும் தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்தார். (ற-5)

## வேலையாள்கள் தேவை

1. முகாமையாளர் (45 வயதின் மேல்)
2. சப்ளையர் (முன்னனுபவம் விரும்பத்தக்கது)

**கோல்டன் ஸ்ரார் ரெஸ்ரோரன்ட்**

86/2. பருத்தித்துறை வீதி, யாழ்.(ஆரியகுளம் சந்திக்கருகில்) தொ.பே.: 0777404883

## உயிரியல் A/L 2014

* வினாவிடை வகுப்பு
* கடந்தகால வினாக்களும்
* எதிர்பார்ப்பு வினாக்களும்

ஆரம்பம் 23.04.2014 புதன் 3.30 பி.ப.

**ஆசிரியர் திரு M.M. அல்போன்ஸ்**

இடம் * SCIENCE CORNER
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

A/L 2015 , A/L 2016
என்பன நடைபெறுகின்றது.
தொடர்பு TP: 0776116724

## தொழிலாளர் தினத்தன்று வர்த்தக நிலையங்களை மூட அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஏப்.22

தொழிலாளர் தினமான அடுத்த மாதம் முதலாம் திகதி வர்த்தக நிலையங்களை மூடியும் வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் தொழிலாளர்களுக்கு முழுநாள் விடுமுறை வழங்கி தொழிலாளர் தினத்தின் நிகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வவுனியா வர்த்தக சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(வ-421)

## மரண அறிவித்தல்

**திருமதி செசிலியம்மா பொன்னையா அன்ரன்**



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் மத்தியூஸ் வீதி, சுண்டுக்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செசிலியம்மா பொன்னைய அன்ரன் நேற்று (21.04.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவல் - திரேசம்மா தம்பதியரின் அன்பு மகளும் பொன்னையா அன்ரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அலோசியஸ், மோகன் மற்றும் தங்கம், வசந்தன், றூபா, கில்டா (சுவிஸ்), நிக்சன், ராசா (முத்துமாரி நகை மாடம்) ஆகியோரின் அன்புத் தாயும் ராசு, தாசன், கண்ணதாசன், வவா, ஈசு, சாளினி ஆகியோரின் மாமியும் கிரேசாந், பிரசாந்த், ஜெனுசாந் (ஜேர்மனி), வபிலா, மிறோஜன் (பிரான்ஸ்), சவின்சலா, இந்து, துசாந்த், கஜன் (மலேசியா), சுஜீப், சரண்ராஜ், சரணியா, சுயானி (சுவிஸ்), சுஜித் (சுவிஸ்), சுயாத் (சுவிஸ்), சார்மி, ரெபேட், நிசானிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (23.04.2014) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து மண்டைதீவு புனித பேருதுவானவர் ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித பேருதுவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

63, மத்தியூஸ் வீதி,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.
0776184354

தகவல்:
குடும்பத்தினர்.

## இசை நிகழ்ச்சிக்கு சென்ற இளைஞர் கிணற்றில் தவறி விழுந்து சாவு

### கைபேசியில் உரையாடச் சென்ற வேளையில் விபரீதம்

வலி.வடக்கு, ஏப்.22

இசை நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்த இளைஞரொருவருக்கு தொலைபேசி அழைப்பொன்று கிடைத்ததையடுத்து, அவர் சற்றுத் தூரத்துக்கு அப்பால் சென்று தொலைபேசியில் உரையாட முயன்ற போது, அருகிலிருந்த கிணறொன்றில் எதிர்பாராத விதத்தில் தவறி வீழ்ந்து உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் புத்தாண்டையொட்டி சனிக்கிழமை இரவு இன்னிசை நிகழ்வொன்று நடந்தது.

அதில் கலந்து கொண்டிருந்த இணுவில் மேற்கைச் சேர்ந்த இளைஞர் மதிலுக்கு அப்பால் சென்று தனக்கு வந்த தொலைபேசிஅழைப்பை ஏற்றுகதைக்க முற்பட்டுள்ளார்.

அவ்வேளையிலேயே கல்லாக் கட்டுவன் பகுதி தோட்ட வெளியில்அமைந்திருந்த கிணற்றில் தவறுதலாக வீழ்ந்துவிட்டார் என்று கூறப் பட்டது.

உடனடியாக கூடச் சென்ற நண்பர்கள் அவரை கிணற்றில் இருந்து மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு சென்ற போதிலும், அவர் தலையில் அடிபட்டதால் உயிரிழக்க நேரிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்த அவர் இணுவில் மேற்கைச் சேர்ந்த கணேசலிங்கம் தர்சன் (வயது-20) என உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளார்கள். (ஒ-206)

## இனந்தெரியாத குழுவினரால் தாக்கப்பட்டவர் கொழும்புக்கு

வலி.வடக்கு, ஏப்.22

கடந்த சனிக்கிழமை நள்ளிரவு மல்லாகம் விசாலாட்சி பாடசாலை முன்றலில் வைத்து இனம் தெரியாதவர்களின் தாக்குதலில் படுகாயமுற்று யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு இருந்த தவனேஸ்வரன் நிருபன் (வயது-30) கோமா நிலையில் ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் மேலதிக சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

சுன்னாகம் வடக்கு மயிலணியைச் சேர்ந்த இவர் ஒரு பிள்ளையின் தந்தையாவார்.

அவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கான காரணம் என்னவென்பது தெரியவராத நிலையில் குறிப்பிட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் யாரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை என்று தெரிய வருகின்றது.

இதேவேளை தெல்லிப்பழை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-86)



வலி.மேற்குப் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட செட்டியாமடம், துணைவிச் சந்தியை இணைக்கும் ஏறத் தாழ 1.5 மீற்றர் நீளமான வீதி புனரமைக்கப்பட்டுள்ளது. இந்த வீதி பெருமளவு பொதுமக்களின் பயன்பாட்டுக்கு அதிகமாகப் பயன்படுத்தப்படும் அதேவேளை, விவசாய நடவடிக்கைகளுக்கு அவசியமான ஒன்றாகவும் உள்ளது. அண்மையில் இவ்வீதி புனரமைக்கப்பட்டமை பொதுமக்களுக்கு பெருமளவில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஒ)

# அல்லைப்பிட்டியில் இம்முறை விவசாய நடவடிக்கை பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.22

அல்லைப்பிட்டியில் இம்முறை விவசாய நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வழமையாக நூற்று ஐம்பதுக்கும் அதிகமான ஏக்கர்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுவந்தபோதும் இம் முறை ஒரு ஏக்கரில் கூட நெல் உற்பத்தி செய்ய விவசாயிகள் முன் வரவில்லை என்றும் விவசாயி ஒருவர் குறிப்பிட்டார். விவசாயிகள் வெங்காயம், மரவள்ளி உற்பத்தியில் கவ னம் செலுத்தியிருந்தனர். ஆனால் அதிகரித்த வெப்பம் காரணமாகவும், மழையின்மையாலும் அவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

அதனால் பெரும்பாலான தோட்டங்கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

அல்லைப்பிட்டியில் நல்ல தண்ணீர் இருந்த போதும் கிணறுகளில் நீர் மட்டம் குறைந்துள்ளதால் எரிபொருள் செலவு காரணமாக நீரிறைக்க முடியாத நிலையில் தாம் தோட்டச் செய்கைகளைக் கைவிட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் கூறுகின்றனர். (வ-7)

### வேலணை பிரதேச சபைக்குட்பட்ட 7 வீதிகளுக்கு விமோசனம்

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட ஏழு வீதிகள் புனரமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அல்லைப்பிட்டி சாமிக்கட்டு வீதி, வேலணை செட்டிபுலம் முருகன் கோவில் வீதி, மொங்கானைப்புலம் குறுக்கு வீதி, வேலணை அண்ணமார் வீதி, சரவணை கலைமகள் வீதி, நயினாதீவு கிழக்கு கடற்கரை வீதி, மண்டைதீவு கொண்டனம் வீதி ஆகியவையே புனரமைக்கப்படவுள்ள வீதிகளாகும். ரூபா 45 மில்லியன் ரூபா செலவில் அவை புனரமைக்கப்படவுள்ளன. (வ-7)



## 40 வருடங்களாக திருத்தப்படாத அல்லைப்பிட்டி- மண்டைதீவு வீதி

யாழ்ப்பாணம், ஏப்.22

அல்லைப்பிட்டி மண்டைதீவு இணைப்பு வீதி கடந்த 40 வருடங்களாக திருத்தத்துக்கு உட்படுத்தப்படவில்லை. அல்லைப்பிட்டிஅலுமினியம்தொழிற்சாலை வீதியும் நீண்டகாலம் புனரமைக்கப்படவில்லை. எனவே குறித்த இரு வீதிகளையும் மக்கள் போக்குவரத்துக்கு வசதியாக உடன், திருத்தியமைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். பல தடவைகள் இது தொடர்பாகக் கோரிக்கை விடுக்கப்பட்டும் இதுவரை தமது கோரிக்கைகள் கவனிக்கப்படாதிருப்பதாகவும் அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-7)

## விளையாட்டு மைதானத்தில் மதுப்பிரியர்கள் அட்டகாசம்


தென்மராட்சி, ஏப்.22

மதுபோதையில் வந்தவர்களால் விளையாட்டு மைதானத்தில் பொருத்தப்பட்டிருந்த மின் குமிழ்கள் உடைக்கப்பட்டு பந்தாட்ட வலையும் அறுத்தெறி யப்பட்டது. அதனைத் தடுக்கச் சென்ற குடும்பஸ்தர் மீது வாள் வெட்டு நடத்தப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு மீசாலை வடக்கில் இடம் பெற்றது. குறித்த பகுதியில்உள்ள சுடர் ஒளி விளையாட்டுக்கழக மைதானத்திலிருந்த கரப்பந்தாட்ட வலையும் மின் சாதனங்களுமே அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

> சுடர் ஒளி விளையாட்டுக்கழக மைதானத்திலிருந்த கரப் பந்தாட்ட வலையும் மின் சாதனங்களுமே அடித்து நொருக்கப் பட்டுள்ளன.

வாள்வெட்டுக்கு இலக்கான இதே இடத்தைச் சேர்ந்த சின்னராஜா சிவானந்தமூர்த்தி (வயது-34 ) என்பவர் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (வ-9)

### மேலும் ஒரு தொகுதி சின்ன வெங்காய உண்மை விதை



கோப்புப்படம்

யாழ்ப்பாணம், ஏப்.22

யாழ்.குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் மேலும் ஒரு தொகுதி சின்ன வெங்காய உண்மை விதைகளைத் தருவித்து விவசாயிகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

உண்மை விதை வந்து சேர்ந்ததும் இந்த வார இறுதி யில் விவசாயிகளுக்கு அவற்றை விநியோகிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகச் சங்கத்தின் பொது முகாமையாளர் ரி.ரவிமயூரன் தெரிவித்தார்.

சின்ன வெங்காய உண்மை விதைகள் விவசாயிகளுக்கு நியாய விலையில் விநியோகிக்கப்படும்.

உண்மை விதைகளைப் பெறுவதற்கு ஏற்கனவே பதிவுகளை மேற்கொண்டோருக்கு முன்னுரிமை அடிப்படையில் அவை வழங்கப்படும் என்று அவர் மேலும் கூறினார். (வ-17)

# அமைச்சரின் வருகைக்காக புனரமைக்கப்படும் வீதி

நெல்லியடி, ஏப்.22

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்குச் செல்லும் வீதி அமைச்சரின் வருகைக்காக அவசர அவசரமாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை விக்னேஸ்வராக் கல்லூரியின் புதிய கட்டடத் திறப்பு விழாவுக்கு பிரதம விருந்தினராக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன கலந்துகொள்ளவுள்ளார். அதனாலேயே அவசர அவசரமாக தற்போது குறித்த வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது.

> பல மாதங்களாக இந்த வீதியைப் புனரமைப்பதற்கான கற்கள் வீதியோரத்தில் குவிக் கப்பட்டிருந்த போதிலும் அதன் அபிவிருத்தி வேலைகள் நடைபெறவில்லை.

அந்த வீதியைப் புனரமைக்குமாறு பல தடவை மக்கள் கோரிக்கை விடுத்தும் புனரமைக்கப்படவில்லை.

பல மாதங்களாக இந்த வீதியைப் புனரமைப்பதற் கான கற்கள் வீதியோரத்தில் குவிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் அபிவிருத்தி வேலைகள் நடைபெறவில்லை.

ஆனால் தற்போது கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன வருகை தருவதற்காக புனரமைப்புப் பணிகள் நடைபெறுகின்றன. மக்கள் குன்றும் குழியுமாக இருக்கும் குறித்த வீதியால் தினமும் பயணிக்கும் போது இல்லாத அக்கறை தற்போது அமைச்சரது வருகைக்கு மட்டும் வழங்கப்படுவது ஏன் என்றும் அந்தப் பகுதி மக்கள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

அதே போல் கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் கரவெட்டி இராஜ கிராமத்திலுள்ள பௌத்த கோயிலுக்கு தென்னிலங்கை மக்கள் வந்து போவதற்காக அந்தச் சிறு வீதி திருத்தப்பட்டது. மக்களின் பாவனைக்கு மிகவும் அத்தியாவசியமாக இருக்கும் பல வீதிகளைத் திருத்தாது ஒரு சிலரின் நலனுக்காக, இவர்களின் செயற்பாடுகளை வேஷம் போட்டுக் காட்டுவதற்காக வேலைகள் நடைபெறுவதாகவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

எனவே அமைச்சர்கள் வருகை தரும் இடங்களை மாத்திரம் கவனத்தில் கொள்ளாது, மக்களின் தேவைகளையும் கருத்தில் கொண்டு செயற்படுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-422)

# மோடி கொலைகாரராம்


பென்னி பிரசாத் வர்மா

லக்னோ.ஏப் 22

நரேந்திர மோடி ஒரு கொலைகாரர் என காங்கிரஸ் தலைவரும், மத்திய அமைச்சருமான பென்னி பிரசாத் வர்மா கூறியிருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து லக்னோவில் அவர் பேசுகையில், மோடி தனது 18ஆவது வயதிலேயே கொலை செய்துவிட்டு வீட்டைவிட்டு ஓடி வந்துவிட்டதாக கூறினார்.

இந்நிலையில், பென்னியின் கருத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் நிர்மலா சீதாராமன், காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரசாரம் மிகவும் கீழ்த்தரமாகப் போய்விட்டதை வர்மாவின் குற்றச்சாட்டுகள் காட்டுவதாகவும், ஒவ்வொரு தேர்தல் பிரசாரத்திலும் அவர் இவ்வாறு திரும்ப திரும்ப குற்றங்களைச் செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், பென்னியின் குற்றச்சாட்டுக்கள் கேவலமானதும், அடிப்படை ஆதாரமற்றதும் ஆகும். பென்னி தனது பேச்சில் தெரிவித்துள்ள சர்ச்சைக்குரிய இந்தக் கருத்தை காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொள்ளுமா? என்பதைத் தெரிவிக்க வேண்டும். காங்கிரசின் அடித்தளம் ஆட்டம் கண்டு கொண்டிருக்கிறது. தேர்தல் நெருங்க நெருங்க அவர்களது பலவீனமும், விரக்தியும் அதிகரித்து வருகிறது என்றார்.

ஏற்கனவே, நரேந்திர மோடியை ஆர்.எஸ்.எஸ்ஸின் மிகப்பெரிய ரவுடி என்று அழைத்ததற்காகப் பென்னி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (து)


ராஷ்ட்ரிய ஆம் கட்சி தலைவரும் நடிகையுமான ராக்கி ஷெராவத் மும்பையில் ஓட்டோவில் சென்று தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார். (து)


நரேந்திர மோடி

## ஹேம மாலினியை ஆதரித்து மோடி சூறாவளி பிரசாரம்

புதுடில்லி,ஏப் 22

உத்தரப்பிரதேசத்தில் உள்ள மதுரா தொகுதியில் போட்டியிடும் பொலிவுட்டின் கனவுக் கன்னி என்றழைக்கப்பட்ட நடிகை ஹேம மாலினியை ஆதரித்து பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி நேற்று பிரசாரம் செய்தார்.

மதுரா தொகுதிக்குட்பட்ட 2 பகுதிகளில் நடைபெற்ற பிரசாரக் கூட்டங்களில் ஹேம மாலினியை ஆதரித்து பேசிய அவர், நேற்று ஒரே நாளில் ஹர்டோய், இட்டா, ஹத்ராஸ், பிரோசாபாத் ஆகிய மேலும் 4 நாடாளுமன்ற தொகுதிகளில் நடைபெற்ற பிரசாரக் கூட்டங்களில் பா.ஜ.க. வேட்பாளர்களை ஆதரித்தும் பேசினார். (து)

# அ.தி.மு.க. இல்லாவிட்டால் இன்று தே.மு.தி.க. இல்லை

## பண்ருட்டி ராமச்சந்திரன் கூறுகிறார்

சென்னை,ஏப் 22

அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்திருக்காமல் இருந்தால் இன்று தே.மு.தி.க. என்ற கட்சி இருந்திருக்காது என்று பண்ருட்டி ராமச்சந்திரன் கூறியுள்ளார்.

பெண்ணாடத்தில் கடலூர் அ.தி.மு.க. வேட்பாளர் அருண்மொழிதேவனை ஆதரித்து பண்ருட்டி ராமச்சந்திரன் பிரசாரம் செய்தார்.

அப்போது அவர் பேசியதாவது:

தமிழ்நாட்டில் உள்ள சில அரசியல் கட்சிகள் மக்களை குழப்புவதற்காக நடைபெறும் தேர்தலை உள்ளாட்சித் தேர்தல் போல் பேசிவருகின்றனர். அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்திருக்காமல் இருந்தால் இன்று தே.மு.தி.க. என்ற கட்சி இருந்திருக்காது.

இந்தக் கட்சிக்கு ஓர் அந்தஸ்தைப் பெற்று தந்தவர் ஜெயலலிதா. தே.மு.தி.கவால் நாட்டு மக்களுக்கு எதையும் சாதிக்க முடியாது என உணர்ந்துதான் நான் சட்டமன்ற உறுப்பினர் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு கட்சியை விட்டு வெளியேறினேன்.

நாட்டு மக்களின் நலனே முக்கியம் எனச் செயல்படுபவர் ஜெயலலிதா.நாடு முழுவதும் மூத்த தலைவர்கள் ஜெயலலிதாவை எதிர்பார்த்து இருக்கின்றனர். விலைவாசியைக் குறைக்கும் அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை என ஸ்ராலின் பேசுகிறார். இன்று 47 கோடி மக்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். நாட்டில் மூன்றில் ஒரு பங்கு தீவிரவாதிகளின் கையில் இருக்கிறது.பசி என்றால் என்ன என்று எனக்கு தெரியும் என்று கூறித் தான் எம்.ஜி.ஆர். செயல்பட்டார். ஏழை மக்களின் கஷ்டத்தை உணர்ந்து அவர்களின் மேன்மைக்காகப் பாடுபட்டவர் எம்.ஜி.ஆர்.


பண்ருட்டி ராமச்சந்திரன்

இன்று டெல்லியை பற்றி பேசி முடிவெடுக்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். காங்கிரஸ் வெற்றி பெறாது. பா.ஜ.க. முழு பெரும்பான்மையை பெறாது. யார் ஆட்சிக்கு வருவார் என்ற தெளிவற்ற நிலை உள்ளது. அதனால்தான் ஜெயலலிதா அணி சேராத கொள்கையை எடுத்துள்ளார். தேர்தல் முடிந்தவுடன் எத்தகைய அரசு அமையவேண்டும் என்பதை முடிவுசெய்யவேண்டிய வாய்ப்பு கிடைத்துள்ளது. இதை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மோடிக்கு நாடாளுமன்ற அனுபவமே இல்லை. ஜெயலலிதாவுக்கு நாடாளுமன்ற அனுபவமும் உண்டு. மாநில ஆட்சி அனுபவமும் உண்டு - என்றார். (து)

# வயதை மறைத்த பேஸ்புக் காதலியை சுட்டுக் கொலை செய்தாராம் காதலன்

## உத்தரப்பிரதேசத்தில் சம்பவம்

புதுடில்லி,ஏப் 22

இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் வயதை மறைத்த பேஸ்புக் காதலியை காதலன் சுட்டுக் கொலை செய்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த வினித்குமார் (வயது 24) மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த ஜோதி கோரியை பேஸ்புக் மூலம் காதலித்துள்ளார். ஜோதி கோரி (வயது 44) தன் வயதை மறைத்து காதலித்ததால் ஆத்திரமடைந்த வினித்குமார் காதலியைச் சுட்டுக் கொலை செய்ததுடன், தானும் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

மத்தியப் பிரதேச மாநிலம் ஜபல்பூரில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி, உயிருக்கு போராடிய நிலையில் கிடந்துள்ளார். அவர் அருகே நடுத்தர வயது பெண் ஒருவர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த நிலையில் கிடந்துள்ளார்.

குறித்த இளைஞன் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

அவர் உயிரிழப்பதற்கு முன்பதாக அளித்த வாக்குமூலத்தில் எனது பேஸ்புக் காதலிக்கு 44 வயது. மணமாகி மூன்று குழந்தைகள் உள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், இருவரினதும் பேஸ்புக் கணக்குகள் மூலம் மேலதிக தகவல்களை உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஜோதி தனது வயது 22 என பேஸ்புக்கில் குறிப்பிட்டுள்ளார். எனினும் வினித்திற்கு உண்மையான வயது தெரியவந்தமை கொலைக்கான காரணம் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சுமார் 2 வருடங்களுக்கு முன் பேஸ்புக்கில் உருவான நட்பு காதலாக மாறியது. ஜோதியை நேரில் சந்திக்க விரும்பிய வினித், கடந்த புதன்கிழமை ஜபல்பூர் சென்றுள்ளார். வெள்ளிக்கிழமை காலை ஜபல்பூர் ரயில் நிலையத்தில் இருந்து ஜோதிக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளார்.

இருவரும் பேடாகாட்டின் மலை உச்சியில் சந்தித்துள்ளனர். இந்த சந்தர்ப்பத்தில் தன்னிடம் இருந்த துப்பாக்கி மூலம் வினித் ஜோதியை சுட்டுக் கொலை செய்துள்ளார்.

ஜோதிக்கு அவரது கணவருடன் பிரச்சினை எதுவும் இல்லையெனவும், ஜோதிக்கு வீட்டில் பயன்படுத்த அவரது கணவர் மடிக் கணினி ஒன்றை பரிசளித்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (து)


பேரணியில் ஈடுபட்டோர்.

# அனுமதியின்றி பேரணி சென்ற பா.ஜ.க. வாகனங்கள் பறிமுதல்

சிதம்பரம்.ஏப் 22

காட்டுமன்னார்கோயிலில் பொலிஸ் அனுமதியின்றிப் பிரசாரப் பேரணி சென்றதாக, பாரதிய ஜனதா கட்சி வாகனங்களைப் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

சிதம்பரம் மக்களவைத் தொகுதி தேசிய ஜனநாய கூட்டணி பா.ம.க வேட்பாளர் சுதா மணிரத்தினத்தை ஆதரித்து பாரதிய ஜனதா கட்சி மோட்டார் சைக்கிள் பேரணியை, பா.ஜ.க விவசாய பிரிவுத் தலைவர் கே.வி. கண்ணன்பிள்ளை தொடங்கி வைத்தார். பேரணிக்குத் தேர்தல் ஆணையத்திடம் அனுமதி பெறப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால் பேரணிக்கு பொலிஸாரிடம் அனுமதி பெறவில்லை என்பதால் காட்டுமன்னார்கோயில் நகர பொலிஸ் சப் - இன்ஸ்பெக்டர் மதிவாணன், பேரணியில் சென்ற 8 மோட்டார் சைக்கிள்களைப் பறிமுதல் செய்தார். (து)



உலகம் முழுவதிலுமுள்ள கத்தோலிக்க மக்கள் ஈஸ்ரர் பண்டிகையை நேற்று முன்தினம் கொண்டாடினார்கள். வத்திகானில் அமைந்துள்ள சென். பீற்றர்ஸ் சதுக்கத்தில் ஈஸ்ரர் பண்டிகை ஆராதனை பாப்பரசர் தலைமையில் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் இதில் பங்கேற்றனர். ஆராதனை முடிவில் பாப்பரசர் மக்களுக்கு விசேட ஆசிர் வழங்கினார். (கு)

# பின்லாந்தில் விமான விபத்து சாகசக்காரர்கள் 8 பேர் சாவு

ஜமிஜர்வி,ஏப் 22

பின்லாந்தின் ஜமிஜர்வி நகரில் இடம்பெற்ற விமான விபத்தில் வான் சாகசகாரர்கள் எட்டுப் பேர் உயிரிழந்தனர்.

விமானி உட்பட மூன்று பேர் விமான விபத்துக்கு முன்னதாகப் பாதுகாப்பாக தரையிறங்கிய நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விமானம் புறப்படுவதற்கு முன்னதாகவே இயந்திரக் கோளாறினால் பாதிக்கப்பட்டிருந்ததாகச் சம்பவத்தை நேரில் அவதானித்தவர்கள் தெரிவித்தனர்.

பின்லாந்தின் ஜாமிஜர்வி நகரம் வான் பயிற்சி நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. சம்பவத்தில் உயிரிழந்த வான் சாகசக்காரர்கள் அனைவரும் அதே பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



விபத்து நடந்த இடத்தில் மீட்புப் பணியாளர்கள்

இதனிடையே, அமெரிக்காவின் வடக்கு மெக்சிகோ நகரில் சிறிய ரக தனியார் விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 7 பேரும் உயிரிழந்தனர். தனியவருக்குச் சொந்தமான 'ஹக்கர் 800' என்ற சொகுசு ஜெட் விமானம் மெக்சிக்கோ நகரத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

அசாதாரண காலநிலையே விபத்துக்கு காரணம் என்ற அறிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## அல்ஜீரியப் படைகள் மீது தீவிரவாதிகள் தாக்குதல்

### *11 படையினர் சாவு*

அல்ஜியர்,ஏப் 22

வடக்கு ஆபிரிக்காவின் மகரப் பகுதியில் உள்ள அல்ஜீரியாவில் கடந்த வியாழன் அன்று ஜனாதிபதிக்கான பொதுத் தேர்தல் நடைபெற்றது.

இதில் நான்காவது முறையாக அப்டலசிஸ் பௌடேபிலிகா ஜனாதிபதியாக வென்றார்.

இந்தத் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைக்காகக் கபைலி பகுதியில் நிலை நிறுத்தப்பட்டிருந்த படையினர் தங்கள் முகாம்களுக்குச் சனிக்கிழமை திரும்பிக் கொண்டிருந்தபோது ஆயுதமேந்திய மர்ம நபர்களால் திடீரென்று தாக்கப்பட்டனர்.

மலைப்பகுதிகள் நிரம்பிய இரண்டு கிராமங்களுக்கு இடையே வரும் பிரதான சாலையில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது. இங்குதான் கடந்த 1990களில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரத்தில் இராணுவத்தினருடன் போரிட்ட இஸ்லாமியத் தீவிரவாதிகள் இன்னமும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

தலைநகர் அல்ஜியர்சுக்குக் கிழக்கில் உள்ள இந்தப் பகுதியில் தேர்தல் சமயத்தின்போது 77 வயதான ஜனாதிபதி மீதான அதிருப்தி இங்கு தெளிவாக வெளித்தெரிந்தது.

கபைலி பகுதியில் உள்ள இபௌட்ரரெனே என்ற இடத்தில் மக்கள் தேசிய ராணுவத்தின் வாகனங்கள் வந்து கொண்டிருந்தபோது தீவிரவாதிகள் கும்பல் ஒன்று திடீரென்று தாக்கியதாக அரசுத்தரப்பு அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

இதில் தீவிரவாதிகளில் இருவர் உட்பட 11 படையினர் உயிரிழந்ததாகவும், ஐந்து பேர் காயமடைந்தாகவும் கூறப்பட்டுள்ளது. (கு)

## நைஜீரியக் குண்டுத் தாக்குதலுக்கு போஹோ ஹராம் பொறுப்பேற்பு

அபுஜா,ஏப். 22

நைஜீரிய தலை நகர் அபுஜாவில் இடம்பெற்ற குண்டு தாக்குதலுக்கு தாம் பொறுப்பேற்பதாக போஹோ ஹராம் பேராளிக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் பலர் கொல்லப்பட்டனர்.

**பஸ் தரிப்பிடத்தில் பயணிகள் அதிகளவில் இருந்த வேளையில் இந்த தாக்குதல் இடம் பெற்றது.**

பஸ் தரிப்பிடத்தில் பயணிகள் அதிகளவில் இருந்த வேளையில் இந்த தாக்குதல் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போராளிகளினால் வெளியிடப்பட்ட வீடியோ நாடா ஒன்றில் ஏ.கே 47 ரக துப்பாக்கிதாரிகள் பலர் இந்தத் தாக்குதலை மேற்கொண்ட காட்சிகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இது தவிர போராளிகளினால் வெளியிடப்பட்ட பிரசுரம் ஒன்றில் நைஜீரிய ஜனாதிபதிக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் ஜனாதிபதி ஜொனாதன் அவர்களே, நாங்கள் உமது நகரத்திலேயே தற்போது உள்ளோம் எனத் தெரிவித்துள்ள போராளிக்குழுவின் தலைவர், முடியுமானால் எம்மைக் கைதுசெய்து கொள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த திங்கட்கிழமை போஹோ ஹராம் போராளிகளினால் கடத்திச் செல்லப்பட்டவர்களில் பாடசாலை மாணவி ஒருவரும் உள்ளடங்குவதாகக் கல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (கு)

# மற்றொரு மலேசிய விமானத்துக்கு இரவில் நடுவானில் நேர்ந்த கதி இது

கோலாலம்பூர்,ஏப் 2

மலேசியன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான எம்.எச்.192 என்ற மலேசிய பயணிகள் விமானம் ஒன்று வேகத்தைக் கட்டுப்படுத்தும் கியர் செயலிழந்ததால் தொடர்ந்து நான்கு மணி நேரமாக வானத்தில் வட்டமிட்டபடி சுற்றிக் கொண்டிருந்தது.



போயிங் 737 ரகத்தை சோந்த அந்த விமானத்தில் வலது பக்க கியர் திடீரென செயலிழந்ததால் தரையிறங்க முடியாமல் தவித்தது.

இந்த விமானம் மலேசிய நேரப்படி நேற்று முன்தினம் இரவு 10.09 மணிக்கு மலேசியத் தலை நகர் கோலாலம்பூரில் இருந்து இந்தியாவின் பெங்களூருக்கு 166 பயணிகளுடன் புறப்பட் டது. புறப்பட்ட சிறிது நேரத்திலேயே விமானத்தின் இயந்திரத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதால் கோலாலம்பூர் விமான நிலையத்தையேசுற்றிச்சுற்றி வந்தது.

இந்நிலையில், இதைக் கவனித்த விமானப் போக்குவரத்து அதிகாரிகள் அந்த விமானத்தைப் பத்திரமாகத் தரையிறக்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டனர். நீண்ட நேரப் போராட்டத்துக்குப் பின் அந்த விமானம் எவ்வித பாதிப்பும் இல்லாமல் பத்திரமாகத் தரையிறக்கப்பட்டது.

தகவல் வழங்கியதை தொடர்ந்து, தீயணைப்பு படையினர் மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் தயார் நிலையில் அங்கு நிறுத்தப்பட்டிருந்தனர்.

சமீபத்தில் எம்.எச்.370 என்ற மலேசியன் எயார் லைன்ஸ் விமானம் ஒன்று 239 பயணிகளுடன் மாயமான நிலையில், மலேசிய விமானங்களில் இது போன்று அடிக்கடி இயந்திர கோளாறு ஏற்படுவது அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (கு)



தெல்லிப்பழைப் பொலிஸாரும் தெல்லிப்பழைப் பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய புத்தாண்டுக் கொண்டாட்டத்தையொட்டி இடம்பெற்ற விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் சனிக்கிழமை மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கஸ்தூரி ஆராச்சி தலைமையில் நடைபெற்றன. விருந்தினர்களாக தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ்.ஸ்ரீமோகனன், காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நந்தன ரணவீரா ஆகியோர் கலந்து கொண்டார்கள். (ஒ)







சுன்னாகம் பொலிஸாரும் உடுவில் பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய புத்தாண்டு கொண்டாட்டத்தையொட்டி இடம்பெற்ற விளையாட்டுப் போட்டி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச். எல். துஸ்மந்த தலைமையில் நடைபெற்றது. விருந்தினர்களாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொகான் டயஸ், 513 ஆவது படைகளின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் பெரேரா கேணல் றொகான், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா, வடமாகாண சபை உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி எஸ். கமலராணி உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டார்கள். கல்லூரி வாசலில் இருந்து மைதானம் வரை விருந்தினர்கள் கோலாட்டம், மேளவாத்திய சகிதம் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். (ஒ-86)

# சந்திரிகாவைச் சந்திக்க தயாராகும் அமைச்சர்கள்

*தேர்தல் குறித்தும் ஆராய்வர்*



*சந்திரிகா*

கொழும்பு.ஏப்.22
அரசில் அங்கம் வகிக்கும் மூன்று இடதுசாரி கட்சிகளின் அமைச்சர்கள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை உத்தியோகபூர்வமாக சந்தித்துப் பேசத் தயாராகி வருகின்றனர்.

அமைச்சர்கள் வாசுதேவ நாணயக்கார, டியூ. குணசேகர, திஸ்ஸ விதாரண ஆகியோரின் தலைமையிலான குழுவினர் அடுத்த வாரம் முன்னாள் ஜனாதிபதி சந்திகாவைச் சந்திக்க நாட்டின் தற்போதைய நிலைமைகள், சர்வதேச சமூகத்தால் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள சவால், எதிர்காலத்தில் நடத்தப்பட உள்ள தேர்தல்கள் தொடர்பில் இதன் போது முக்கிய கவனம் செலுத்தப்படும் என்று தெரியவருகிறது.

அரச அமைச்சர் ஒருவரும், பிரதி அமைச்சரொருவரும் முன்னாள் ஜனாதிபதியை அவரது ஹொரகொல்ல வளவில் சந்தித்து பேச்சு நடத்தியிருந்ததுடன், அரசுக்கு நெருக்கமான அதிகாரிகள் சிலரும் கண்டியில் அவரைச் சந்தித்துப் பேசியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# குடிதண்ணீர் அசுத்தமடைவதை தடுக்க வருகிறது புதிய சட்டம்

கொழும்பு. ஏப்.22
ஆறுகள், நீரோடைகளில் மண் அகழ்ந்து எடுப்பதனால் அசுத்தமடையும் குடிதண்ணீரை பாதுகாப்பதற்காக அரசு விரைவில் புதிய சட்ட விதிகளை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதற்கென அரசு புதிதாக தேசிய சமூக நீர் மற்றும் இவை தொடர்பான கண்காணிப்பு திணைக்களம் ஒன்றையும் ஏற்படுத்த உள்ளது.

இதன் மூலம் தேசிய நீர் விநியோக வடிகால் அமைப்புச் சபை குடிதண்ணீரை போத்தல்களில் அடைக்கும் தொழில் முயற்சிகளை நேர்மையாகவும் சுத்தமாகவும் மேற்கொள்வதற்கான கண்காணிப்புச் செயற்பாடுகளில் ஈடுபடும்.

நீர் விநியோக வடிகால் அமைப்புத் துறை அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அமைச்சரவைக்கு பரிந்துரைத்த ஆலோசனைகளின் அடிப்படையிலேயே இந்தப் புதிய சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

**தற்போது போத்தல்களில் குடி தண்ணீரை அடைத்து விற்பனை செய்வதில் பெரும் மோசடிகள் இடம் பெற்று வருவது விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.**

எங்கள் நாட்டின் தண்ணீர் வளங்களை நாம் பாதுகாக்காவிட்டால் எதிர்காலத்தில் இலங்கையில் குடி தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் என்று அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கூறினார்.

தற்போது போத்தல்களில் குடிதண்ணீரை அடைத்து விற்பனை செய்வதில் பெரும் மோசடிகள் இடம்பெற்று வருவது விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

இதனால் இத்தகைய மோசடிகளில் ஈடுபட்டு மக்களுக்கு தீங்கிழைக்கக் கூடிய வகையில் அசுத்தமான தண்ணீரை போத்தல்களில் அடைத்து விற்பனை செய்வோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார். (ச)

## விபத்தில் காயம்

பிரதான வீதியைக் கடக்க முற்பட்ட வேளை வேகமாக வந்த ஓட்டோ மோதியதில் ஒருவர் தலையிலும் கால், கைகளிலும் பலத்த காயங்களுக்கு இலக்காகி தெல்லிப்பழை ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சுன்னாகத்தில் இடம்பெற்றது. மரக்காலை ஒன்றில் காவலாளியாகக் கடமையாற்றும் கந்தையா தங்கராசா (வயது- 74) என்பவரே இவ்வாறு காய மடைந்தவராவார். சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (வ-36)

## சிறுபோகத்துக்கான மானிய உரம் கையிருப்பில்

கிளிநொச்சி, ஏப்.22
கிளிநொச்சி, இரணை மடுக் குளத்தின் கீழான சிறுபோக செய்கைக்குரிய மானிய உரத்தை வழங்கக் கூடிய வகையில் உரம் கையிருப்பில் உள்ளது.

இந்தத் தகவலை கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தயாரூபன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி, இரணைமடுக்குளத் தின் கீழ் இவ்வாண்டு எண்ணூறு ஏக்கர் சிறுபோக செய் கைக்கு தெரிவு செய்யப்பட்டு பயிர் செய்கைக்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந் நிலையில் சிறுபோக செய்கைக் குரிய மானிய உரம் தற்போது கையி ருப்பில் உள்ளது. அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்று அவர் கூறினார். (ச-55)


## பிறந்த நாள் வாழ்த்து
## வாழ்க வளமுடன்




இன்று அகவை அறுபதில் தடம் பதிக்கும் எங்கள் மதிப்புக்குரிய ஆசிரியை
திருமதி
**சறோஜாதேவி சிவபாலன்**
(SLTS-I-றோரிச்சர்)
அவர்களுக்கு எங்கள் பிறந்த நாள் வாழ்த்துக்கள்
உரித்தாகட்டும். கல்விக்கு வழிகாட்டியதுடன் வாழ்க்கைக்கு திசைகாட்டி பாடசாலை வளம் பெற மெருகூட்டிய உங்கள் வாழ்வு மேலும் வளம் பெறட்டும்.
(47047)
உங்கள் மூலம் வளம் பெற்ற பழைய மாணவர்கள்
யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.

**வேலையாள் தேவை**
ரயர்க் கடை ஒன்றுக்கு ஆண் வேலையாள் ஒருவர் தேவை.
தொ.பே: 021 222 1082 (47062) (7.6.3)

**கடை வாடகைக்கு**
புத்தூர் சந்தி மீசாலையில் உள்ள கடை வாடகைக்கு உண்டு.
தொ.பே: 077 634 8989 (43620) (7.6.3)

**தவறிவிட்டது**
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் நவசக்திவீதி எனும் முகவரியுடைய மார்க்கண்டு தங்கராசா (552863550v), தங்கராசா சாகுலன் (920951350v) ஆகியோரின் தேசிய அடையாளஅட்டையும் மோட்டார்சைக்கிள் சம்பந்தமான சகல முக்கிய ஆவணங்களும் யாழ் நகருக்குள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே: 075 040 8668, 077 582 8991 (47063)(3.6.4)

**தேவை**
சாவகச்சேரியில் இயங்கும் சிற்றுண்டி நிலையத்துக்கு சிற்றுண்டி வகைகள் தயாரிப்பதில் அனுபவம் உள்ள பெண்கள் தேவை.
தொ.பே: 077 271 9116

**யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி, பழைய மாணவர் சங்கம்**
**99ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்**

தலைவர் : திரு.க.கணேசமூர்த்தி
இடம் : கல்லூரி பேர்ஸ் மண்டபம்
காலம் : 25-05-2014 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி

சகல பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களையும் கலந்து சிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர், செயலாளர், பொருளாளர்

ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங்களும் பிரேரணைகளும் 07-05-2014ஆம் திகதிக்கு முன்பதாக செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

க. ஸ்ரீநந்தகோபன்
செயலாளர்



கிளிநொச்சி மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றுள்ளது. மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் என்.சுதாகரன், கமநல உதவி அபிவிருத்தி ஆணையாளர், பிரதி விவசாய(விரிவாக்கல்) பணிப்பாளர் அ.செல்வராசா உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச-55)

# சல்லிக்கல் பரவாததால் பயணிப்பதில் சிரமம்

*மக்கள் விசனம்*

கிளிநொச்சி, ஏப்.22

கிளிநொச்சி, கனகாம்பிகைக் குளம் வீதியைப் புனரமைக்க கொட்டப்பட்ட சல்லிக் கற்கள் பரவிச்செப்பனிடப்படவில்லை. அதனால் இந்த வீதியால் போக்குவரத்துச் செய்வோர் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கனகாம்பிகைக்குளம் வீதியை திருத்தியமைப்பதற்காக சிமெந்துடன் கலக்கப்பட்ட சல்லிக் கற்கள் வீதியில் கொட்டப்பட்டு இரண்டு மாதங்களாகி விட்டன. எனினும் இதுவரை சல்லிக்கற்களைப் பரவி தார் ஊற்றி அந்த வீதி சீர் செய்யப் படவில்லை என்று மக்கள் கூறுகின்றனர்.

எனவே வீதியில் கொட்டப்பட்ட சல்லிக்கற்களை உரியமுறையில் பரவிச் சீர் செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-426)

# நாட்டில் மழை இல்லை; கால்நடைகளுக்கு நோய்

*கிளிநொச்சி மக்கள் கவலை*

கிளிநொச்சியில் மழை பெய்யாததால் கால்நடைகளுக்கு பலவித நோய்கள் ஏற்படுகின்றன என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.

தற்போது கடும் வெப்பமான காலநிலை நிலவுவதால் குளங்கள், கிணறுகளில் தண்ணீர் வற்றிக் காணப்படுகின்றது. இதனால் விவசாயிகளும் கால்நடை வளர்ப்போரும் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். சில பகுதிகளில் குடிதண்ணீருக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று மக்கள் கூறுகின்றனர்.

கால்நடை வளர்ப்பை தமது வாழ்வாதாரத் தொழிலாக நம்பி இருப்பவர்கள் இதனால் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-426)

# குடிதண்ணீர் விநியோகம் நேற்று ஆரம்பம்

கிளிநொச்சி, ஏப்.22

பூநகரிக் கோட்டத்தில் இயங்குகின்ற 24 பாடசாலைகளும் குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன. அதனையடுத்து பூநகரி பிரதேச செயலகம் நேற்று திங்கட்கிழமை முதல் பாடசாலைகளுக்கான குடிதண்ணீர் வழங்கலில் ஈடுபட்டு வருகின்றது.

இதேவேளை கரைச்சி, கண்டாவளை, பளை ஆகிய கல்விக் கோட்டங்களிலும் குடிதண்ணீர் நெருக்கடியை மாணவர்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவும் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களை பாடசாலைகள் இயங்கும் நேரத்தைக் குறைத்து விரைவில் வீடுகளுக்கு அனுப்பி வைக்குமாறு பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-18)

# எந்தவித வசதிகளும் எமக்கு கிடைப்பதில்லை

*செட்டிகுளம் மெனிக்பாம் முகாம் மக்கள் கவலை*

கிளிநொச்சி, ஏப்.22

செட்டிகுளம் மெனிக்பாம் முகாமில் நீண்ட காலமாக எவ்வித வசதிகளும் இன்றி வாழ்ந்து வருகின்றோம் என்று முகாமில் வசிக்கும் மக்கள் கவலை தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த நாங்கள் வவுனியா, பூந்தோட்டம் நலன்புரி முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தோம்.

எனினும் 2002ஆம் ஆண்டில் செட்டிகுளம் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட மெனிக்பாம் முகாமுக்கு மாற்றப்பட்டோம் என்று அந்த மக்கள் குறிப்பிட்டனர்.

700இற்கும் மேற்பட்ட மக்கள் அங்கு அனுமதிக்கப்பட்டும், அவர்களில் ஒரு தொகுதியினருக்கு மாத்திரமே வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது; ஏனைய குடும்பங்களுக்கு எவ்வித வசதிகளும் வழங்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

**அனைவரும் மழை பெய்ய வேண்டும் என்று இறைவனிடம் வேண்டுவார்கள். ஆனால் நாங்கள் மழை பெய்யக் கூடாது என வேண்டுகின்றோம் என்று செட்டிகுளம் முகாமில் வசிக்கும் மக்கள் கூறுகின்றனர்.**

எங்களுக்கான அடிப்படை வசதிகளைச் செய்து தருவதுடன், வீட்டுத் திட்டத்தையும் வழங்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். செட்டிகுளம் முகாமில் வசிக்கும் மக்களின் வீட்டுக் கூரைகள் பழுதடைந்த நிலையில் காணப்படுவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அனைவரும் மழை பெய்ய வேண்டும் என்று இறைவனிடம் வேண்டுவார்கள். ஆனால் நாங்கள் மழை பெய்யக் கூடாது என வேண்டுகின்றோம் என்று அந்த முகாமில் வசிக்கும்மக்கள் கூறுகின்றனர்.

எனவே எமக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-421)

# பனைசார் உற்பத்திகளை ஊக்குவிக்க 6மோத பயிற்சி

*வவுனியா பிரதேசத்தில்*

வவுனியா, ஏப்.22

பனை மரத்தில் இருந்து பெறப்படுகின்ற பொருள்களைக் கொண்டு பல்வேறு உற்பத்திகளை மேற்கொள்ளும் வகையில் வவுனியா பிரதேச ரீதியாக மக்களுக்கு 6 மாத காலப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. இந்தத் தகவலை வவுனியா மாவட்ட பனை அபிவிருத்திச் சபையின் மாவட்ட இணைப்பாளர் நாகரெட்ணம் பாஸ்கரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பனை மரத்தில் இருந்து பெறப்படுகின்ற ஓலை, பனம்பழம் போன்ற பொருள்களைக் கொண்டுபல்வேறு கைவினை மற்றும் உப உணவுப் பொருள்களை தயாரிக்க முடியும். இந்தத் தகவலை மக்களுக்கு தெளிவுபடுத்தி அவர்களுக்கு பயிற்சிவழங்கப்பட்டுவருகிறது. ஒவ்வொரு பிரதேசத்திலும் தெரிவு செய்யப்பட்ட 25 பேரை இணைத்து உற்பத்திப்பொருள்களைத் தயாரிப்பது தொடர்பாக போதனாசிரியர்கள் மூலம் அவர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

பயிற்சி நிறைவில் அவர்களைக் குழுக்களாகப் பிரித்து பனைசார் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட வைத்து, அவர்கள் தயாரிக்கும் உற்பத்திப் பொருள்களை எமது சபையூடாக இயங்கி வரும் "சிறு சுவடுகள்" என்ற திட்டத்தின் மூலம் கொள்வனவு செய்து வருகின்றோம் - என்றார். (ச-421)

# போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொள்ளும் முல்லை.மக்கள்

முல்லைத்தீவு, ஏப்.22

துணுக்காயிலிருந்து முல்லைத்தீவு அரச செயலகத்துக்குச் சென்று வருவதில் அப்பகுதி மக்கள் போக்குவரத்து இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மீள்குடியேற்றம் நடைபெற்ற மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேச செயலக பிரிவுகளின் மக்கள் தமது தேவைகளை நிறைவேற்ற 80 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள முல்லைத்தீவு நகரத்தில் உள்ள அரச செயலகத்துக்கே தாம் செல்ல வேண்டியுள்ளது என்று கூறுகின்றனர்.

போக்குவரத்து நெருக்கடி காரணமாக இதற்காக அதிகளவு பணம் செலவு செய்ய வேண்டியுள்ளது என்று அந்த மக்கள் தெரிவித்தனர்.

எனவே போக்குவரத்துப் பிரச்சினையை நீக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுஅந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-18)

# பொதுச்சந்தைப் புனரமைப்புப் பணிகள் விரைவில்

*உறுதியளித்தது புதுக்குடியிருப்பு பிரதேச சபை*

யாழ்ப்பாணம்,ஏப்.22

புதுக்குடியிருப்பு பிரதேச பொதுச் சந்தையின் பூரணப்படுத்தப்படாத நிர்மாணப் பணிகள் இன்னமும் ஒரு மாதத்துக்குள் ஆரம்பிக்கப்படும் என புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் உறுதிமொழிவழங்கியுள்ளனர்என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேச பொதுச் சந்தை மோசமான நிலையில் காணப்படுவது தொடர்பில் மக்களினால் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய பொதுச் சந்தையை வடக்கு மாகாணசபை உறுப்பினர் இந்த வருட ஆரம்பத்தில் நேரில் சென்று பார்வையிட்டிருந்தார்.

மக்கள் செறிவுள்ள இப் பகுதியில் மோசமான நிலையில் காணப்படும் பொதுச்சந்தையின் மீள் கட்டுமானப்பணிகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். விரைவில்ஆண், பெண் இருபாலாருக்குமான நிரந்தர மலசல கூடம் அமைக்கப்பட வேண்டும் என்று அவர் பிரதேச சபையிடம் கோரியிருந்தார்.

இதன் பின்னர் பொதுச் சந்தையில் நிரந்தர மலசல கூடம் அமைக்கப்பட்டது. ஆனால் அடுத்த மாதமளவில் மீன்சந்தைக்கான பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இன்று வரை அவை தொடங்கப்படாத நிலையிலேயே மீளவும் பொதுச் சந்தையை வடக்கு மாகாண சபை உறுப்பினர் நேரில் சென்று பார்வையிட்டார்.




*புனரமைக்கப்படாத புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை*

அதனைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குச் சென்று பொதுச் சந்தையின் மீன்சந்தை கட்டுமானப் பணி தொடர்பில் கலந்துரையாடினார். அதிக அளவு மக்கள் செறிவுடன் காணப்படும் மேற்படி சந்தையின் கட்டுமானப்பணிகள் கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்படுவதன் அவசியம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

மீன்சந்தைக்கான பணிகள் இன்னமும் ஒரு மாத காலப் பகுதியில் ஆரம்பிக்கப்படும் என்று பிரதேச சபையினர் வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரனிடம் தெரிவித்தனர்.

மீன் சந்தையின் மீள் கட்டுமானத்துக்கான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இன்னமும் ஒரு வாரத்தினுள் அனுமதி கிடைத்துவிடும் எனவும், அதன் பின்னர் கட்டடம் அமைப்பதற்கான கேள்வி கோரல் மேற்கொள்ளப்பட்டு ஒரு மாத காலத்தில் புதுக்குடியிருப்பு மீன்சந்தைக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிடும் என்று பிரதேச சபையினர் உறுதியளித்தாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் தெரிவித்தார். (ச-5)



தென்கிழக்கு பல்கலைக்கழக சம்மாந்துறை வளாகத்தில் மாணவர் விடுதிக்கான அடிக்கல்லை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க நட்டு வைத்தார்

# தமிழர் பண்பாடுகளை பாதுகாக்க வேண்டும்

## அவை மறைந்து போகும் நிலை என்கிறார் யோகேஸ்வரன் எம்.பி.

மட்டக்களப்பு,ஏப்.22

தமிழ் மக்களின் கலை, பாரம்பரிய விளையாட்டுக்கள் மற்றும் பண்பாடுகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தற்கால சமூகத்தின் தேவையாக உள்ளது. மாணவ சமூகம் கல்வியில் முன்னேற்றம் கண்டு அதன் மூலம் தமிழர்களது கலை, கலாசாரங்களை பாதுகாக்க முன்வர வேண்டும்.



யோகேஸ்வரன் எம்.பி.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது தமிழ் மக்களின் கலை, கலாசார விழுமியங்கள் அனைத்தும் எங்களிடமிருந்து மறைந்து போய் உள்ளன.

குறிப்பாக ஒரு நிகழ்வில் மங்கல விளக்கு ஏற்றும்போது அனைத்து தமிழ் இந்து மக்களும் எழுந்து நிற்க வேண்டும். அதற்கு கை தட்டுவது நமது தமிழ் கலாசாரம் அல்ல.

புத்தாண்டு காலங்களில் விளையாட்டு நிகழ்வுகளையும், களியாட்ட நிகழ்வுகளையும் நடத்துவதால் எந்தவித பிரயோசனமும் இல்லை. தமிழ் மக்களிடம் இருந்த பல கலைகள் அழிந்து விட்டன.

ஒரு காலத்தில் இங்கு பல மகுடி நிகழ்வுகள் இடம்பெற்றன. தற்போது அத்தகைய நிகழ்வேதும் நடைபெறுவதில்லை. மகுடி எங்கள் கலாசார நிகழ்வொன்றாக இருந்தது. தற்போது அது மறைந்து விட்டது.

கடந்த காலங்களில் கலை அரங்குகளில் விடிய விடிய நாட்டுக் கூத்துக்கள் நடைபெற்று வந்துள்ளன. இப்போது அது விற்கப்பட்டு விட்டனவா? என்ற சந்தேகம் எங்களிடம் உருவாகி இருக்கின்றது.

இதனை வேறு இனத்தவர்கள் தங்களது கலாசாரமாக கொண்டு விட்டார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது- என்றார். (ச)

## கைகலப்பில் இருவர் காயம்

மட்டக்களப்பு,ஏப்.22

மட்டக்களப்பு, திருப்பெருந்துறையில் உள்ள பிரபல ஆலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பொதுக்கூட்டத்தின்போது இடம்பெற்ற கைகலப்பில் இருவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆலய முன்றிலில் நடைபெற்ற வருடாந்த பொதுக் கூட்டத்தின்போது இடம்பெற்ற வாய்த் தர்க்கத்தைத் தொடர்ந்து இந்தக் கைகலப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இருவர் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் தமது முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர் என்று மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## பெண்கள் விடுதியின் கதவுகள் உடைப்பு

மட்டக்களப்பு,ஏப்.22

மட்டக்களப்பு, தாழங்குடாவில் உள்ள கல்வியியற் கல்லூரியின் பெண்கள் விடுதியின் மாணவிகள் தங்கும் அறைகளின் கதவுகள் உடைக்கப்பட்டு அங்கிருந்த பெண்களின் ஆடைகள் வெளியில் வீசப்பட்டுள்ளன.

கல்லூரி விடுமுறையில் சென்ற மாணவிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை விடுதிக்கு திரும்பியபோது தமது விடுதி அறைகளின் கதவுகள் உடைக்கப்பட்டு ஆடைகள் வெளியில் வீசப்பட்டுள்ளதைக் கண்டு கல்லூரி முதல்வருக்கு அறிவித்துள்ளனர். (ச)

## 25 வருடங்களின் பின்னர் அரச பஸ் சேவை ஆரம்பம்

### மட்டக்களப்பிலிருந்து கொக்கட்டிச்சோலைக்கு

மட்டக்களப்பு,ஏப்.22

சுமார் 25 வருடங்களின் பின்னர் மட்டக்களப்பில் இருந்து மண்முனை பாலத்தினூடாக கொக்கட்டிசோலைக்கு அரச பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மண்முனைப் பாலத்தினூடாக நேற்று திங்கட்கிழமை அதிகாலை தொடக்கம் பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை போக்குவரத்து சபையின் மட்டக்களப்பு சாலை முகாமையாளர் டி.மனோகரன் தெரிவித்தார்.

இந்த வீதியூடான போக்குவரத்துச் சேவையில் இரண்டு பஸ்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த பஸ் சேவையூடாக கொக்கட்டிசோலையில் இருந்து மட்டக்களப்பு நகருக்கு நேரடியாக பயணிக்க முடியும் என்று அவர் கூறினார்.

இதேவேளை, மண்முனை பாலத்தினூடாக கொக்கட்டிச்சோலையில் இருந்து கொழும்புக்கான நேரடி பஸ் சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)


## மரண அறிவித்தல்

### திருமதி கண்ணகைப்பிள்ளை (சின்னம்மா) மயில்வாகனம்



இணுவிலைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்ணகைப்பிள்ளை (சின்னம்மா) மயில்வாகனம் 19.04.2014 சனிக்கிழமை அதிகாலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற (முன்னாள் ஆசிரியர்) பொன்னம்பலம் மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செகராசசிங்கம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லம்மா சிவப்பிரகாசம் அவர்களின் அன்புச் சகோதரியும், ஜனநாயகம், (முன்னாள் பொறியியலாளர், லங்கா சிமெந்து நிறுவனம்- ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற செல்வநாயகம் (ஆசிரியர்), இராஜநாயகம் (Partner M.Rajanayagam& Co.Chartered Accountants, Thirunelvely), காலஞ் சென்ற கலாநிதி கதிர்காமநாயகம், (முன்னாள் விரிவுரையாளர், கணித புள்ளி விபரவியல்துறை,யாழ்பல்கலைக்கழகம்) மற்றும் வேதநாயகி, ஜெகசோதி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும்,திருச்செல்வகுமாரி (ஆஸ்திரேலியா), றஞ்சிதகுமாரி(கனடா), சிவறாஜினி(நரம்பியல் வைத்தியநிபுணர்- ஆஸ்திரேலியா), சாமினி(கனடா),சிவராஜா(விரிவுரையாளர்-சந்தைப்படுத்தல் துறை, முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம், இணைப்பாளர் வெளிவாரிப் பட்டப் படிப்புகள் அலகு,யாழ் பல்கலைக்கழகம்), பால்ராஜ்(கனடா) ஆகியோரின் அன்புமாமியாரும், ராகுலன் (பொறியியலாளர் -ஆஸ்திரேலியா), ஆதவன், வியாசன்,கபிலன்(ஆஸ்திரேலியா),திருபரன்(கனடா), மாதங்கி (பட்டயக் கணக்காளர்- ஆஸ்திரேலியா), Dr.சுபாங்கி(ஆஸ்திரேலியா), அனோஜன், நிரோஜினி (கனடா), மாதுர்யா, பாரதன்(பொறியியலாளர்-DAIMEI SLK (Pvt) Ltd, கொழும்பு), வைஸ்ணவி (சப்பிரகமுவ பல்கலைக்கழகம்), சுவேதா, பிருந்தன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆர்யன், அஜய் (ஆஸ்தி ரேலியா) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.04.2014) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
பாலா - 077 953 0496
சிவராஜா - 077 553 2402, 071 8818624, 021 225 5829

'அமைதி'
45,சுதுமலை தெற்கு,
மானிப்பாய், யாழ்ப்பாணம்.

(47003)(5.6.3)



## மரண அறிவித்தல்

### செல்வி ஆனந்தலெட்சுமி சிற்றம்பலம்



சுருவில் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஆனந்தலெட்சுமி சிற்றம்பலம் நேற்றுமுன்தினம் (18.04.2014) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - வள்ளியம்மை தம்பதிரின் அன்புப் புதல்வியும், இராசலெட்சுமி, காலஞ்சென்ற Dr. இராசலிங்கம் மற்றும் சிவலிங்கம், மகாலெட்சுமி, சந்திரமதி, ஸ்ரீஸ்கந்தராஜா, அருள்கந்தராஜன், நவநீதராஜன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் Dr. மைத்திரிதேவி, மரகதவல்லி Dr.ஸ்ரீகாந்தா, பாலசுப்பிரமணியம், இந்திராணி, சோமாவதி ஆகியோரின் மைத்துனியும், சுபோதினி, சுபேந்திரன், Dr. வினோதினி, நந்தினி, பாலகஸ்தூரி, இளங்கீரன் ஆகியோரின் அன்புச் சித்தியும், அனுஷா, Dr. சிவானி, சிவசங்கர், பவதாரணி, பிரதீபன், அபிராமி, Dr.சஞ்சீவன், சரண்யா, மைத்திரி, திவ்வியன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.04.2014) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 5.00 மணிவரை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காகவைக்கப்பட்டு, நாளை (23.04.2014) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 4.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும் . இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

F-3/1, பம்பலப்பிட்டி தொடர்மாடி,
கொழும்பு - 04

தகவல் :
சிற்றம்பலம்-
குடும்பத்தினர்.

(46995) (45.3.6)

## கடந்த ஆண்டில் மட்டும் 5,000 போலி நாணயத்தாள்கள் மீட்பு

கொழும்பு.ஏப்.22

கடந்த ஆண்டில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட போலி நாணயத்தாள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஒரு மில்லியன் நாணயத்தாள்களுக்கு ஆறு போலி நாணயத்தாள் என்ற ரீதியில், போலி நாணயத்தாள்கள் புழக்கத்தில் விடப்பட்டுள்ளன.

2012 ஆம் ஆண்டிலும் இதேவிதமான போலி நாணயத் தாள்கள் புழக்கத்தில் விடப்பட்டிருந்தன என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.


போலி நாணயத்தாள்களை அடையாளம் காணும் வகையிலான கருவிகளை அனைத்து வங்கிகள் மற்றும் வணிக நிதி நிறுவனங்களும் பயன்படுத்த வேண்டும் என்று மத்திய வங்கி ஏற்கெனவே அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பொதுபல சேனாவின் செயலுக்கு ஆசீர்வாதம் இருப்பதாக சந்தேகம்

### முஸ்லிம் மக்கள் அச்சத்தில் உள்ளனர் என்கிறார் அமைச்சர் ஹக்கீம்

கொழும்பு. ஏப்.22

சட்டத்தை மீறி நடந்து கொள்ளும் பொதுபல சேனாவின் நடவடிக்கைகளுக்கு ஒரு வித ஆசீர்வாதம் இருப்பதைப் போன்ற தோற்றப்பாடு காணப் படுகின்றது. இது முஸ்லிம் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. எனவே இது தொடர்பான சந்தேகங்களைப் போக்கி சமூகங்களுக்கிடையே உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியது அனைத்துத் தரப்பினரதும் கடமையாகும்.



ரவூப் ஹக்கீம்

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பொதுபல சேனாவின் நடவடிக்கைகள் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ள கருத்துக்களை அடுத்து பகிரங்க விவாதத்துக்கு வருமாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு பொதுபலசேனா விடுத்துள்ள அழைப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுபல சேனாவின் நடவடிக்கைகள் மக்களை அச்சுறுத்தும் வகையிலும் கீழ்த் தரமானவையாகவும் அமைந்துள்ளன.

முஸ்லிம் மக்களால் போற்றப்படும் புனித 'குர்ஆனை' அவமதிக்கும் வகையில் அவர்கள் நடந்து கொள்கின்றனர்.

இவ்வாறானவர்களின் நாகரிகமற்ற. தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் சட்ட ரீதியாக அடக்கி ஒடுக்கப்பட வேண்டியவையாகும்.

இவ்வாறான தீவிரவாதப் போக்குடைய அமைப்புக்களுடன் நான் விவாதத்தில் கலந்து கொள்ள ஒருபோதும் சம்மதிக்கப் போவதில்லை. அதுவே அவர்களுக்குக் கிடைக்கும் அங்கீகாரமாகவும் அமைந்து விடும். அவர்களின் அநாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களை இதர பௌத்த குருமாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த குழுவினருக்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப் பொலிஸார் தயக்கம் காட்டக் கூடாது.

இவர்கள் சட்டத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடும் போது பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்கள் அதனைத் தட்டிக் கேட்க வேண்டும்.

இந்தத் தீவிரவாதம் முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும். அண்மையில் நான் மல்வத்த அஸ்கிரிய ராமானிய மாநாயக்க தேரர்களை சந்தித்து உரையாடியிருந்தேன். அவர்கள் பொது பல சேனாவின் நடவடிக்கைகளை ஒரு போதும் தாங்கள் அங்கீகரிக்கவில்லை என்று கூறினார்கள்.

பௌத்த மதகுருமார் ஒரு போதும் உணர்ச்சிகளுக்கு ஆளாகக் கூடாது என்று அவர்கள் எடுத்து விளக்கினார்கள். அத்துடன் அவர்களின் செயற்பாடுகள் ஒரு போதும் நல்லிணக்கத்துக்கு வழி சமைக்காது. மாறாக குந்தகத்தையே ஏற்படுத்தும். முஸ்லிம் மக்களுக்கு பல்வேறு வகையிலும் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் குறித்து அவர்களிடம் நான் எடுத்துக் கூறினேன்.

அதேவேளை பொதுபல சேனாவின் நடவடிக்கைகளை தாங்கள் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை என்றும் பௌத்த பீடாதிபதிகள் தெரிவித்தனர்-என்றார். (ச-10)

## ஐ.தே.க. உறுப்பினர்களது வாக்குமூலங்கள் பதிவு

கொழும்பு.ஏப்.22

அம்பாந்தோட்டையில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வரது வாக்கு மூலத்தைப் பொலிஸார் பெற்றுக் கொண்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை தனது வாக்கு மூலத்தைப் பொலிஸார் பெற்றுக் கொண்டதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அஜித் பீ பெரேரா. அஜித் மான்னப்பெரும. நலின் பண்டார ஆகியோரது வாக்கு மூலங்களும் பொலிஸாரினால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மத்தல விமான நிலையம் மற்றும் மாகம்புர துறைமுகத்தை பார்வையிடச் சென்ற ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது கடந்த 17ஆம் திகதி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்கு மூலத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் விரைவில் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். (ச)

# அரசின் நடவடிக்கைகள் திருப்தி அளிக்கவில்லை

### அமைச்சர் திஸ்ஸ விதாரண குற்றச்சாட்டு

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கு வது தொடர்பில் அரசின் நடவடிக்கைகள் திருப்தி அளிக்கும் வகையில் அமையவில்லை என்று அமைச்சர் திஸ்ஸ விதாரண குற்றஞ் சாட்டியுள்ளார்.



திஸ்ஸ விதாரண

தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் அரசின் அக்கறையான முனைப்பு இல்லாமல் வெறுமனே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்குமாறு அழைப்பதில் அர்த்தமில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நம்பிக்கையை வென்றெடுக்க அரசு தவறியுள்ளது. அதன் காரணமாகவே கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்க விரும்பவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தேசியவாதக் கட்சிகளே அதிகளவில் அங்கம் வகிக்கின்றன என்று அவர் தெரிவித்த அவர், சர்வ கட்சிப் பேரவையின் தலைவராக கடமையாற்றிய தம்மை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இணைத்துக் கொள்ளாமை வருத்தமளிக்கிறது என்றும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் உள்ளடக்கப்படாமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நம்பிக்கை மேலும் குறைவடையச் செய்யக் காரணமாகியது என்று அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் ஐக்கிய தேசியக் கட்சி.ஜே.வி.பி ஆகிய கட்சிகளும் அங்கம் வகிக்கவில்லை. இவ்வாறான ஒரு பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அமர்வுகளில் பங்கேற்கும் என்று எதிர்பார்க்க முடியாது என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ச)

## குண்டு தயாரிக்க பயன்படுத்தப்படும் பொருள்கள் சிறையில் மீட்பு

கொழும்பு.ஏப்.22

வெலிக்கடைச் சிறைச்சாலை வைத்தியசாலையில் இருந்து குண்டு தயாரிக்கப் பயன்படும் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. சுமார் இரண்டு கிலோகிராம் எடையுடைய இரும்புக் குண்டுகளைத் தயாரிக்கக் கூடிய பொருள்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. கடந்த 17 ஆம் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து இரண்டு கைதிகள் தப்பிச் சென்றிருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் நடத்தப்பட்ட தேடுதல் வேட்டையின் போது குண்டு தயாரிக்கப் பயன்படும் பொருள்கள் சிறைச்சாலைக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளன. (ச)


31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் நாகையா இராமலிங்கம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

தோற்றம் 03.02.1944 — மறைவு 23.03.2014

குப்பிளானைப் பிறப்பிடமாகவும். பரராஜ சேகரப்பிள்ளையார் கோயிலடி இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட **நாகையா இராமலிங்கம்** 23.03.2014 அன்று காலமானார்.

அன்னாரின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும். ஆன்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (22.04.2014) செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளதால் தாங்களும் வருகை தந்து. அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி.
இணுவில் தெற்கு. இணுவில்.

குடும்பத்தினர்.



31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி தங்கரத்தினம் (ராசம்மா) சின்னையா

தோற்றம் 05.10.1938 — மறைவு 23.03.2014

எங்கள் அன்புத் தெய்வமே!
எம்மை விட்டுப் பிரிந்து நாள்கள் 31 ஆனதுவோ
உங்கள் நினைவு எம் மனதை விட்டுப் பிரியவில்லை
உங்கள் பிரிவை எண்ணி குமுறுகிறது எங்கள் உள்ளம்
சிதறுகிறது எம் இதயம் உங்களை இனி எப்போ காண்போம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

கடந்த 23.03.2014 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி **திருமதி தங்கரத்தினம் (ராசம்மா) சின்னையா** அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (23.04.2014) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். (46965)(2.6.3)

44/10மோகன் பவானி, மனோற்றறை லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

ஸ்ரீஸ்கந்தராஜா (மகன் - ஜேர்மனி)
ஸ்ரீரஞ்சிமோகன் (மகன்).
மருமக்கள்:இராஜேஸ்வரி, கமலாதேவி (ஜேர்மனி). பவானி.
கார்த்திகா, தயா (சுவிஸ்).நித்திகா, நிகந் (ஜேர்மனி),
காண்டீபன், சுதர்சினி, சுகந்தன், சுதர்சன், சுகிர்தாஸ் (குவைத்)



வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மார்க்கண்டு செல்வராசா

தோற்றம் 22.11.1944 — மறைவு 23.03.2014

கடந்த (23.03.2014) புதன்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் மார்க்கண்டு செல்வராசா அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (22.04.2014) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் நோயுற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உதவிய அனைத்து வைத்தியசாலை ஊழியர்களுக்கும் அன்னார் இறந்த செய்திகேட்டுப் பல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து எமது துயரத்தில் பங்கு கொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

826/17, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (47058)(3.6.4)

குடும்பத்தினர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கிழக்கு நோக்கி விரையுங்கள்

கடந்த சில மாதங்களாகக் கிழக்கில் இருந்து பல வீனமான குரல் ஒன்று ஒலித்துக் கொண்டிருக்கிறது. அது தொடர்ந்தும் கண்டுகொள்ளப்படாமலேயே விடப்படுவது ஆபத்தானது.

போர் முடிவடைந்த பின்னர், அதாவது விடுதலைப் புலிகள் தாயகக் களமுனையில் இருந்து அகற்றப்பட்ட பின்னர் தாம் தனித்து விடப்பட்டதாக உணரும் கிழக்குத் தமிழர்களின் குரல் அது.

தமிழர்களின் தாயக பூமி வடபகுதி மட்டுமே என்பது போல் வடக்கில் மட்டுமே அனைத்துத் தரப்பினரதும் கவனம் குவிக்கப்பட்டு, கிழக்கு கவனிக்கப்படாது விடப்படுகிறது என்ற எண்ணம் அவர்களைக் குரல் எழுப்ப வைக்கிறது.

தமிழ் – சிங்கள – முஸ்லிம்கள் என்று மூவினங்களும் வாழும் பகுதி கிழக்கு. அங்கு ஏற்கனவே திட்டமிட்ட அரச ஆதரவுக் குடியேற்றங்கள் மூலம் தமிழர்களின் இனப்பரம்பல் மட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. மூன்றிலிரண்டு பெரும்பான்மையாக இருந்த தமிழர்கள் இப்போது மூன்றிலொரு பங்கினராக மாற்றமடைந்து விட்டனர். அங்கு தொடரும் நிலை, கிழக்கில் தமிழர்களை மேலும் சிறுபான்மையினராக்கி அவர்களின் அடையாளங்களை அழித்து விடக்கூடும் என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது. இதுவே கிழக்கைக் கைவிட்டுவிடாதீர்கள் என்று அங்குள்ள மக்கள் வடக்கை நோக்கி அபயக்கரம் நீட்டக் காரணம்.

அதனைப் பற்றிப் பிடித்து அவர்களுக்கு எப்போதும் உதவிகளைச் செய்து, வடக்குடன் அவர்களை ஆரத் தழுவி வைக்க வேண்டியது வடக்கு மக்களதும் அரசியல் தலைமைகளினதும் கடமை.

வடக்கிலிருந்து எழும் ஒவ்வொரு ஆதரவுக் குரலும் கிழக்கு மக்களுக்கு பேரானந்தத்தையும் நம்பிக்கையையும் கொடுக்கின்றன என்பதை, சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்த மக்களைச் சந்தித்தபோது உதயன் பத்திரிகையால் உணர முடிந்தது.

சம்பூர் மக்களின் மீள்குடியேற்றம் பற்றி வடக்கு மாகாண சபை நிறைவேற்றிய தீர்மானம் தமக்கு நம்பிக்கையையும் தெம்பையும் தந்ததாக சந்திப்பு ஒன்றில் அவர்கள் நன்றியுடன் நினைவுகூர்ந்தார்கள்.

தங்களுக்காகவும் குரல் கொடுப்பதற்கு, ஆதரவுக் கரம் நீட்டுவதற்கு உறவுகள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை அது. ஈழத் தமிழ் இனம் தமிழகத் தமிழர்களிடம் எதிர்பார்த்து நிற்கும் தார்மீக ஆதரவையும் எதிர்பார்ப்பையும் போன்றது, வடக்கிடம் இருந்து கிழக்கு எதிர்பார்ப்பது.

ஏனைய இனங்களால் சூழப்பட்டு கடும் சவால்களின் மத்தியில் வாழும் கிழக்குத் தமிழர்களுக்கு உதவிக் கரம் நீட்டுவதும் அவர்களை தோளோடு தோளணைத்துப் பயணிப்பதும் மிக அவசியமானது. அது தவறும் பட்சத்தில் தமிழர்களின் தாயகக் கோட்பாடும் தமிழ்த் தேசியமும் மீளமுடியாத கேள்விகளுக்கு உட்பட்டுவிடும். எனவே இந்த விடயத்தில் வடக்கு மக்களும் அரசியல் தலைமைகளும் அவசரமான நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்.

இல்லையேல் வடக்குத் தலைமைகளால் கிழக்கு மக்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று கூறி, அரசுடன் சேர்ந்தியங்கும் கருணா, பிள்ளையான் போன்றவர்களும் சுயநல, பிரதேச வாத அரசியலை வெற்றிகரமாக முன்னகர்த்திச் சென்றுவிடுவார்கள். அதற்கு இடம்கொடுத்து விடாது பார்த்துக் கொள்ளும் கடமை அனைவருக்கும் இருக்கிறது.

இதற்கு, முதலில் வடக்கு மக்கள் கிழக்கு நோக்கிய தமது பயணங்களை அதிகப்படுத்த வேண்டும். வடக்கு மக்கள் இப்போது தெற்குக்குச் சுற்றுலாச் செல்லும் அளவிற்குக் கிழக்குக்குச் செல்வதில்லை என்பது கண்கூடு. வடக்கும் கிழக்கும் தமிழர்களின் தாயக பூமி என்று கூறிக்கொண்டு, அதனையே முழுமையாகச் சுற்றிப் பார்க்காமல் இருப்பதில் என்ன நியாயமுண்டு? எனவே ஒவ்வொரு வடக்குத் தமிழனும், கிழக்கிற்கு நேரடியாகச் சென்று வரவேண்டும். அந்த மக்களுடன் நேரடியாக உறவாட வேண்டும்.

வடக்கிலிருந்து வருபவர்கள் ஆக்கிரமித்துவிடுவார்கள் என்று அவர்கள் மத்தியில் உருவாக்கப்படும் அச்சங்கள் களையப்பட வேண்டும். கிழக்கு மாகாணசபை தமிழர்களின் கட்டுப்பாட்டில் இல்லாத நிலையில், வடக்கு மாகாண சபைதான் இரு மாகாணங்களுக்கும் இடையிலான இந்த உறவைக் கட்டிவளர்க்க கிழக்கின் பங்கையும் சேர்த்து உழைக்க வேண்டும். மாகாண சபை உறுப்பினர்கள் இதனைக் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும். தேர்தல் காலங்களில் மட்டும் அங்கு போய் வருவது போதாது. கலாசார உறவையும் பரிமாற்றத்தையும் இரு மாகாணங்களுக்கும் இடையில் கட்டிவளர்க்க அவசரமான, அவசியமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.



# சர்வதேசத்துக்கு சவால்விடும் இலங்கையின் கதி என்னவாகும்?



தற்போது இலங்கையில் இனப்பிளவுகளால் மட்டும் மோதல்கள் ஏற்படவில்லை. பல்வேறு மதங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள பிளவுகளாலும் மோதல்கள் ஏற்படுகின்றன. பௌத்த அடிப்படைவாதக் குழுக்களுக்கும் முஸ்லிம் மற்றும் கத்தோலிக்க மத சமூகங்களுக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு த பிளாட்போர்ம் என்னும் இணையத்தளத்தில் அனுபமா றணவன எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அண்மையில் இலங்கை தொடர்பில் நடைமுறைப்படுத்தப்பட்ட தீர்மானம், நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதில் அதிகம் செல்வாக்குச் செலுத்தும். அமெரிக்காவின் தலைமையில் முன்வைக்கப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானம், இலங்கையில் தொடரப்பட்ட போரின் போது அதில் பங்குகொண்ட இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு போர்க் குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணை ஒன்றை முன்னெடுப்பதற்கான வழியை உருவாக்கியுள்ளது.

அனைத்துலக மனித உரிமைகள் சட்டம் மற்றும் அனைத்துலக மனிதாபிமானச் சட்டம் போன்றவை மீறப்பட்டதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் இது தொடர்பில் சுயாதீன விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படுவதற்கும், மனித உரிமைகள் மற்றும் அடிப்படைவாத சுதந்திரங்களைப் பாதுகாத்தல் மற்றும் அவற்றை மேலும் அதிகரித்தலுக்கான சிறப்பு அறிக்கையிடலாளரின் ஆணைகளை உணவுக்கான உரிமை என்ற அடிப்படையில் மேலும் விரிவுபடுத்துவதற்கும் இலங்கை ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மனித உரிமைகளுக்கான ஆணையாளரின் செயலகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கவனம் செலுத்தி தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கை நாட்டில் நீதியையும்,பொறுப்பளிப்பையும் நோக்கிய முதலாவது நகர்வாக இலங்கை மீதான சபையின் அந்தத் தீர்மானம் அமைந்துள்ளது. புலம் பெயர் தமிழ் சமூகம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என அனைத்துலக சமூகத்திடம் அழுத்தம் கொடுத்து வருகிறது.

இந்த அடிப்படையில், மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை மீது அழுத்தம் கொடுப்பதற்கு ஏனைய நாடுகள் தமது விருப்பத்தைத் தெரிவிப்பதற்கான உந்துதலை இத்தீர்மானம் வழங்கியுள்ளது. 47 உறுப்பினர்களைக் கொண்ட சபையின் உறுப்பு நாடுகளில் 23 நாடுகள் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை ஆதரித்தும், 12 நாடுகள் இதனை எதிர்த்தும், 12 நாடுகள் இந்த வாக்கெடுப்பைப் புறக்கணித்தும் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளன.

தமிழர்கள் அதிகம் வாழும் இந்தியாவின் ஆளும் காங்கிரஸ் அரசு இதற்கு முன்னர் சபையில் முன்வைக் கப்பட்ட இரண்டு தீர்மானங்களையும் ஆதரித்து வாக்களித்தது. ஆனால் இந்தத் தடவை இந்தியா தீர்மானத்தை ஆதரிப்பதற்கான வாக்கெடுப்பைப் புறக்கணித்து நடுநிலை வகித்துள்ளது. இது இந்தத் தீர்மானத்தின் பலம் தொடர்பில் சந்தேகத்தை ஏற் படுத்தியுள்ளது. மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கை அரசு பொறுப்பளிப்பதுடன், வெளிப்படைத்தன்மையுடனும் நடந்துகொள்ள வேண்டும் என்று இந்தத் தீர்மானம் வலியுறுத்துகிறது.

வடகொரியாவில் நிலவிய சூழல் தொடர்பாகக் கலந்துரையாடிய போது, நாங்கள் தற்போது அனைத்துலக சமூகத்துக்குச் சவால் விட முடியும் என்றும் இலங்கை அரசு மீது உண்மையான விசாரணையை மேற்கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள முடியும் என்றும் மனித உரிமைகளுக்கான ஐ.நா. சிறப்பு ஆணையாளர் நவிப்பிள்ளை விளக்கியிருந்தார்.

வரலாற்று ரீதியான பதிலை வழங்குவதில் சிறிய பிரச்சினை ஒன்று காணப்படுகிறது. கடந்த காலங்களில் அனைத்துலக சமூகத்தின் தலையீட்டை இலங்கை நிராகரித்து வந்தாலும், இலங்கை அரசு தான் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிற்பதாகவும், இலங்கைக்கு வெளியே இதுதொடர்பில் வரையப்படும் எந்தவொரு கோட்பாடும் மேற்குலகின் புதிய காலனித்துவத்தை அடிப்படையாகக் கொண்டது என்றும் கூறிவந்தது. இதற்கு சீன அரசிடமிருந்தும் மிகப் பலமான ஆதரவு கிடைக்கப் பெற்றது. இந்த விடயம் இலங்கையின் சிவில் சமூகமும் அனைத்துலக சமூகமும் இணைந்து இலங்கை மீது போர்க் குற்றச்சாட்டு விசாரணையை கிட்டிய எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கான ஆளுமையைக் கொண்டுள்ளனவா என்கின்ற கேள்வியை எழுப்புகிறது. இலங்கைச் சமூகத்துக்குள் அதாவது, இலங்கையின் கீழ் மட்ட சமூகத்திலிருந்து இலங்கை இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

இலங்கைமீது போர்க்குற்ற விசாரணை முற்றிலும் சுயாதீனமாகவும், முழுமையாகவும் மேற்கொள்ளப்பட்டால் இதன் மூலம் இலங்கை அரசுக்கும் அதன் இராணுவப் படைகளுக்கும் எதிரான பல்வேறு குற்றங்களை உறுதிப்படுத்த உதவலாம். அதேவேளை, விசாரணையை மேற்கொள்வதற்கான நகர்வுகள் ஏற்கெனவே பிளவுபட்டுள்ள, ஆழமாக உள்ள இனப்பிரச்சினையை மேலும் விரிவுபடுத்தலாம். தற்போது இலங்கையில் இனப்பிளவுகளால் மட்டும் மோதல்கள் ஏற்படவில்லை. பல்வேறு மதங்களுக் கிடையில் ஏற்பட்டுள்ள பிளவுகளாலும் மோதல்கள் ஏற்படுகின்றன. பௌத்த அடிப்படைவாதக் குழுக்களுக்கும் முஸ்லிம் மற்றும் கத்தோலிக்க மத சமூகங்களுக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டுள்ளன. வடக்கில் கலாசார ரீதியான காலனித்துவத்தை ஏற்படுத்தும் நோக்கில் இலங்கை அரசு இராணுவமயமாக்கல்கள் மற்றும் சிங்களமயமாக்கலை மேற்கொண்டு வருகிறது.

இலங்கையில் அண்மையில் பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாடு இடம்பெற்ற நாள்களிலும் சிறுபான்மை இனங்களுக்கு எதிராக பல்வேறு வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக இலங்கையின் வடக்குக்கு பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது சிறுபான்மைத் தமிழர்களுக்கு எதிராக வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டன. போருக்குப் பின்னான சூழலில் இலங்கையில் பெண்கள் பல்வேறு விதமான பாதிப்புக்களைச் சந்தித்துள்ளனர்.

போரின்போது தமது கணவனை இழந்த பெண்கள் பலர் தமது குடும்பத் தேவைகளை நிறைவு செய்வதற்காக பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 'பயங்கரவாத' நடவடிக் கைகளில் ஈடுபடுவதாகக் குற்றம் சுமத்தி புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் சிலவற்றை இலங்கை அரசு தடை செய்துள்ளது. இவ்வாறான பல்வேறு குழப்பங்கள் இலங்கையில் நிலவுகின்ற போதிலும், தனது நாட்டில் சிறுபான்மை இனங்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை என்று தேசிய ஒற்றுமை மாநாட்டில் அண்மையில் உரையாற்றும் போது இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கையும் இலங்கை அரசின் தலைமையில் நாட்டில் மேற்கொள்ளப்படும் மீளிணக்கப்பாட்டுத் திட்டத்தைக் குழிதோண்டிப் புதைக்க எத்தனிப்பதாகவோ அல்லது இதனைத் தவறாகப் புரிந்துள்ளதாகவோ நினைக்க முடியும் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

போரின் இறுதியில் உண்மையில் என்ன நடந்தது என்பது வெளிப்படுத்தப்பட வேண்டியது மிக முக்கியமானதாகும். எனினும், இலங்கை அரசை முற்றிலும் முதன்மைப்படுத்தி மேற்கொள்ளப்படும் எந்தவொரு விசாரணையும் விடுதலைப் புலிகளால் இழைக்கப்பட்ட மீறல்களைக் கூற முன்வருபவர்களைப் புறந்தள்ளுவதாக அமையும். இலங்கையில் நிலவும் பிரிவினைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக உள்ளூர் குழுக்கள் ஒன்றாக இணைந்து பணியாற்ற முடியும் என்பதை, அனைத்துலக சமூகத்தால் மேற்கொள்ளப்படும் நகர்வுகளைத் தடுப்பதற்காக இலங்கையால் முன்னெடுக்கப்படும் அணுகுமுறைகள் சிதைவுறச் செய்துவிடும்.

விசாரணை என்பது சட்ட ரீதியான, நீதியான, நிறுவக ரீதியான பரிந்துரைகளுக்கு மட்டுமே பதிலளிக்கும். மீளிணக்கப்பாட்டை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நிலைமாறும் நகர்வுகள் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களையும், ஏற்கெனவே ஏற்பட்ட வடுக்களையும் இல்லாமற் செய்யும். போரின் வடுக்களை ஆற்றுவதற்கான உறுதியான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன்மூலம் நாட்டு மக்களின் வடுக்களை எவ்வாறு நீக்குவது, முறைசார் மன்னிப்புக்களைக் கோருவது, சாட்சியங்களின் பதிவுகள், மதத் தலைவர்களின் நடவடிக்கைகள் போன்றன கலந்துரையாடப்பட வேண்டும். துரித மீளிணக்கப்பாட்டை முதன்மைப்படுத்தாது, இலங்கை அரசு மோதலிலிருந்து சமாதானத்துக்குச் செல்ல முடியாது. இதன்மூலம் வெற்றிகரமான போர்க் குற்ற விசாரணையைக் கூட மேற்கொள்ள முடியாது. இந்த விசாரணை முற்றிலும் செல்லுபடியற்றதாகவே இருக்கும்.

நன்றி: புதினப்பலகை

# ஏப்ரல் 22
# இன்று உலக புவி தினம்



இந்த உலகம் எப்படி உருவானது என்பதற்கு பல்வேறு காரணங்களை விஞ்ஞானிகளும், ஆராய்ச்சியாளர்களும் கூறுகின்றனர். அதேபோல் புவி தினம் உருவானதற்கும் ஒரு வரலாறு இருக்கிறது. இன்றைய தினம் கொண்டாடப்படும் இந்த உலக புவி தினம், 1970 ஆம் ஆண்டு முதல் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.


தொடக்கத்தில் ஒரு சில இடங்களில் நடத்தப்பட்ட புவி தினக் கடைப்பிடிப்பு, இன்று உலகெங்கும் அதிகமான நாடுகளில் கொண்டாடப்படுகிறது. புவி தினம் உருவான வரலாறு மற்றும் அதன் வளர்ச்சி பற்றி நோக்குவோம்.

புவியின் பாதுகாப்பையும், அதன் வளத்தையும் மேம்படுத்தும் நோக்கில் புவி தினம் ஆண்டுதோறும் ஏப்ரல் 22 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. சான்பிரான்சிஸ்கோவில் கடந்த 1969 ஆம் ஆண்டு நடைபெற்ற யுனெஸ்கோ மாநாட்டில், ஜான் மகொநெல் என்பவர் பூமிக்கென்று ஒரு தினம் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

குறிப்பாக, பூமியின் வடக்கு கோளத்தில் வசந்த காலம் தொடங்கும் மார்ச் 21 ஆம் திகதியை புவி தினமாகக் கொண்டாடலாம் என்றும் யோசனை கூறினார். இதனை அப்போதைய ஐ.நா. பொதுச்செயலாளரும் ஏற்றுக்கொண்டார். ஆனால், தற்போது கொண்டாடப்படும் புவி தினத்தின் காரணகர்த்தா ஆகக் கருதப்படுபவர் டெனிஸ் ஹேய்ஸ் ஆவார்.

1970 ஆம் ஆண்டு கொலம்பியா பல்கலைக்கழகத்தில் கூடிய மாணவர் குழு ஒன்று டெனிஸ் ஹேய்ஸ்ஸின் புவி தினக்கொண்டாட்டம் தொடர்பான திட்டங்களைக் கேட்டறிந்தது. இதையடுத்து நியூயோர்க் நகரில் முதலாவது புவி தினம் கொண்டாடத் திட்டமிடப்பட்டது.

சுமார் 10 லட்சம் பேர் பங்கேற்ற இந்தப் புவி தினத்தை பல முன்னணி தொலைக்காட்சி செய்தி நிறுவனங்கள் ஒளி





பரப்பின. அதே காலகட்டத்தில் பிலடெல்பியா நகரின் ஃபேர்மவுண்ட் பூங்காவில் புவி தினம் கொண்டாடப்பட்டது.

அதன் பின்னர் வெவ்வேறு கால கட்டங்களில் புவி தினம் கொண்டாடப்பட்ட நிலையில், 20 ஆம் ஆண்டு கொண்டாட்டங்கள் உலகின் கவனத்தை பெரிதும் ஈர்த்தன. சுமார் 141 நாடுகளில், 2 கோடி மக்களை ஒன்று திரட்டி நடத்தப்பட்ட 1990 ஆம் ஆண்டு புவி தினக் கொண்டாட்டம், ரியோ டி ஜெனீரோவில் 1992 அம் ஆண்டு நடைபெற்ற ஐ.நா. பூமி மாநாட்டுக்கு பெரும் தூண்டுகோலாக இருந்தது.

இதேபோல் புத்தாயிரமாவது ஆண்டில் நடந்த புவி தினக் கொண்டாட்டத்தில் 5 ஆயிரம் சுற்றுச்சூழல் அமைப்புகள் ஒருங்கிணைந்து, 183 நாடுகளில் பூமியை பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்தின.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் கடந்த 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 ஆம் திகதி கொண்டாடப்பட்ட புவி தினத்தில் உலகெங்கும் ஒரு கோடி பேர் பங்கேற்றனர்.

இதன் எதிரொலியாக 2009 ஆம் ஆண்டு, புவி தினம், சர்வதேச பூமி அன்னை தினமாகக் கடைப்பிடிக்கப்படும் என்று ஐ.நா.சபை தீர்மானம் நிறைவேற்றி அறிவித்தது. பூமியும் அதன் சுற்றுச்சூழல் அமைவு ஆகியவையே மனிதர்களின் வீடுகள். எனவே பூமியை இயற்கையுடன் ஒருங்கிணைப்பது அவசியம் என்று அந்தத் தீர்மானத்தில் வலியுறுத் தப்பட்டது.

தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் இரசாயனக் கழிவுகள், வாகனப் புகை, இரசாயன உரங்கள், அணு ஆயுத சோதனை என பல் வேறு வழிகளில் பூமித் தாயின் மேனியை, கொஞ்சம் கொஞ்சமாக சேதப்படுத்திய நாம், இனியேனும், அந்தப் பூமித் தாயை பாதுகாக்க வேண்டும் என்ற சூளுரையை, இந்தப் புவி தினத்தில் ஏற்போம்.

**புவி தினத்தின் அவசியம்**

சூரியக் குடும்பத்தில் நாம் வாழும் பூமிதான் மிகவும் அற்புதமானது. உயிரினங்கள் வாழும் ஒரே கோளும் எமது பூமிதான். மனிதனையும் சேர்த்து தற்போது 10 கோடி வகை உயிரினங்கள் புவியில் வாழ்கின்றன. பூமி உருவானதில் இருந்து இன்று வரை ஏராள மான மாற்றங் கள் நிகழ்ந் துள்ளன. இயற்கை நிகழ்வுகள் மற்றும் பேரழிவுகளால், பூமியின் தோற்றம் மாற்றம் கண்டுள் ளது. இந்த மாற்றங்களால் நன்மைகளும், தீமைகளும் மாறி மாறி ஏற்பட்டுள்ளன.

மனிதன் உருவானபின்னர்தான் புவியின் அழிவு ஆரம்பித்ததாகக் கூறப்படுகிறது. இதற்கு ஏராளமான ஆதாரங்களும் உள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

முக்கியமாக நாம் பயன்படுத்தும் ஏராள மான செயற்கைப் பொருள்களும், நமது செயற்பாடுகளும் பூமியின் முகத்தோற் றத்தை அடியோடு மாற்றி வருகின்றன.

அவற்றில் முக்கியமானவை, எமது பொருளாதாரத் தேவைகளுக்காக காடுகளை அழிப்பதும், நமது சுய லாபத்துக்காக பூமியை அளவுக்கு அதிகமாக மாசுபடுத்துவதும்தான்.

உலகின் நுரையீரல்களாகக் கருதப்படும் தாவரங்களைத் தனது தேவைக்காக மனிதன் அழித்ததன் எதிரொலியாகவே புவி வெப்பமடைகிறது எனவும் ஆய்வாளர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

புவிக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கும் அழிவைத் தடுக்க பூமியைக் காக்க வேண்டும். அதன் இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை உலக மக்களிடையே ஏற்படுத்தவே உருவாக்கப்பட்டது தான் புவி தினம்.

மனிதர்கள் ஏற்படுத்திய பாதிப்புகளால் புவி வெப்பமடைந்து, துருவப் பகுதிகளில் உள்ள பனிப் பிரதேசங்கள் வேகமாக உருகி வருகின் றன. அதன் எதிரொலியாக கடல் மட்டம் உயர்கிறது. நிலப்பகுதிகளும் நீரில் மூழ்கும் அபாயம் உருவாகியுள்ளது.

இந்தச் சுற்றுச்சூழல் சீர்கேடுகளுக்கு மனிதர்களே முழுமுதற் காரணம் என்பதால், புவியைப் பாதுகாக்கும் பொறுப்பும், கடமையும் நமக்கே இருக்கிறது. அதற்காக உருவாக்கப்பட்ட இந்தப் புவி தினத்தில், பூமியைக் காப்பாற்ற எம்மால் ஆன சிறிய முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

உதாரணமாக, வீடுகளில் வெப்பத்தை உமிழும் மின்குமிழ்களுக்குப் பதிலாக டியூப் லைட் அல்லது மின்சாரத்தை குறைவாகப் பயன்படுத்தும் சி.எப்.எல். குமிழ்களைப் பயன்படுத்தலாம். மின்சாரம் தயாரிப்பதற்கு அதிகளவில் தற்போது நிலக்கரியும், அணு உலையும் பயன்படுத் தப்படுகின்றன.


இதில் நிலக்கரி இயற்கை வளமாகும். அதை அளவுக்கு அதிகமாக சில நாடுகள் சுரண்டுவதாலும், புவி வெப்பமடைகிறது. எனவே, தேவை இல்லாத போது மின் உபகரணங்களை அணைத்து வைக்க வேண்டியது அவசியம்.

அதேபோல் சுத்தமான பிராணவாயு கிடைக்க வீடுகளில் மரம் வளர்ப்பது அவசியம் என்பதையும் நாம் உணர வேண்டும். இயற்கையின் கொடையில் முக்கியமானதாகக் கருதப்படும் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். பிளாஸ்ரிக் பொருள்கள் பயன்படுத்துவதை முடிந்தவரை தவிர்க்க வேண்டும். மரங்களை அழித்து காகிதங்கள் உருவாக்கப்படுவதால், அவற்றைப் பயன்படுத்துவதிலும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இறுதியாக, புவி வெப்பத்திற்கு முக்கிய காரணமாக கருதப்படுவது ஓசோன் படலத்தில் விழும் ஓட்டைகள் தான். இந்தப் படலம் சேதமடைவதற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக வாகனங்களில் இருந்து வெளியேற்றப்படும் புகை திகழ்கிறது. எனவே, தனி வாகனங்கள் பயன்படுத்துவதைக் குறைத்து ரயில், பஸ் போன்ற பொது வாகனங்களை பயன்படுத்துவதன் மூலம் புவி வெப்பத்தை நாமும் தடுக்க முடியும்.

நாம் பூமிக்கு ஏற்படுத் திய பாதிப்புகளை போக்க என்ன செய்யலாம்? தனி மனிதராக நாம் எப்படி உதவலாம்? போன்றவை பற்றியும் பார்க்கலாம்.

புதை படிவ எரிபொருள் உபயோகத்தை கட்டுப்படுத்தி புதுப்பிக்கத்தக்க சக்திகளான காற்றாலை,





சூரிய ஒளி திட்டங்களை செயல்படுத்தலாம். இதனால் கரியமில வாயுவினால் ஏற்படும் பாதிப்பு வெகுவாக குறைகிறது. வீட்டளவிலும் இது போன்ற திட்டங்களை தேவைக்கேற்ப நிறுவலாம். மேலும் குறைந்தளவு மின்சாரமே தேவைப்படும் சி.எப்.எல். மின் குமிழ்களை பயன்படுத்தலாம்.

குப்பைகளைக் குறைப்பதால் மீதேன் உள்ளிட்ட ஆபத்தான வாயுக்களின் வெளியேற்றம் தடுக்கப்படுகிறது. ஒவ்வொரு வீட்டிலிருந்தும் 10 சதவீதம் வரை வாயு வெளியேற்றத்தை குறைக்க முடியும். எமது வாழ்வியல் முறையில் மாற்றங்கள் கொண்டு வந்து, கூடிய அளவுக்கு மறுசுழற்சி செய்யலாம். இதனால் தேவைகள் குறைவதோடு அவற்றைத் தயாரிப்பதற்கான எரிபொருளும், சக்தியும் பாதுகாக்கப்படுகின்றன.


ஒவ்வொரு முறை தண்ணீரைச் சுத்திகரிக்கும் போதும், விநியோகிக்கும் போதும் அதிகளவில் ஆற்றல் வீணடிக்கப்படுகிறது. சிக்கனமாகத் தண்ணீரைப் பயன்படுத்துவதோடு, சேமிக்கும் வழிகளையும் யோசிக்கலாம். மழை நீரைச் சேமிப்பதில் அனைவரும் ஆர்வம் காட்டினால் வியத்தகு மாற்றங்கள் ஏற்படும்.

வீடுகளை வெப்பத்திலிருந்து காத்துக்கொள்ள, சுவர்களுக்கு பாதுகாப்பு பூச்சு, ஜன்னல்களுக்கு பருவநிலை காக்கும் கண்ணாடி என பல நவீன அம்சங்களைச் சேர்த்துக் கொள்ளலாம். இதன் காரணமாக அதிக வெப்பத்தை வெளியேற்றும் குளிர்சாதன கருவிகளை எல்லா நேரங்களிலும் உபயோகிப்பதைத் தவிர்க்கலாம்.

அண்மையிலுள்ள இடங்களுக்கு நடந்தோ, சைக்கிளிலோ செல்லலாம். தேவைப்படும் நேரங்களில் பொதுப்போக்குவரத்தைப் பயன்படுத்த எண்ணலாம். வாகனத்தை இயக்குவதாக இருந்தாலும் அது நல்ல நிலையில் இருக்கிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும். வாகனங்களாலும் அதிகளவில் எரிபொருள் வீணடிக்கப்படலாம்.

தேவைப்படும் நேரங்களைத் தவிர பிற நேரங்களில் மின்சாரம் பயன்படுத்துவதை தவிர்க்கலாம்.

பல வகை மாசுகளால் மூச்சுத் திணறிக் கொண்டிருக்கும் பூமிக்கு பிராணவாயுவைக் கூட்டவும், ஏற்படுத்தப்பட்டுள்ள பாதிப்புகளிலிருந்து எம்மைப் பெருமளவு காப்பாற்றவும் தேவைப்படுவது மரங்கள். நிழல்தரும் மரங்கள் வளர்ந்தால், பூமி சற்றே இளைப்பாறும்.



## இன்று உலக புவி தினம்

இன்று உலக புவி தினம்
இயற்கையை
வாழ வைக்கும் தினம்
பூமியை மாற்றுவோம்
எங்கும் பச்சை
எதிலும் பச்சையாய்
பனித்துளிகளில் நீராடி
புல்வெளிகளில்
படுத்துக்கொள்வோம்
மரங்கள் நடுவோம்
மழையை
வரவேற்போம்
வறண்ட பூமியெங்கும்
சோலைகளால்
வாழ்த்துச் சொல்வோம்..



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: ஒரு சில பணி காரணமாக வீட்டை விட்டு வெளியில் தங்க நேரிடலாம். செலவு உண்டாகும். திடீர் கோபங்கள் உண்டாகலாம். நிதானமாக இருப்பது நல்லது. புத்திசாதுரியத்தால் எதையும் சமாளிப்பீர்கள்.



**இடபம்**: தெளிவான சிந்தனை தோன்றும். எந்தக் காரியத்தையும் செய்யும் முன் ஆலோசனை செய்து அதில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். சாமர்த்தியமான உங்களது செயல் கண்டு மற்றவர்கள் ஆச்சரியப்படுவார்கள். முக்கிய நபர்கள், அந்தஸ்தில் உயர்ந்தவர்கள் நட்புக் கிடைக்கும்.



**மிதுனம்**:உங்கள் கௌரவம் அதிகரிக்கும். புதிய தொடர்புகள் மகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரம் தொடர்பாக புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். அதனால் நன்மை உண்டாகும். உங்கள் கீழ் பணியாற்றுபவர்கள் சிறப்பாகப் பணிபுரிந்து உங்கள் நிலையை உயரச் செய்வார்கள்.



**கடகம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் புதிய பொறுப்பு கிடைக்க பெறுவார்கள். சக பணியாளர்கள் மூலம் நன்மை உண்டாகும். அலுவலகம் மூலம் வாகனம் கிடைக்கலாம். என்றோ செய்த ஒரு வேலைக்கு இப்போது பாராட்டுக் கிடைக்கலாம். குடும்பத்தில் உள்ளவர்களால் வருமானம் கிடைக்கலாம்.



**சிங்கம்**: பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள். அடுத்தவர் ஆச்சரியப்படும் வகையில் சாமர்த்தியமாக காரியங்களை செய்து வெற்றி பெறுவீர்கள். புதிய நட்பு மூலம் மகிழ்ச்சி கிடைக்கும்..



**கன்னி**: எல்லா விதத்திலும் நன்மை உண்டாகும். எதையும் துணிச்சலுடன் எதிர்கொள்வீர்கள். தடைப்பட்டு வந்த காரியங்களில் தடை நீங்கும். சாமர்த்தியமான பேச்சால் ஆதாயம் உண்டாகும். உங்கள் செயல்களுக்கு தடைகளை ஏற்படுத்தியவர்கள் தாமாகவே விலகிச் செல்வார்கள்.



**துலாம்**: முக்கிய பொறுப்புகளில் இருப்பவர்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சாதுரியமான பேச்சால் மேல் அதிகாரிகளின் கட்டளைகளை நிறைவேற்றிப் பாராட்டுப் பெறுவார்கள். நீண்ட நாள்களாக தடைப்பட்ட பதவி உயர்வு உங்களைத் தேடி வரலாம்.



**விருச்சிகம்**: விருந்தினர் வருகை இருக்கும். தடைப்பட்டு வந்த திருமண காரியங்கள் சாதகமாக நடக்கும். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள். குடும்பத்தில் வீண் விவாதங்கள் தோன்றும். கவனம் தேவை.



**தனுசு**: சாதுரியமான பேச்சால் ஆதாயம் உண்டாகும். சகல நன்மைகளும் உண்டாகும். செல்வாக்கு உயரும். வாழ்க்கைத்தரம் உயர எடுக்கும் முயற்சிகள் கை கூடும். நெருக்கமானவர்களுடன் மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிப்பீர்கள்.



**மகரம்**: முன்பின் யோசிக்காமல் எதையாவது பேசி விடுவீர்கள். இதனால் வீண் மனஸ்தாபங்கள் ஏற்படலாம் கவனம் தேவை. தொழில், வியாபாரம் தொடர்பான பேச்சுவார்த்தைகளின் போது மிகவும் நிதானமாக பேசுவது நன்மை தரும். எதிர்பார்த்த பணம் தாமதப்படும்.



**கும்பம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஏதாவது ஒரு வகையில் அலைச்சல், கூடுதல் செலவைச் சந்திப்பார்கள். வேறு ஒருவர் செய்த செயலுக்கு வீண் பழி ஏற்க வேண்டி இருக்கும். எனவே கவனம் தேவை.



**மீனம்**: உறவினர்களிடம் பேசும் போதும் அவர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் போதும் நிதானமாக இருப்பது நல்லது. உங்களது பொருள்களைப் பத்திரமாக வைத்துக் கொள்வது நல்லது. முன் பின் யோசிக்காமல் பேசுவதைத் தவிர்ப்பது நல்லது. முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும்.

## நாளை

**சித்திரை-10 புதன்கிழமை | 23.04.2014**

திதி: நவமி மு.இ.10.13 வரை
நட்சத்திரம்: திருவோணம் பி.ப.3.20 வரை
சுபநேரம்: 04.30-6.00 வரை
இராகுகாலம்:.12.00-01.30 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...




### பக்தி மூலம் யோகம் பழகுதல்

இராஜயோகம் பற்றியும் சுவாசப் பயிற்சிகள் குறித்தும் இதுவரை அறிந்து கொண்டோம். இனிமேல் பக்தி மூலம் யோகப் பயிற்சி பெறுவது எப்படியென்பதை ஆராய்வோம். இதற்கு ஒரு குறிப்பிட்ட முறைதான் அவசியம் என்பதில்லை. இதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். உங்களுக்கு ஏற்ற ஒன்றைத் தேர்ந்தெடுப்பதற்காகப் பல முறைகளையும் ,கோட்பாடுகளையும் உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். ஒன்று பொருந்தாவிடில் , மற்றொன்று பொருந்தக்கூடும்.

நம்முடைய உடல், ஆன்மா, அறிவு, செயல் ஆகிய அனைத்தும் சம வளர்ச்சி பெற்று, முழு மனிதர்களாகத் திகழ நாம் விரும்புகிறோம். தேசங்களும் தனிப்பட்டவர்களும் இவற்றில் ஏதாவது ஒன்றில் அதிக வளர்ச்சி பெற்றவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் தான் அவர்களுக்கு அந்தக் குறிப்பிட்ட நிலை தவிர மற்றவை விளங்குவதில்லை. ஏதாவது ஒன்றில் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டிருப்பதால், மற்ற எதனையும் அவர்கள் பார்க்கவும் முடியாதவர்களாய் இருக்கின்றனர். சிறந்த இலட்சியம் என்பது நாம் பல நிலைகளையும் அறிந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதுதான். நம்மில் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு நிலை வரைப் பெற்றவர்களாய் இருப்பதால், மற்றவர்கள் மீது அனுதாபமோ, ஆதரவோ காட்ட முடியாதவர்களாக இருக்கின்றோம். உலகின் துன்பங்கள் எல்லாம் இதனால் தான் ஏற்படுகின்றன.

## இரும்பை விட வலிமையான கண்ணாடி



கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 1.20 லட்சம் கலவை தாதுக்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இரும்பை விட உறுதி மிக்க, எளிதில் உடையாத கண்ணாடியை அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழக விஞ்ஞானிகளே இந்தக் கண்ணாடியை உருவாக்கியுள்ளனர்.

இதுகுறித்து விஞ்ஞானிகள் குழு தலைவர் ஜோன் ஸ்கோர்ஸ் கூறுகையில்: வளையும் தன்மையுடன் இரும்பை விட வலிமையான இந்த தாதுக்கு'பல்க்மெட்டாலிக் கிளாஸ்' (பி.எம்.ஜி) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்தப் புதிய கண்ணாடியைக் கொண்டு உடையாத மருத்துவ உபகரணங்கள், மொபைல் போன் மற்றும் மின்சாதனப் பொருள்களைத் தயாரிக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 1.20 லட்சம் கலவை தாதுக்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | | | 9 | 4 | 1 | 2 |
| 2 | 6 | | 1 | 5 | | | 3 | |
| | | | | | | 8 | 6 | |
| 4 | | 1 | 9 | 8 | 6 | | 5 | |
| | | | | | | | | |
| | 9 | | 3 | 2 | 7 | 1 | | 4 |
| | 7 | 9 | | | | | | |
| | 5 | | | 9 | 4 | | 7 | 1 |
| 3 | 4 | 8 | 5 | | | | 2 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 1 | 2 | 6 | 5 | 9 | 3 | 8 |
| 5 | 2 | 8 | 1 | 9 | 3 | 6 | 7 | 4 |
| 9 | 6 | 3 | 7 | 4 | 8 | 1 | 5 | 2 |
| 1 | 5 | 4 | 8 | 7 | 2 | 3 | 9 | 2 |
| 6 | 8 | 9 | 4 | 3 | 1 | 5 | 2 | 7 |
| 2 | 3 | 7 | 6 | 5 | 9 | 4 | 8 | 1 |
| 8 | 1 | 5 | 3 | 2 | 4 | 7 | 6 | 9 |
| 4 | 9 | 6 | 5 | 8 | 7 | 2 | 1 | 3 |
| 3 | 7 | 2 | 9 | 1 | 6 | 8 | 4 | 5 |

# தனிப் பண்புடைய கொமர்ஷல் வங்கி

பிராண்ட் பினான்ஸ் லங்கா நிறுவனம் தொகுத்துள்ள 2014ஆம் ஆண்டுக்கான வர்த்தகத் துறையில் தனிப் பண்புடைய நிறுவனமாக கொமர்ஷல் வங்கி மூன்றாவது வர்த்தக தரத்தில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
வருடத்துக்கான எல்.எம்.டி வர்த்தக தர வெளியீட்டில் இது பிரசுரமாகியுள்ளது.
கொமர்ஷல் வங்கி இந்தத் தெரிவில் கடந்த ஆண்டை விட இரண்டு இடங்கள் முன்னேறியுள்ளது. அதிஉயர் இடம் பிடித்துள்ள தனியார் பிரிவு வர்த்தக தரமாக இது திகழ்கின்றது. இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கியான கொமர்ஷல் வங்கி பிராண்ட் பினான்ஸின் சுதந்திர மதிப்பீட்டாளர்களால் 22.32 பில்லியன் ரூபாவாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
இந்த வரிசையில் இடம்பிடித்துள்ள முன்னணி நிறுவனங்களோடு ஒப்பிடுகையில் 2013இல் 47 வீத அதிக வளர்ச்சியையும் பதிவு செய்துள்ளது.
இலங்கையின் மிகவும் மதிப்புடைய வர்த்தக தரத்தில் அதி நவீன வரிசையில் இடம்பிடித்துள்ள கொமர்ஷல் வங்கி. தர வரிசையில் அடைந்து வரும் தொடர்ச்சியான வளர்ச்சி வியப்பளிக்கின்றது என பிராண்ட பினான்ஸ் குறிப்பிட்டுள்ளது.
2014 தர வரிசையில் நிதிச் சேவை பிரிவுகள் ஆதிக்கம் செலுத்துகின்றன. மொத்த வர்த்தக தர பெறுமதியான 348 பில்லியன் ரூபாவில் 42 வீத அல்லது 148.8 பில்லியன் ரூபாவை வங்கிகள் கொண்டுள்ளன. இலங்கையின் பத்து முன்னணி வர்த்தக தரத்திற்குள் ஐந்து வங்கிகள் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.
இலங்கையின் மிகச் சிறந்த தனியார் வர்த்தக தரம் என்று நாம் தெரிவு



செய்யப்பட்டுள்ளமை உண்மையிலேயே எமக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது. ஏனெனில் வர்த்தக தர பெறுமான மதிப்பீடு விடயத்தில் முக்கிய அம்சமாக பங்குதாரர்களோடு நிறுவனம் கொண்டுள்ள உறவின் வலிமையும் கணிக்கப்படுகின்றது என்று கூறினார் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரவி டயஸ். உறுதியான வர்த்தக சமநிலை என்பது வாடிக்கையாளரின் நம்பகத் தன்மையோடும் புதிய வாடிக்கையாளர்களைப் பெற்றுக் கொள்வதோடும் பெரும்பாலும் நேரடித் தொடர்புடையது. ஆகவே இந்தத் தரப்படுத்தலானது வங்கியின் ஒட்டுமொத்த அணிக்குக் கிடைத்துள்ள பரிசாகும் என்றார்.
எமது கூட்டாண்மை தரத்தின் பெறுமானத்தைக் கட்டியெழுபபும் அதே வேளை பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட சந்தைப்படுத்தலில் கவனம் செலுத்துவதன் மூலம் நீண்டகால வருமானங்களையும் கட்டியெழுப்பும் நிலையில் வங்கி தற்போது உள்ளது. வர்த்தக தரத்தை கட்டியெழுப்பக் கூடிய சாதகமான பெறுபேறுகளை ஈட்டித் தரும் நடவடிக்கைகளுக்கும் இது வழியமைத்துள்ளது என்று அவர் மேலும் கூறினார்.
கொமர்ஷல் வங்கியின் வர்த்தக தர பெறுமானமானது அதன் நன்மதிப்பு. மிக நன்றாக ஸ்தாபிக்கப்பட்ட நிதி ஸ்திரப்பாடு. மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய விதம், அதற்கான வசதிகள் மற்றும் சேவைகளினது தரம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டது. அத்தோடு வங்கியின் கூட்டாண்மை சமூகப் பொறுப்பு அர்ப்பணம். அதன் நீடித்து நிலைக்கும் இயல்பு. அது சேவை புரியும் சமூகத்துடனான உறவுகள், என்பனவும் இந்த வர்த்தக தர பெறுமானத்துக்கு கணிசமாகப் பங்களிப்புச் செய்துள்ளன.
சிறந்த எதிர்காலத்துக்காக என்பதே வங்கியின் வர்த்தக தர நிலையாகும். இந்த நிலையின் கீழ் அண்மையில் உங்கள் தேவைகளுக்கு ஏற்ற தனியார் மயப்படுத்தப்பட்ட சேவைகள் என்ற பிரசாரமும் முன்னெடுக்கப்பட்டது. (த)



# சமூக வலைத்தள ஆர்வலர்களுக்காக கன்வஸ் சோசியல் ஏ 94

இலங்கையின் கையடக்க தொலைபேசிச் சந்தையில் தனது தலைமைத்துவ நிலையை மேலும் உறுதி செய்யும் வகையில் உலகளாவிய ரீதியில் உலகில் 10 ஆம் நிலையில் காணப்படும் கையடக்க தொலைபேசி உற்பத்தி நிறுவனமான மைக்ரோமெக்ஸ் நிறுவனம் கன்வஸ் சோசியல் ஏ 94 (Canvas Social A94) என்ற புதிய கையடக்க தொலைபேசியை அறிமுகம் செய்துள்ளது. சமூக வலைத் தளங்களில் தமது நேரத்தை செலவிட ஆர்வமாக உள்ள பாவனை யாளர்களுக்கு பொருத்தமான வகையில் இந்த ஸ்மார்ட் ஃபோன் அமைந்துள்ளது.
இந்த ஏ 94 கையடக்க தொலைபேசியானது 4.5 அங்குல தொடு திரையை கொண்டுள் ளதுடன், முன்புறமும் பின்புறமும் 5 எம்.பி திறன் கொண்ட கமராவை கொண்டுள்ளது. உயர் திறன் வாய்ந்த முன்புற கமராவின் மூலம் பாவனையாளர்களுக்கு தமது தோற்றத்தை தெளிவாக படம் பிடித்துக் கொள்ள முடியும். அத்துடன் வீடியோ மூலமான உரையாடல்களை உயர்தரத் தில் முன்னெடுக்க உதவும் வகையில் இந்த கமரா அமைந்துள்ளது. 1.2 ஜி.எச்.இசற் குவாட் கோர் புரொசஸ்சர் மற்றும் 1800 எம்.ஏ.எச் பற்றரி ஆகியவை ஒவ்வொரு சமூக வலைத்தள பாவனையாளர்களின் தேவை களையும் நிவர்த்தி செய்வதை உறுதி செய்கின்றன.

இந்தப் புதிய கையடக்க தொலைபேசி அறிமுகம் தொடர்பில் மைக்ரோமெக்ஸ் நிறுவனத்தின் சர்வதேச வியாபார நடவடிக் கைகளுக்கான உதவி தலைவர் அமித் மத்தூர் கருத்து தெரிவிக்கையில், 'எமது உறுதியான சந்தைகளில் இலங்கையும் ஒன்று. நாம் வர்த்தக நடவடிக்கைகளுக்கு மிகவும் முக்கியத்துவம் வழங்கும் பகுதிகளில் இதுவும் ஒன்றாக அமைந்துள்ளது. எமது வாடிக்கையாளர்களுக்கு நவீன தொழில் நுட்பத்தில் அமைந்த அனுபவங்களை வழங்கும் வகையிலமைந்த தயாரிப்புகளை அறிமுகம் செய்வது தொடர்பில் அதிகளவு கவனம் செலுத்துகிறோம். கன்வஸ் சோசியல் ஏ 94 இன் அறிமுகத்துடன் இலங்கையின் அனைத்து பாவனையாளர்களுக்கும் தொழில் நுட்பம் மற்றும் நவீன தோற்றத்துடன் கூடிய புதிய தயாரிப்பை வழங்கியுள்ளோம். தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்வது தொடர்பில் எமது அர்ப்பணிப்பை இந்த புதிய தயாரிப்பு பூர்த்திசெய்வதுடன் பாவனை யாளர்களுக்கு சிறந்த அனுபவத்தை வழங்கும் வகையிலும் இது அமைந்துள்ளது' என்றார்.
32 ஜி.பி வரை அதிகரித்துக் கொள்ளக்கூடிய மெமறியைக் கொண்டுள்ள இந்த புதிய கையடக்க தொலைபேசி, பாடல்கள், வீடியோக்கள், படங்கள் மற்றும் கோப்புகள் ஆகியவற்றை தரவிறக்கம் செய்து சேமித்து வைக்கக்கூடிய வசதிகளைக் கொண்டுள்ளது. கன்வஸ் சோசியல் ஏ 94 ஒன்றின் விலை 15,990 ஆக அமைந்துள்ளது. நாட்டின் சகல முன்னணி விற்பனை நிலையங்களிலி ருந்தும் இதனை வாடிக்கையாளர்கள் கொள் வனவு செய்யலாம். (த)



# சாவகச்சேரி மக்கள் வங்கியின் சிறுவர்களுக்கான பரிசு வழங்கல்

தென்மராட்சி, ஏப். 22
சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி மக்கள் வங்கியில் சிறுவர் சேமிப்பு கணக்குகளான 'இசுறு உதான', 'சிசு உதான' ஆகிய கணக்குகளை வைத்துள்ள சிறார்களின் சேமிப்புக் கணக்குகளின் பிரகாரம் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்ட சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கல் நிகழ்வுகள் நாடளாவிய ரீதியில் உள்ள மக்கள் வங்கிகளில் இடம்பெற்றது.
ஐந்து வயதுக்கு உட்பட்ட 'இசுறு உதான' கணக்கு வைத்துள்ள சிறார்களுக்கு சிறிய மடிக் கணினி களும், 5 வயதுக்கு மேற்பட்ட 'சிசு உதான' கணக்கு வைத்துள்ள சிறார்களுக்கு தொலைநோக்கிகளும் பரிசாக வழங்கப்பட்டன. சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையில் இரு சிறார்களுக்கு சிறிய மடிக்கணினிகளும் ஏழு சிறுவர்களுக்கு தொலைநோக்கிகளும் பரிசாக வழங்கப்பட்டன. அத்துடன் கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற, சாவகச்சேரி கிளையில் சிறுவர் கணக்கு வைத்துள்ள மாணவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்ட 33 மாணவர்களுக்கு வழமையான பரிசுத் தொகையுடன் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. கிளை முகாமையாளர் ஜீ.விஜய குமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.சுசீந்திரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார். (த-9)



லங்கா சித்த ஆயுள்வேத வைத்தியக் கல்லூரியில் கல்வி பயின்ற சுதேச வைத்திய மாணவர்களுக்கான பட்டமளிப்பு கடந்த சனிக்கிழமை யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. சுதேச வைத்திய பிரதி அமைச்சர் பண்டு பண்டாரநாயக்க பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பட்டச் சான்றிதழ்களை வழங்கினார். (வ-135)

## வவுனிக்குளத்தில் இருந்து நேற்றுத் தண்ணீர் திறப்பு

துணுக்காய், ஏப்.22

முல்லைத்தீவு மாவட்டம், வவுனிக்குளம் கால்நடைகளின் குடிதண்ணீர் தேவைக்காக நேற்று திங்கட்கிழமை திறந்து விடப்பட்டுள்ளது என்று வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பா.விகர்ணன் தெரிவித்தார்.

வவுனிக்குளத்தில் தற்போது 7 ½ அடி தண்ணீர் உள்ளது. பயிர்ச் செய்கைக்கு இந்த அளவு தண்ணீர் போதுமானதாக இல்லை.

எனினும் கால்நடைகளின் குடிதண்ணீருக்காக 2 அங்குல நீர் நேற்று திறந்து விடப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (ச-18)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**மங்களேஸ்வரி பாலேந்திரன்**

தோற்றம்
31*12*1949

மறைவு
02*05*2013

திதி: 22.04.2014

அணையாத நினைவோடு
ஆண்டு ஒன்று ஆனதுவோ எம் சிற்றன்னையே!!
கண்ணயர்ந்து காலம் கடந்தனவோ
எம் விழி நீர் சொரியுதம்மா
உங்கள் நினைவுகளோடு
எம்மை வாழ வழியமைத்த
எம் அன்புத் தெய்வமே! நாம் வளர மடி தந்த
எங்கள் அன்புச் சிற்றன்னையே
இன்றும் உங்கள் நினைவுகளை என்றும் எம்
உள்ளமதில் சுமந்து நிற்கின்றோம்.

(47065)(2.6.3)

டச்சு வீதி, உடுவில். குடும்பத்தினர்.

## புதிய கற்கை நெறிகள் ஜூனில்

யாழ்ப்பாணம், ஏப்.22

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டாம் அரையாண்டுக்கான கற்கை நெறிகளை எதிர்வரும் ஜூன் மாதம் ஆரம்பிக்கவுள்ளது. கற்கை நெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், சுன்னாகம், நல்லூர், சண்டிலிப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய தொழிற் பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளன. இந்தக் கற்கை நெறிகளாவன: தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், கணினி வன்பொருள் திருத்துநர், கட்டட நிர்மாண உதவியாளர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், வீட்டு மின்னிணைப்பாளர், அலுமினியம் பொருத்துநர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), பெண்கள், சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், அழகுக்கலை வல்லுநர், மரவேலை தொழில்நுட்பவியலாளர் (தளபாடம்), வீட்டு மின்சார உபகரண திருத்துநர், மின் மோட்டார் வைண்டிங், கணினி பட வடிவமைப்பாளர், நீர்க்குழாய் பொருத்துநர் என்பனவாகும். இவ் அனைத்து கற்கை நெறிகளும் தேசிய தொழில் தகமை சான்றிதழுக்கான பயிற்சிகளாகும். கற்கவிரும்புவர்கள் குறிப்பிட்ட கற்கை நெறிகளில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஓ)

## சுதுமலை அம்பாளுக்கு மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப்.22

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ ஸ்வர்ண பந்தன ஸ்தாபித பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் 9 மணி வரையுள்ள ரிஷப லக்கின சுபமுகூர்த்தத்தில் நடைபெறும்.

நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

கும்பாபிஷேகக் கிரியைகள் சிவஸ்ரீ சம்பு மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெறும். (ஓ)

## கண்ணீர் அஞ்சலி

குப்பிளான் காளியம்பாள் ஆலயத்தின் வளர்ச்சிக்காக
அயராது பாடுபட்ட அமரர்களான

**கந்தையா சண்முகம்**

(ஓய்வுபெற்ற அதிபர், முன்னாள் தலைவர் - 1980 - 1990)

**நாகையா இராமலிங்கம்**

(ஓய்வுபெற்ற ஆசிரியர், முன்னாள் உபதலைவர்)

ஆகியோரினது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவர்களது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல காளியம்பாளைப் பிரார்த்திக்கின்றோம். (47037) (12.3.6)

ஆலய பரிபாலன சபையினர்,
குப்பிளான் வடக்கு, ஏழாலை.

## பெருமாள் கோவிலில் சுதர்சன ஹோமம்

யாழ்ப்பாணம், ஏப்.22

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் நாளை புதன்கிழமை காலை 7 மணி தொடக்கம் சுதர்சன ஹோமம் நடைபெறவுள்ளது.

நண்பகல் 12 மணிக்கு சக்கர ஆழ்வார் உற்சவம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னதான நிகழ்வும் இடம்பெறும். (ஓ)

## மரண அறிவித்தல்கள்

### குமாரசாமி பாலச்சந்திரன்

[ஓய்வுபெற்ற தபால் சேவகர், புங்குடுதீவு]



புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு C.C.T.M.S ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி பாலச்சந்திரன் நேற்று (21.04.2014) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி-மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பு-அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும், கனகாம்பிகையின் பாசமிகு கணவரும், துவாரகாவின் அன்புத் தந்தையும், குணேந்திரன் (சுவிஸ்), காலஞ்சென்ற பத்மலோஜினி மற்றும் யோகமலர் (லண்டன்), காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் தோமேஸ்வரி (வவுனியா), விவேகானந்தன் (சவூதி), சுதர்சினி (கண்டி), சிவந்தினி (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான குணமணி, கனகலிங்கம், குணாகரன் மற்றும் திருநாவுக்கரசு (கனடா), சித்திரா (கண்டி), விஜேந்திரன் (வவுனியா), கமலாதேவி, ஜானாம்பிகை, திலகவதி ஆகியோரின் மைத்துனரும், அனிதா, சக்திதாசன் (நோர்வே) ஆகியோரின் பெரிய தந்தையும், காலஞ்சென்றவர் களான யோகநாதன், சிவசுந்தரராசா, தனபாலசிங்கம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

C.C.T.M.S. லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (47081) (7.6.3)

தகவல் :
சகோதரர்கள்

## மோட்ச தீப அழைப்பு

கடந்த 02.04.2014 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் சுப்பிரமணியம் பரராசசிங்கம்**

(வெள்ளையப்பா)



அவர்களின் மோட்ச தீபக் கிரியைகள் இன்று (22.04.2014) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் மோட்சப்பேறுக்கான பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
பிரசன்னா பந்தல் (47062) (7.6.3)
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு.

## மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.22

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்தப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாநகர சபை மண்டபத்தில் முதல்வர் தலைமையில் நடைபெறும். (வ-7)

### திருமதி ரூபரட்ணேஸ்வரி சிவயோகநாதன்

[முன்னாள் கணக்காளர், ப.நோ.கூ.சங்கம், சங்கானை]



யாழ். மாதகல் விபுலானந்தர் வீதியைப் பிறப்பிடமாகவும், நெதர்லாந்து Roermond ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ரூபரட் ணேஸ்வரி சிவயோகநாதன் 13.04.2014 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் இரட்ணசபாபதி (ஓய்வு பெற்ற கூட்டுறவு பரிசோதகர்) -காலஞ்சென்ற சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கைலாயபிள்ளை-பகவதி தம்பதிகள், நடராஜா(ஓய்வுபெற்றகிராம சேவ கர்)-புஸ்கலாதேவி தம்பதிகள் ஆகியோரின் அன்பு மருமகளும், சிவயோகநாதன் அவர்களின் அன்பு மனைவியும், பரமேஸ் வரன் (ஜேர்மனி), விஜயேஸ்வரி(கனடா), காலஞ்சென்ற நகுலேஸ்வரன், ஜெகதீஸ்வரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம்-சண்டிலிப்பாய்), கேதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரி யும், சுஜாதா(ஜேர்மனி), சாந்தகுமார் (கனடா),பவித்திரா (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச சபை-மானிப்பாய்) குகன்(விரிவுரையாளர், ஆசிரிய கலாசாலை - கோப்பாய்) இராமதாஸன் (பிரான்ஸ்), புஸ்கலாதேவி(லண்டன்), சோமேசன் , விமலாதேவி, தங்கேஸ்வரி (பிரான்ஸ்), சிறிதரன், தனஞ்சியன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சனந்தியா, மிதுலா, மதுஷியா ஆகியோரின் மாமியும், சர்மிலன், கனிஷியா ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2014) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வரியப்புலம், சுன்னாகம் கிழக்கு, சுன்னாகத்திலுள்ள மாமன் (நடராசா)வின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விபுலானந்தர் வீதி,
மாதகல்.
தொ.பே.இல: 021 221 1871 (47057) (7.6.3)

தகவல்:
பொ.இரட்சபாபதி
(தந்தை)

## மரண அறிவித்தல்

### பொன்னையா வேலாயுதபிள்ளை



இடைக்காடு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், துன்னாலை, கரவெட்டியை வசிப்பிடமாகவும், தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய பொன்னையா வேலாயுதபிள்ளை 17.04.2014 கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பெரியதம்பி -செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், வள்ளி நாயகியின் பாசமிகு கணவரும், சிவராம், சிவசிறி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான தியாகராசா, கனகராசா மற்றும் கண்மணி, அன்னபூரணம், சிவகாமி, முருகையா, மீனாச்சிஅம்மை, நடராசா, தேவசிகாமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2014) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
சகோதரர்கள்

இடைக்காடு, அச்சுவேலி. (47057) (7.6.3)

## உயர்தர பெறுபேற்றை அதிகரிக்க மாணவருக்கு விசேட வகுப்புகள்


வலி.வடக்கு, ஏப். 22

வலிகாமம் கல்வி வலயத்தால் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேற்று அடைவு மட்டத்தை அதிகரிக்க வைக்கும் வகையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள எஸ் திட்டத்தின் கீழ் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் உடுவில் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம், கலை, வர்த்தகப்பிரிவு மாணவர்களுக்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட பாட விதானத்துக்கு அமைய வலிகாமம் கல்வி வலய ஆசிரியர் குழாத்தினால் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடை பெறும் கணித, விஞ்ஞான வகுப்புக்களில் 102 மாணவர்கள் கலந்து கொள்வதுடன், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் கலை, வர்த்தக வகுப்புக்களில் 134 மாணவர்களும் கலந்து கொள்வதாகவும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராசா தொவித்துள்ளார். (வ-86)

## மரண அறிவித்தல்

### Dr. Chelvadurai Indrarajah



உரும்பிராயைச் சேர்ந்த வைத்திய கலாநிதி செல்வதுரை இந்திரராஜா நேற்று (21.04.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அம்பிகையின் அன்புக் கணவரும், றோஹினி, கௌரி, உமையாள் மற்றும் நாகேஷ் ஆகியோரின் அருமைத் தந்தையும், நாகலிங்கம், சத்தியேந்த்ரா, லக்ஷ்மன் ஆகியோரின் அன்பு மாமாவும், நிருத்தனன், மிதுனன், ஆர்வலன், ஆகாஷ், விதுஷா ஆகியோரின் பாசமுள்ள பேரனும் ஆவார்.

மேலும் காலஞ்சென்றவர்களான செல்வதுரை-செல்லமுத்து தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான துரையப்பா-கமலநாயகி மற் றும் பாலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், மனோன்மணி, காலஞ்சென்றவர்களான நடராஜா, தியாகராஜா, சிவபாக்கியம், பேரின்பம், செல்வராஜா ஆகியோரின் சகோதரரும், சிவசுப்பிரமணியம், லிலியன், காலஞ்சென்றவர்களான மஹாலக்ஷ்மி, மஹேஸ்வரி, ரட்ணசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை (23.04.2014) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று, தகனக் கிரியைகள் மு.ப. 10.00 மணியளவில் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

"செல்வம்" உரும்பிராய். (47081)(10) தகவல்: குடும்பத்தினர்.

## VACANCIES

### UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

### FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE

University of Jaffna will entertain applications upto 05.05.2014 from suitably qualified persons for the post of **Temporary Lecturer/Demonstrator** in the following disciplines:

**Marketing, Human Resource Management, Financial Management, Accounting, Commerce**

**Note: Candidates who are awaiting the results of the final degree examinations will be considered for the post of Temporary Demonstrator.**

| POST | SALARY SCALE |
|---|---|
| Temporary Lecturer | Rs. 26,020/= p.m. (Fixed) |
| Temporary Demonstrator | Rs.21,370/= p.m. (Fixed) |

In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid.

Applications for the above post shall be sent to the Senior Assistant Registrar/Academic Establishments, University of Jaffna, Thirunelvely, Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self -addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**Registrar,**
University of Jaffna,
Srilanka
21.04.2014

## 65 வாகன விபத்துக்களில் 80 பேர் சாவு

கொழும்பு,ஏப்.22

நாட்டின் பல பாகங்களிலும் கடந்த 10 நாள்களுக்குள் இடம்பெற்ற மோசமான 65 வாகன விபத்துக்களில் இதுவரை 80 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் மூலம் மது போதையில் வாகனங்களை செலுத்திய 1761 சாரதிகள் கைது செய்யப்பட்டனர் என்றும் அவர்கூறினார். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் 130 சாரதிகள் இந்த வகையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அவர் சுட்டிக்காட்டினார். (ச)

## வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு,ஏப்.22

வெளிநாடொன்றில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியொன்றை வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டி நபரொருவர் வெலிகம, பொல் அத்துமோ தற பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை குற்றத் தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின் போதே இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்புறுகம பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதான சந்தேக நபரை மாத்தறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ச)

## குளவித் தாக்குதலால் இருபது பேர் பாதிப்பு

கண்டி,ஏப்.22

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா, மாணிக்கவத்தை தோட்டத்தில் தேயிலைக் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த 20 பெண்தொழிலாளர்கள் குளவி தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

அவர்களில் 8 பேர் டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மரண அறிவித்தல்

### ஜோசப் குணராஜா நெவின்ஸ்



யாழ்ப்பாணம், 3ஆம் குறுக்குத்தெருவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசப் குணராஜா நெவின்ஸ் (ஓய்வுபெற்ற பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்) நேற்று (21.04.2014) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.இ: 0779214059,
56, 3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (47076)(10)

தகவல்:
மனைவி, மக்கள்.

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் முருகதாசன்



வங்களாலேன் மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் முருகதாசன் நேற்று (21.04.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் (பிரபல வர்த்தகர் - சுன்னாகம்) - இராசம்மா தம்பதியரின் அனபுமகனும் தயானியின் அன்புக்கணவரும் மணிமேகலா, விக்னேஸ்வரன், புனிதவதி, தாட்சாயினி (யூனியன் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவமலர் (லண்டன்) காலஞ்சென்ற ஞானமலர், அருந்ததி (பிரான்ஸ்), சந்திரமலர், சிவகுமாரி, பாலகௌரி (கனடா), பாலசரஸ்வதி, கண்ணதாசன் (கண்ணதாசன் பான்சி, சுன்னாகம்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சின்னத்தம்பி மற்றும் தங்கராசா (பிரான்ஸ்), தேவராசா காலஞ்சென்ற ஸ்ரீவரதலிங்கம் மற்றும் அரசரட்ணம் (கனடா), சந்திரகுமாரன், வசந்தகுமாரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2014) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வை. கண்ணதாசன்
( சகோதரன் - கண்ணதாசன் பான்சி)

## மரண அறிவித்தல்

### முருகேசு திருநாவுக்கரசு

(முன்னாள் பிரதம லிகிதர் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்)



வேலணை கிழக்கு மணியகாரர் வீட்டடியைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு திருநாவுக்கரசு நேற்று (21.04.2014) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னம்மா தம்பதியரின் மூத்தபுதல்வனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதி யரின் அன்புமருமகனும் திலகவதியின் அன்புக்கணவரும் முரளிதரன், கிரதரன், சிறிதரன், கலாதரா, வசுந்தரா (லதா), சுமித்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பேரின்பநாயகி, திலகா, ஜெயவதனி, பிரபாகரன், புஸ்பநாதன் ஆகியோரின் அன்புமாமனாரும் தனுஷியன், கௌரிஷன், ஆதிதன், அக்ஷாயினி, அகர்ஷியா, திலக்ஷன், சஜீவன், மதுஷன், லக்ஷிகா ஆகியோரின் அன்புப்பேரனும் சண்முகசேகரம், வரதராஜா ஆகியோரின் அன்புச்சகோதரனும் தங்கராணி, சிவஞானசுந்தரி, புனிதவதி காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் பத்மாவதி, கமலாதேவி, லக்ஷ்மிதேவி, தயாநிதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், கணேசலிங்கம் மற்றும் குணரத்தினம், மகேந்திரநாதன் ஆகியோரின் சகலனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.04.2014) புதன்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

66/2 பழம் றோட், கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி பூரணலட்சுமி செல்வரத்தினம்



தாவடியைப் பிறப்பிடமாகவும், பனிக்கர் வளவு திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணலட்சுமி செல்வரத்தினம் 21.04.2014 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும், லிங்கேஸ்வரன், புவனேஸ்வரன் (ஜேர்மனி), தர்மரட்ணம் (ரஞ்சன் வர்த்தக நிலையம்-திருநெல்வேலி), மோகனரட்ணம் (ஜேர்மனி), செல்வரஞ்சனி (லண்டன்), சண்முகரட்ணம் (குடியேற்ற உத்தியோகத்தர்-காணி நிர்வாகத் திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தாயும், சகலகலாவல்லி, கிரிஷாந்தி (ஜேர்மனி), ரஞ்சனி, சுகிர்தமலர் (ஜேர்மனி), ரவீந்திரன் (லண்டன்), விஜயமாலா (ஆசிரியை- கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும், யதுகுலா, நவனீதன், நந்தவர்மன், பிருந்தா, துவாரகன், ஜனந்தா, பிருந்தாபன், சுகன்யா, நிவேதா, நிருஷன், சஞ்சீவன், றஜீவன், விதூஷன், வினோஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (22.04.2014) செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பனிக்கர் வளவு,
திருநெல்வேலி. (47080)(10)

தகவல்:
லிங்கம் (மகன்).

# 6 ஆயிரம் அரச ஊழியர்கள் மூன்று மாதங்களில் ஓய்வு

## ஓய்வூதிய திணைக்கள பணிப்பாளர் தகவல்

கொழும்பு,ஏப்.22
அரச ஊழியர்களில் 6 ஆயிரம் பேர் கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் மார்ச் மாதம் இறுதி வரை ஓய்வு பெற்றுள்ளனர்என்றுஓய்வூதியதிணைக்கள பணிப்பாளர் எஸ்.எச். ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.
கடந்த ஆண்டை விட இந்த வருடம் ஓய்வுபெற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று அவர் கூறினார். இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைக்கு அமைய இலங் கையில் மனிதவளம் 4.1 வீதமாக அதிகரித்துள்ளது.
நாட்டின் மனிதவளமானது இலங்கை மக்கள் தொகையில் 8.8 மில்லியனாகும்.
கடந்த வருடம் அரச துறையில் பணியாற்றுபவர்களின் எண்ணிக்கையானது 2.7 வீதத்தால் அதிகரித்துள்ளது என்று மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

## நாட்டினுடைய மத ஐக்கியத்தை குலைக்கும் சில அமைப்புகள்

அமைச்சர் டிலான் பெரேரா குற்றச்சாட்டு


டிலான் பெரேரா

கொழும்பு,ஏப்.22
நாட்டின் ஐக்கியத்தை சில அமைப்புகள் சீர்குலைத்து வருகின்றன. பொதுபல சேனாவுக்கு டொலர் மற்றும் பவுண்களில் நிதி கிடைத்து வருகிறது என்று அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.
ஜாதிக பல சேனாவுக்கு மத்திய கிழக்கில் இருந்து நிதியுதவி கிடைத்து வருகிறது என்று அவர் கூறினார்.
இதனால் இந்த இரண்டு அமைப்புகளும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என்று அவர் தெரிவித்தார்.
பதுளையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இந்த இரண்டு அமைப்புகளும் தேசிய மற்றும் மத ஐக்கியத்தைச் சீர்குலைத்து வருகின்றன. வெளிநாடுகளில் இருந்து நிதியைப் பெற்று வரும் இந்த அமைப்புகளும் நாட்டின் வரலாற்றில் கிடைத்த உன்னத பௌத்த மதத்தை விற்று வருகின்றன.
நாட்டை பயங்கரவாதத்தில் இருந்து மீட்க ஜனாதிபதி மேற்கொண்ட அர்ப்பணிப்பை நாங்கள் நன்கு அறிந்துள்ளோம். உயிர்களை தியாகம் செய்தே நாட்டுக்கு சமாதானத்தை கொண்டுவந்தோம்-என்றார்.(ச)

## பஸ் விபத்தில் நால்வர் காயம்

கொழும்பு, ஏப்.22
பண்டாரவளை மத்திய கல்லூரிக்கு அருகாமையில் பாதசாரிக் கடவையைக் கடக்க முயன்ற நால்வரை பஸ் மோதியதில் அவர்கள் படுகாயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது என்று பொலிஸார் கூறினர். இருவர் பண்டாரவளை வைத்தியசாலையிலும் மற்றைய இரண்டு பேரும் தியத்தலாவ வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பண்டாரவளைப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவத்தில் மூன்று மாணவர்களும் பெண் ஒருவருமே காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவத்தையடுத்து பஸ் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ச)



வட்டு.கிழக்கு சிக்கன கடனுதவி வழங்கும் கூட்டுறவு சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் சங்கத் தலைவர் திருமதி சிவநீதன் அம்சமாலிதேவி தலைமையில் வட்டு.கிழக்கு அறிவொளி சனசமூக நிலையத்தில் கடந்த வெள்ளியன்று இடம் பெற்றது. இந்த நிகழ் வில் பிரதம விருந்தினராக வலி. மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரனும் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட சிக்கன கடனுதவி வழங்கும்கூட்டுறவு சங்க தலைவர் கே.சிவகுருநாதன் யாழ்.மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்க செயலாளர் ச.பரமானந்தம், சிக்கன கடனுதவி வழங்கும் கூட்டுறவுசங்க சங் கானை பிராந்திய சபை தலைவர் வீ.செல்வரத்தினம், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் வை.கைலைநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் மேற்படி சங்கத்தின் செயற்பாடுகளுக்கு பரிபூரண ஒத்துழைப்பு நல்கிய பெண்க ளுக்கும் இந்தக் கிராமத்திலிருந்து பல்கலைக்கழகம் நுழைந்த மாணவர்களுக்கும் வலி. மேற்கு பிரதேச சபை தவிசாளர் தனது மாதாந்த கொடுப்பனவின் ஊடாக அன்பளிப்புகளை வழங்கி ஊக்குவித்தார். (வ)

# முஸ்லிம் மக்களின் காணிகள் படையினரால் சுவீகரிப்பு

> காணிகளை சுவீகரிப்பதால் முஸ்லிம்கள் அநாதரவான நிலைக்கு தள்ளப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பொதுமக்களை நடுத்தெருவுக்கு அனுப்பி விட்டு படையினரைப் போசிக்கும் செயற்பாடுகளை நியா யப்படுத்த முடியாது.

மட்டக்களப்பு,ஏப்.22
கிழக்கில் உள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான பல காணிகள், படையினரால் சுவீகரிக்கப்பட்டு வருகின்றன என்று கிழக்கு மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.
இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
வடக்கில் பொதுமக்களது காணிகளை படையினர் சுவீகரித்து வருவது போல கிழக்கிலும் சுவீகரிக்கும் நிலை தொடர்ந்து வருகின்றது.
இது நல்ல ஆரோக்கியமான சூழ்நிலை அல்ல. எனவே இதனை உடன் தடுத்து நிறுத்த வேண்டும்.
திருகோணமலை மாவட்டத்தில் பல காணிகளை படையினரின் தேவைக்காக சுவீகரிக்க ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.
குச்சவெளி, புல்மோட்டை, கிண் ணியா என ஆரம்பித்த இந்தச் செயற்பாடு தற்போது பட்டணமும், சூழலும் பிரதேச செயலகப் பிரிவின் சின்னம் பிள்ளைச்சேனை வரை விஸ்தரித்துள்ளது.
இந்தப் பிரதேசத்தில் உள்ள அதிகளவான காணிகள் முஸ்லிம்களுக்குச் சொந்தமானவை.
சின்னம்பிள்ளைச்சேனையில் பெருமளவு ஏக்கர் காணிகள் கடற்படைக்காக தற்போது சுவீகரிக்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
இந்தக் காணிகளுள் பெரும்பாலானவை முஸ்லிம்களுடையவை. கடந்த 25 வருடங்களுக்கு மேலாக இந்தக் காணிகள் அவர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.
இந்தக் காணிகளை சுவீகரிப்பதால் முஸ்லிம்கள் அநாதரவான நிலைக்கு தள்ளப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பொதுமக்களை நடுத்தெருவுக்கு அனுப்பி விட்டு படையினரைப் போசிக்கும் செயற்பாடுகளை நியாயப்படுத்த முடியாது. எனவே பொது மக்களது காணிகளை சுவீகரிக்கும் நிலையைக் கைவிட வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

**கண்ணீர் அஞ்சலி**



எமது கலாசாலை விரிவுரையாளர்
சி.குகன் அவர்களின்
அன்பு மைத்துனி
திருமதி ரூபரத்தினேஸ்வரி சிவயோகநாதன்
அவர்கள் அமரத்துவம் எய்தியமையையிட்டு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதோடு,அன்னாரின்
ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.
கலாசாலைச் சமூகம்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை (47067) (5.6.3)

**கண்ணீர் அஞ்சலி**

எமது மன்ற உறுப்பினர்
சுப்பிரமணியம் ஏரம்பமூர்த்தி
[உரிமையாளர்,கணேசா ஹாட்வெயர்-சாவகச்சேரி]
அவர்கள் 21.04.2014 திங்கட்கிழமை
காலமானார். அன்னாரின் மறைவினால்
துயருறும் குடும்பத்தினருக்கு ம்ன்றம் ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம். (சி/7675) (5.6.3)

**மரண அறிவித்தல்**

சுப்பிரமணியம் ஏரம்பமூர்த்தி (கண்ணன்)
(உரிமையாளர்- கணேஷா ஹாட்வெயர், சாவகச்சேரி)



மீசாலை மேற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஏரம்பமூர்த்தி நேற்று (21.04.2014) திங்கட் கிழமை காலமானார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
தகவல்:
மனைவி, குடும்பத்தினர்.
மீசாலை மேற்கு, மீசாலை.
T.P: 077 704 1612
(சி/7674)(3.6.4)

**J.C.B.BACKHOE இயந்திரம் வாடகைக்கு**

Loader & Tipper



பழைய கட்டடங்களை இடித்துத் துப்புரவு செய்யவும் காணிகளைத் துப்புரவாக்கி மட்டப் படுத்தவும் பாதைகளைச் சீர்செய்யவும் மணித்தியாலக் கணக்கில் வாடகைக்கு விடப்படும்.
மற்றும் டிப்பரும் வாடகைக்கு விடப்படும்.
தொடர்புகளுக்கு:
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
31, மாவிட்டபுரம் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.
0777279151, 075 069 5726
(46047) (2.3.6)

**தேவை** தங்களிடமுள்ள பழைய பத்திரிகைகள், புத்தகங்கள், கொப்பிகள், காகிதாதிகள், காட்போட் என்பவற்றைப் பணம் கொடுத்து வேண்டிக் கொள்கிறோம்.
தொடர்பு: 077 418 0185 (47070) (3.6.4)




அமைக்கப்பட்ட பஸ் நிலையத்தின் தோற்றம்

## காட்சிக்கு மட்டும் பஸ்நிலையம் செயற்பாடுகள் எவையும் இல்லை

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புக்கான பஸ் நிலையம் அமைக்கப்பட்ட போதும், இதுவரை அங்கு பஸ்களைத் தரித்து வைத்துச் செயற்படுத்தவதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் புதுக்குடியிருப்புக்கான பஸ் நிலையம் கடந்த ஆண்டு ஏ-35 புதுக்குடியிருப்பு பகுதியில் அமைக்கப்பட்டு பணிகள் நிறைவு பெற்றிருந்தபோதும், இதுவரை பஸ்கள் எவையும் அங்கு தரித்து நிறுத்தப்படுவதில்லை.

குறிப்பாக புதுக்குடியிருப்பிலிருந்து பல்வேறு இடங்களுக்குச் செல்கின்ற அரச மற்றும் தனியார் பஸ்கள் புதுக்குடியிருப்புச் சந்தியில் வீதியோரத்தில் தரித்து நிறுத்தப்பட்டே பயணங்களை மேற்கொள்கின்றன.

இதனால் பயணிகள் பல அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே குறித்த பேருந்து நிலையத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது. (வ-5)

# கட்டுக்கடங்காத வேகத்தால் தடம்புரண்டது லொறி

## ஒருவர் சாவு, மூவர் காயம்; கிளிநொச்சியில் சம்பவம்



கிளிநொச்சி, ஏப்.22

அதிவேகமாகப் பயணித்த லொறி திடீரென நிறுத்தப்பட்டதால் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. அதில் லொறியில் பயணித்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மூவர் காயங்களுக்குள்ளாகினர். இந்தக் கோர விபத்து கிளிநொச்சியில் நேற்றுமுற்பகல் இடம்பெற்றுள்ளது.

ஏ-9 பிரதான வீதியில் உள்ள மஞ்சள் கோட்டின் வழியே ஒருவர் வீதியைக் கடக்க முற்பட்டுள்ளார். வேகமாக லொறியைச் செலுத்தி வந்த சாரதி அதனை எதிர்பார்க்காததால் சடுதியாக லொறியை நிறுத்த முற்பட்டுள்ளார். அதனால் தடம்புரண்ட லொறி 20 மீற்றர் தூரம் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது. இந்த விபத்தில் யாழ்ப்பாணம், கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய அன்ரன் யோகன் றெக்ஸ் என்பவரே உயிரிழந்தவராவார். சிவராசா கலாதீசன் (வயது-20), கந்தசாமி இரட்ணசிங்கம் (வயது-51), செபஸ்ரியன் பெஞ்சமின் (வயது-51) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். செபஸ்ரியன் பெஞ்மினே வீதியைக் கடக்க முற்பட்டவராவார். காயமடைந்தவர்கள் அனைவரும் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த லொறியில் குடிதண்ணீர் போத்தல்களும், விறகும் ஏற்றப்பட்டிருந்தன. விபத்தை அடுத்து அவை வீதிகள் எங்கும் சிதறிக் காணப்பட்டன. விபத்தை அடுத்து வீதிப் போக்குவரத்துப் பலமணி நேரம் தடைப்பட்டிருந்தது. விபத்துக் குறித்த மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த பகுதி எப்போதும் சன நடமாட்டம் உள்ள பகுதியாகும். வீதியில் பெரும் எண்ணிக்கையான மக்களும், வாகனங்களும் பயணித்துக் கொண்டிருந்தபோதும் தெய்வாதீனமாக வேறு எந்தச் சேதங்களும் ஏற்படவில்லை என்று நேரில் சம்பவத்தைக் கண்ட மக்கள் தெரிவித்தனர். (ற-18-55)

## மூடிய நிலையில் பனங்காமம் பற்று ப.நோ.கூ.ச. விற்பனை நிலையங்கள்



மூடிய நிலையில் காணப்படும் ப.நோ.கூ.ச. விற்பனை நிலையம்

கிளிநொச்சி, ஏப்.22

முல்லைத்தீவு பனங்காமம் பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை நிலையங்கள் பல மூடப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பனங்காமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கடந்த காலங்களிலும் போர் காலத்திலும் மக்களுக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை நியாய விலைகளில் விநியோகித்து வந்தது. மீள் குடியேற்றத்தின் பின்னர் குறித்த பல நோக்குக் கூட் டுறவுச் சங்கம் பெரியளவில் நட்டத்தில் இயங்குவதால் அதனுடைய கிளை விற்பனை நிலையங்கள் பல செயலிழந்துள்ளன.

கொல்லவிளாங்குளம் சிவபுரம் , பனங்காமம் உள்ளிட்ட கிளை விற்பனை நிலையங்கள் செயலிழந்துள்ள நிலையில் காணப்படுகின்றன.(வ-55)

## அபிவிருத்திச் சங்கத்தின் ஆண்டு நிறைவு நிகழ்வு

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தின் நான்காம் ஆண்டு நிறைவு தின நிகழ்வுகள் சனிக்கிழமை பச்சிலைப்பள்ளி ப.நோ. கூ. சங்க மண்டபத்தில் இடம் பெற்றது. சங்கத் தலைவர் கு.ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் , கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், பளை பிரதேச செயலர் திருமதி ஜெயராணி பரமோதயன், பூநகரி பிரதேச செயலர் சி.சத்தியசீலன், வடமாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழு செயலாளர் க.தெய்வேந்திரன், இலங்கை வங்கி சாவகச்சேரிக் கிளை முகாமையாளர் கோ.சேதுகாவலர், சங்கத்தின் லண்டன் சங்க இணைப்பாளர் க.லோகநாதன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கடந்த வருடம் ஜி.சீ.ஈ. உயர்தரம், சாதாரண தரம், ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றில் அதி கூடிய புள்ளிகள் பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் சங்கத்தால் நடத்தப்பட்ட கணினி பயிற்சி, கணிதப் பாடப் பயிற்சி பரீட்சை ஆகியவற்றில் சித்தி பெற்ற மாணவர்கள் ஆகியோருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டன. அத்துடன் அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட வேம்பொடுகேணி கிராமத்தில் உள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. சங்க அனுசரணையுடன் பளை மத்திய கல்லூரியில் கடந்த மாதம் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்பட்ட இலவச மருத்துவ பரிசோதனை முகாமில் கண் பார்வையில் குறைபாடு காணப்பட்டவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (வ-18)



பார்வை குறைபாடு உடைய ஒருவருக்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் மூக்குக் கண்ணாடி அணிவிக்கிறார்.

# வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி சங்கம் அயராத சேவை

## நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவிப்பு

பளை, ஏப். 22

மீளக்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு தனியார் அமைப்புகள் உருவாக்கப்பட்டபோதிலும் அவை ஓராண்டுக்கு மேல் தாக்குப் பிடிக்காமல் போய்விட்டன. பளைப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் புலம்பெயர் நாடுகளில் உள்ள பிரதேச மக்களால் அமைக்கப்பட்ட பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கமானது கடந்த 4 ஆண்டுகளில் பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப எடுத்துவரும் அயராத சேவை கிளிநொச்சி மாவட்டத்துக்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் காணப்படுகிறது.

இவ்வாறு பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் உரையாற்றினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் ;

புலம்பெயர் நாடுகளிலிருந்து அனுப்பப்படும் நிதியியை உரிய முறையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு விநியோகிப்பது என்பது சாதாரண விடயமல்ல. ஒவ்வொரு செயற்பாட்டிலும் குறைகள் அதிகமாக தெரிவிக்கப்படும். இதனாலேயே பல அமைப்புகள் இருந்த இடம் தெரியாத அளவுக்கு மறைந்தன. புலம்பெயர் நாடுகளிலிருந்து கிடைக்கும் நிதியை கையாள்வதில் இங்குள்ள சங்கப் பிரதிநிதிகள் கையாண்ட முறைகள் எவராலும் குறை சொல்ல முடியாத அளவுக்கு காணப்படுகிறது. பளையில் இயங்கும் சங்கத்தின் நிர்வாகமும் மத்திய குழுவும் இணைந்து மேற்கொண்ட ஒவ்வொரு செயற்பாடுகளும் மக்களை உரிய முறையில் சென்றடைய உதவியுள்ளன. சங்கத்தால் கடந்த இரண்டு வருடங்களாக பிரதேசத்தில் இயங்கும் 25 முன்பள்ளிகளில் கற்கும் 600க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு வழங்கும் சத்துணவு வழங்கும் திட்டமானது எந்தவொரு தனியார் பொது அமைப்புகளால் செய்ய முடியாத ஒரு செயற்பாடாகும். சங்க நிர்வாகிகளின் அர்ப்பணிப்பான செயற்பாடுகளால் கவர்ந்த ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தினர் தமது செயற்பாடுகளில் ஒன்றான பனை மீள்நடுகைத் திட்டத்தையும், பனம் பொருள் உற்பத்தி நிலையத்தையும் இந்தச் சங்கத்திடம் கையளித்துள்ளனர்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசமானது பல்வேறு விளைபொருள்களால் வளமான நிலையில் காணப்பட்ட பூமியாகும். இங்குள்ள தென்னை வளங்கள் அழிக்கப்பட்டபோதிலும் அவற்றை மீண்டும் கட்டியெழுப்ப இங்குள்ள மக்களுக்கு சங்கம் காட்டும் ஆர்வம் பாராட்டத்தக்கது. கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் அழிக்கப்பட்டவற்றை மீண்டும் கட்டியெழுப்ப நமக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பமாக இன்றைய காலகட்டத்தை எடுத்துக் கொண்டு செயற்படுவோம். அழிவடைந்த பச்சிலைப்பள்ளி பிரதேசத்தைக் கட்டியெழுப்ப 10 வருட செயற்றிட்டத்தை நாம் அனைவரும் ஒன்றிணைந்து நடைமுறைப் படுத்தினால் இந்தப் பிரதேசம் மிகக் குறுகிய காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னணிப் பிரதேசமாக மாற்றலாம்.

இன்றைய காலகட்டத்தில் அனைத்து தரப்பினராலும் கல்வியை மேம்படுத்தும் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதனை நாமும் வரவேற்று மாணவர்களின் எதிர் காலத்தை சிறந்த முறையில் அமைக்க அனைவரும் ஒன்றுதிரண்டு பாடுபடுவோம் என்றார். (வ-18)

# நாடாளுமன்ற கூட்டம் அம்பாந்தோட்டையில்

கொழும்பு.ஏப்.22

நாடாளுமன்ற கூட்டங்களை அம்பாந்தோட்டையில் நடத்த முடியுமா என்பது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

ஸ்ரீ ஜயவர்தனபுர நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால், சபை அமர்வுகளை அம்பாந்தோட்டையில் நடத்தத் திட்டமிட்டப்பட்டு வருகிறது.

அம்பாந்தோட்டையில் அண்மையில் நிர்மாணிக்கப்பட்ட சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நாடாளுமன்ற அமர்வுகளை நடத்தத் திட்டமிடப்பட்டு வருவதாக உயர் மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றத்தின் திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டால், குறைந்தது மூன்று மாதங்களுக்கு நாடாளுமன்ற அமர்வுகளை நடத்த முடியாத நிலை ஏற்படும்.

அவசரமான சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதால், நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நாடாளுமன்ற அமர்வுகளை நடத்த முடியுமா என்பது குறித்தும் ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)



உயிர்ப்பு ஞாயிறு தினத்தையொட்டி நேற்றுமுன்தினம் கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளில் இடம்பெற்ற வீதியோட்டப் போட்டியை பங்குத்தந்தை அருட்திரு அன்ரன் மத்தாயஸ் அடிகள் ஆரம்பித்து வைத்தார். (ஒ-135)

# அரசு வடக்கு மக்களை அடக்குவதற்கு முயற்சி

## ரில்வின் சில்வா குற்றச்சாட்டு



ரில்வின் சில்வா

கொழும்பு.ஏப்.22

வடக்கு மக்களை அரசு அடக்கி ஆள முயற்சித்து வருகிறது. தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதனை கால தாமதப்படுத்துவதே அரசின் நோக்கமாக அமைந் துள்ளது என்று ஜே.வி.பி யின் பொதுச் செயலர் ரில் வின் சில்வா குற்றம் சாட்டி யுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய இனப்பிரச்சினைக்குத் துரித கதியில் தீர்வு வழங்க வேண்டும் என்ற ஆர் வமோ அக்கறையோ அரசுக்கு இல்லை. இதன் காரணமாகவே அரசு நாடாளு மன்றத் தெரிவுக் குழுவை அமைத்துத் தீர்வுத்திட்டம் வழங்குவதனை கால தாம தப்படுத்தி வருகிறது.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென அரசு உண்மையாகவே விரும்பினால் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை அமைக்க வேண்டிய அவசிய மில்லை. வடக்கு மக்களை அரசு அடக்கி ஆள முயற்சித்து வருகிறது- என்றார். (ச)


## நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய முகாமைத்திட்ட மறுசீரமைப்பு

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தில் ஏற்கனவே வரைபு செய்யப்பட்டு நடைமுறையில் உள்ள முகாமைத் திட்டத்தில் தற்போதைய கால நடைமுறைக்கு ஏற்ப சிலமுக்கியமான மாற்றங்களையும் திருத்தங்களையும் மேற்கொள்வதற்கு ஏதுவாக 30.03.2014 அன்று கூடிய வழிபடுநர் மகாசபையின் விசேட பொதுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு முகாமைத்திட்ட மறு சீரமைப்புகுழு உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் முகாமைத்திட்டத்தில் சில மிக முக்கியமான மாற்றங்களையும் திருத்தங்களையும் தற்போதைய மற்றும் எதிர்கால தூரநோக்கை கருத்தில் கொண்டு மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்மன் ஆலயத்தில் பற்றுறுதி கொண்ட அடியவர்களிடம் இருந்து ஆக்கபூர்வமான ஆலோசனைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. தங்கள் ஆலோசனைகளை (25.05.2014) ஆம் திகதிக்கு முன்னர் "செயலாளர், முகாமைத்திட்ட மறுசீரமைப்பு குழு, நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் நயினாதீவு." என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைக்கவும்.

குறிப்பு

தற்போது நடைமுறையிலுள்ள முகாமைத்திட்டத்தை ஆலய நிர்வாகக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்

திரு. ப.க. பரமலிங்கம்
அறங்காவலர்சபை உறுப்பினரும்
முகாமைத்திட்ட மறுசீரமைப்புக்
குழுவின் தலைவரும்,
நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

திரு ந. மோகனரூபன்
அறங்காவலர்சபை செயலாளரும்,
முகாமைத்திட்ட மறுசீரமைப்புக்
குழுவின் செயலாளரும்,
நயினாதீவு நாகபூசணி
அம்மன் கோயில், நயினாதீவு.


# முஸ்லிம்கள் பொறுமையுடன் செயற்பட வேண்டிய தருணம் இது

## இலங்கை ஜம்இய்யத்துல் உலமாசபை அறிவுரை

கொழும்பு.ஏப்.22

முஸ்லிம் மக்கள் மிகவும் பொறுமையுடனும், மதிநுட்பத்துடனும் செயற்பட வேண்டிய தருணம் இதுவாகும்.

இவ்வாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக பொய்யான குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன. இந்தக் குற்றச்சாட் டுக்கள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பௌத்த பீடங்களின் பீடாதிபதிகள் ஆகியோரைச் சந்தித்து விளக்கம் அளிக்கப்படும்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொழுகையின் போது நாட்டில் நிலவி வரும் அசாதாரண சூழ்நிலை நீங்கி, இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டும் என்று பிரார்த்தனை செய்ய வேண்டும். முஸ்லிம் மக்கள், சமாதானத்துக்கும் ஐக்கியத் துக்கும் முக்கியத்துவம் அளிக்கும் ஓர் இன சமூகத்தினராவர். புனித குர் ஆனை இழிவுபடுத் தும் வகையில் பொதுபல சேனா அமைப்பு அண்மைக் காலமாக கருத்து வெளியிட்டு வருகின்றது - என்று தெரிவித்துள்ளது. (ச)


### காணி விற்பனை

மூளாய் பிரதான சந்தியில் இருந்து அருகில் பொன்னாலை கிருஸ்ணன் கோயில் வீதியில் 5 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (வீதிக்கரையில்) தொடர்பு - 021 2051826, 078 6081296

### வருடாந்த பொதுக் கூட்டமும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ் மாவட்ட சதுரங்க சம்மேளனத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும்பரிசளிப்பு நிகழ்வும் எதிர்வரும் 27.04.2014 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நல்லூர் மங்கயற்கரசி வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது. அங்கத்தவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்

### தவறிவிட்டது

யாழ்ப்பாணம் கோயில் வீதியைச் சேர்ந்த பா . நேருஷன் என்பவரது தேசிய அடையாள அட்டை (901154880V) யும், வாகன அனுமதிப் பத்திரமும் கடந்த 20.04.2014 அன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கபடும்

T.p: 077 4191036

### பேக்கரி வாடகைக்கு

ஆனைக்கோட்டையிலுள்ள பூபதி வெதுப்பகம் மற்றும் 3 கட்டடத்தொகுதி வாடகைக்கு உண்டு. மேலதிக விவரங்களிற்கு நேரில் வரவும்

தொடர்பு - 077 7427777


# பல்கலைக் கல்வியியலாளர்களை தரம் உயர்த்துவதற்குத் திட்டம்

## சுற்றறிக்கைகள் விநியோகம் என்கிறது மானிய ஆணைக்குழு

கொழும்பு.ஏப்.22

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பணி யாற்றும் கல்வியியலாளர்களை சர்வதேச மட்டத்தில் தரமுயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்காக கல்வியியலாளர்கள் மத்தியில் சுற்றறிக்கைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் இந்தத் திட்டத்தை இலங்கை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் வரவேற்றுள்ளது.

இந்த சுற்றறிக்கைகள் இந்த மாதத்தில் இருந்து நடைமுறைக்கு வருகின்றன. உதவி விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் ஆகியோர் கட்டாயமாக முதுமாணி அல்லது கலாநிதி பட்டங்களை கொண்டிருக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்தத் திட்டம் முன் னெடுக்கப்படுகிறது என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திட்டத்தின்படி கல்வியியலாளர்கள் இலகுவாக பதவியுயர்வுகளை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. இந்த நிலையில் தற்போ தைய திட்டத்தின்படி கல்வியியலாளர் ஒருவர் கலாநிதி பட்டத்தைக் கொண்டிருக்காவிட்டால் அவர் உதவி விரிவுரையாளர் பதவிக்கே விண்ணப்பிக்க முடியும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு கூறியுள்ளது.

இதேவேளை விரிவுரையாளர் ஒருவர் 15 ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்திருக்க வேண்டும். சிரேஷ்ட விரிவுரையாளர் குறைந் தது 20 ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்க வேண்டும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஐ.தே.க. தாக்குதல் குறித்து மனோ தெரிவிப்பு



மனோ கணேசன்

கொழும்பு,ஏப்.22

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அம்பாந்தோட்டை துறைமுகமும் மத்தல விமான நிலையமும் ஒரு குடும்பத்துக்குச் சொந்தமானதல்ல என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணே சன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த இரண்டு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் அறிந்து கொள்ள நாட்டு மக்களுக்கு உரிமை உள்ளது.

அண்மையில் மத்தல விமான நிலையம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் ஆகியவற்றை பார்வையிடச் சென்ற ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

இந்த இரண்டு அபிவிருத்தித் திட்டங்களும் மக்களுக்கு மேலும் சுமையாக அமை யுமே தவிர, நன்மைகள் ஏற்படாது என்று ஏற்கனவே வலியுறுத்தப்பட்டு வந்தன. தாக்குதல்கள் மூலம் இந்த கருத்து நிரூபணமாகியுள்ளது.

உண்மையை மக்கள் தெரிந்து கொள்ளக் கூடாது என்ற காரணத்தால் இவ்வாறான தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் பார்வையிடுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பூரண உரிமை உள்ளது. குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்-என்றார். (ச)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மாகாண

சாடியுள்ளார் வடக்கு மாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு இணைத் தலைமையேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு காட்டமாகக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது,

"இந்திய அரசின் நெருக்குதலினாலும், சர்வதேச நாடுகளின் வற்புறுத்தலினாலும் வடமாகாணத் தேர்தல் கடந்த வருடம் நடைபெற்றது. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பங்குபற்றியது. அந்தத் தேர்தலில் அரச வளங்கள், சலுகைகள் போன்றவற்றையும், ஆளுநரின் நேரடியான உதவிகளையும் பெற்றுக்கொண்டு, சட்டத்திற்கு முரணான வகையில் தேர்தல் கட்டுப்பாடுகளை மீறி அரச தரப்பினர் போட்டியிட்டனர்.

எம்மைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போருக்குப் பின்னரான மக்களின் தேவைகளை அடையாளங்காட்டி, தேர்தலில் பங்குபற்றினோம். எமது அரசியல் ரீதியிலான தீர்வையும் முன்வைத்தோம். ஆகக் கூடிய அதிகாரப் பகிர்வே நாட்டுக்கு நலமுடையது என்பதே எமது கோஷமாக இருந்தது. நாம் முன்வைத்த எமது கொள்கைகளை மக்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்பதில் எந்த வித சந்தேகமும் இருக்கத் தேவையில்லை. இன்றைய தேசியக் கொள்கைகளும், அரச கட்டுப்பாடுகளும் வடமாகாணத்தில் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளையும், அபிலாஷைகளையும் கருத்தில் எடுத்துச் செயற்படுவதாக அமையவில்லை.

அரசின் கொள்கைகள் ஆளும் கட்சியின் நலன்களையும் அதன் சில முக்கிய பிரமுகர்களின் நலன்களையும் முன்வைத்தே அமைந்திருப்பதையும் நாம் உணர்கின்றோம். அரச ஆளும் கட்சி தருவதை மாகாண மக்கள் ஏற்றே தீர வேண்டும் என்ற பாணியில் தான் நடவடிக்கைகள் சென்று கொண்டிருப்பதை அவதானிக்கின்றோம்.

நாங்கள் 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடக்கம் 2014 ஜனவரி வரையில் அரசுடன் இணைந்து ஒத்துழைக்கலாம் என்ற எண்ணத்தில் செயற்பட்டோம். இந்த வருடம் ஜனவரி 2 ஆம் திகதி மாண்புமிகு ஜனாதிபதியையும் சென்று சந்தித்தேன். அப்போது 13 ஆவது திருத்தச் சட்டத்தின் வலுவின்மையைச் சுட்டிக்காட்டி அதன் கீழான கட்டமைப்புக்கள் போதியவாறான அதிகாரங்களைத் தராத பட்சத்திலும் போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் நலன் கருதி நாங்கள் ஒத்துழைக்க முன்வந்துள்ளோம் என்ற கருத்தைத் தெரிவித்தேன். ஜனாதிபதி செயலணியின் பணிகள் அனைத்தையும் எமக்குக் கையளிக்குமாறு கோரினேன்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக அது பற்றிய எமக்குச் சார்பான ஒரு முடிவை ஜனாதிபதி அவர்கள் இதுவரையில் எடுக்கவில்லை. அதற்குப் பதிலாக மக்களின் ஜனநாயக உரிமைகளை மதியாமல் தொடர்ந்து மத்திய அரச கட்டமைப்புக்களே வடமாகாண நிர்வாகப் பரிபாலனத்தைக் கொண்டு நடத்தி வருகின்றன.

அரசியல் யாப்பில் மாகாண சபைகளுக்கென சில விடயங்களும், மத்திய அரசுக்கு என்று சில விடயங்களும், இரண்டிற்கும் பொதுவான சில விடயங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் காரணத்தினால் தான் ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் கூட்டப்படுவதை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களின் ஊடாக சட்டத்தால் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் தனியான அதிகாரங்களை மத்திய அரசு தன் வசப்படுத்த இடமளிக்க முடியாது.

அந்த அதிகாரங்கள் ஊடாக அந்தந்த விடயங்கள் சம்பந்தமாக கொள்கைகள் வகுப்பதும் அவற்றை நெறிப்படுத்தி நடைமுறைப்படுத்துவதும் மாகாண சபைகளையே சாரும் என்பதை இந்தத் தருணத்தில் கூறி வைக்கின்றேன்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது எல்லா மாகாண சபைகளையும் ஒரே மாதிரியாகவே தாங்கள் நடத்திச் செல்வதாக ஜனாதிபதி கூறினார். ஆனால் வடமாகாணம் மற்றைய மாகாணசபைகள் போலல்லாது போரின் உக்கிரத்தில் இருந்து விடுபட்டு வந்துள்ளதால் அதன் பிரச்சினைகளும், தேவைகளும் விசேடமானதும், தனித்துவமானது. அத்துடன் அவற்றிற்கான தீர்வுகள் பிற மாகாணப் பிரச்சினைகளைத் தீர்ப்பது போலல்லாது வேறு விதமாக அமைந்திருக்கும் என்பதையும் சுட்டிக் காட்டினேன். எல்லோருக்கும் ஒரே மாதிரியான சப்பாத்து சைஸ் (பாதணி அளவு) பொருந்தும் என்று நினைப்பது தவறு என்றும் கூறினேன்.

தற்போது 13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதாக்கி மத்திய அரசின் கீழ் சகல அதிகாரங்களையும் உள்ளிழுக்கவே நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளது. இதற்கு அண்மையில் கொண்டு வரப்பட்ட வாழ்வின் எழுச்சி சட்டம் சான்று பகர்கின்றது. மாகாண சபைகளின் சுதந்திரத்திலும் அதிகாரங்களிலும் கைவைப்பதாகவே மேற்படி சட்டம் அமைந்துள்ளது.

ஆகவே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுச் செயற்பாட்டையும் இவ்வாறானதொரு எண்ணத்தின் பிரதிபலிப்பாகவே நாம் காண்கின்றோம். அதாவது மத்திய அரசின் கை மாகாண சபையின் நடவடிக்கைகளில் மேலோங்கும் வண்ணமாகவே ஜனாதிபதி செயலணி, மாவட்ட ஒழுங்கிணைப்புக் குழு ஆகியவற்றின் நடவடிக்கைகள் அமைந்துள்ளதாகத் தெரிகின்றது.

வடமாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த, வரும் செயற்றிட்டங்களும், திட்ட நடைமுறைகளும் வடமாகாண சபையின் கருத்தொருமித்தல் இல்லாது அவசர அவசரமாகக் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதையும் அச்சத்துடன் அவதானிக்கின்றோம். ஆனால் விசித்திரமாக மன்னார், வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு நாங்கள் வருவதாக அறிவித்ததும் இருமுறை அந்தக் குழுக் கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டன.

மக்கள் ஆணையைப் புறக்கணிக்காது நாங்கள் வடமாகாண சபையின் நிர்வாகச் செயற்பாட்டில் உள்ளிடுவது அவசியம் என்று கருதி தற்பொழுது எமது முடிவை மாற்றி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டங்களில் பங்குபற்ற முன்வந்துள்ளோம். எம் மக்களின் எதிர்பார்ப்புக்களை வீணடிக்காது எவ்வளவு தான் மத்திய அரசு தனது முகவர்களின் ஊடாக வடமாகாண மக்களின் நலன்களுக்கு எதிராக நடக்க எத்தனிப்பினும் அவற்றை முறியடிப்பதற்கே நாங்கள் இந்த முடிவை எடுத்துள்ளோம். மாறாக மக்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் அரசு நடந்து கொண்டால் அவற்றிற்கு உறுதுணையாக இயங்கவும் நாங்கள் பின்நிற்க மாட்டோம்.

ஜெனிவாப் பிரேரணை அலசி ஆராயப்பட்ட போதே அதனைக் காணக் கூடியதாக இருந்தது. அதாவது அரசு தற்பொழுது வடமாகாணத்தில் அவசர அவசரமாகப் பல திட்டங்களை வகுத்துச் செயற்படுத்த முன்வந்துள்ளது. நான் ஐக்கிய நாடுகள் சபை நிரந்தர வதிவாளருடன் எமது மக்களின் தேவைகள் பற்றிய கணிப்பு நடத்த வேண்டும் என்று கேட்டு அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வந்த போது அரசு தானாகவே உள் நுழைந்து அது பற்றிய ஒரு உடன்பாட்டில் ஐ.நாவுடன் கைச்சாத்திட்டுள்ளது. நாங்கள் பதவியில் இருந்தால் மட்டும் போதும் - எங்கே தம்மையும் தம் சகாக்களையும் அடுத்த தேர்தலில் மக்கள் ஓரங்கட்டி விடுவார்களோ என்ற பயத்தில் அரசு நாம் செய்ய வேண்டிய வேலைகளைத் தாமே இழுத்துப் போட்டுக் கொண்டு செயலாற்றத் துணிந்துள்ளார்கள். யார் நெல்லைக் குற்றினாலும் நெல் அரிசியாக வேண்டும். எமது மக்களின் விமோசனமே எமக்கு முக்கியம்"- என்று தெரிவித்தார். (ற-5)

### இந்திய

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களால் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது.

கூட்டத்தில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான மீளாய்வு நடைபெற்றது. அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களால், "இந்திய அரசால் இங்குள்ள விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உழவு இயந்திரங்கள் எங்கே?" என்று கேள்வியெழுப்பப்பட்டது. குறித்த உழவு இயந்திரங்கள் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட போதும், சில இடங்களில் விவசாய சம்மேளனங்களின் தலைவர்களின் தனிப்பட்ட பாவனையில் அவை இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டதுடன், வடக்கு மாகாண விவசாய அமைச்சர், குறித்த உழவு இயந்திரங்கள் தொடர்பில் கமநலசேவைத் திணைக்களத்திடம், அவை எங்கே இருக்கின்றன என்று கடிதம் மூலம் கேட்டபோதும் இது வரை பதில் வழங்கவில்லை என்றும் கூறப்பட்டது.

அதற்குப் பதிலளித்த கமநல அபிவிருத்தித் திணைக்கள. யாழ்.மாவட்ட உதவி ஆணையாளர் ம.பற்றிக்நிறஞ்சன், "அந்தக் கடிதத்தில் அது தொடர்பிலான முழுமையான விவரங்கள் கோரப்பட்டிருந்தன. எமது தலைமை அலுவலகத்தில் அதற்கான அனுமதி கேட்கப்பட்டது. அதனை வழங்க வேண்டாம் என்று அவர்கள் அறிவுறுத்தினர்" என்று தெரிவித்தார்.

அதனையடுத்து அந்த இயந்திரங்கள் எங்கு உள்ளன என்பதை தெரிவிக்குமாறு இணைத் தலைவர்களுள் ஒருவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டார்.

பற்றிக்நிறஞ்சன் கமநல சேவை நிலையங்களிடம் 93 உழவு இயந்திரங்களும், யாழ். மாநகர சபையிடம் 5 உழவு இயந்திரங்களும், பனை அபிவிருத்திச் சபைக்கு 4 உழவு இயந்திரங்களும், காரைநகர், வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய பிரதேச சபைகளுக்கு தலா ஒவ்வொரு உழவு இயந்திரமும் வழங்கப்பட்டுள்ளன" என்று தெரிவித்தார்.

அதன்பின்னரும் விடாத நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன், "விவசாயத் தேவைக்குவழங்கப்பட்ட உழவு இயந்திரத்தை அதனை விட வேறு தேவைக்குப் பயன்படுத்த முடியுமா?. அவ்வாறு பிரதேச சபைகளுக்கு வழங்குவதற்கான அதிகாரத்தை வழங்கியது யார்? என்று கேள்வி மேல் கேள்வி தொடுத்தார்.

இதற்குப் பதிலளித்த பற்றிக்நிறஞ்சன், "விவசாயத் தேவைக்குத்தான் வழங்கப்பட்டிருந்தது. மாநகரசபைக்கு வழங்குவதற்கான உத்தரவு வடக்கு மாகாண ஆளுநரிடமிருந்தே கிடைக்கப் பெற்றது" என்று குறிப்பிட்டார். இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்,

"மத்திய அரசின் அதிகாரிகளுக்கு கட்டளையிடுவதற்கு வடக்கு மாகாண ஆளுநர் யார்?" என்று கேட்டபோது, அதற்குள் குறுக்கிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, "ஆளுநர் ஜனாதிபதியின் பிரதிநிதி என்றும் அவர் கட்டளைகளைப் பிறப்பிக்கலாம்" என்றும் கூறினார்.

அதோடு விடாத நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா, "வடக்கு மாகாணத்திற்கு வழங்கப்பட்ட உழவு இயந்திரங்கள் எங்கே என்பதற்கான பதில் வழங்கப்பட வேண்டும்? என்று விடாப்பிடியாக நின்றார். அதற்கான பதில் அடுத்த கூட்டத்திலேயே வழங்க முடியும் என்று கூறி ஒருவாறு கேள்விகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. (ற-5)

### வடக்கு

விதிக் கோவைக்கு அமைவாகவும், 2007/20 தேசிய இடமாற்றக் கொள்கைக்கு அமைவாகவும் இடமாற்றங்கள் யாவும் இடமாற்றச் சபையினூடாகவே நடைபெற வேண்டும்.

ஒரே பாடசாலையில் தொடர்ச்சியாக 7 வருடங்களுக்கு மேல் பணியாற்றிய ஆசிரியர்கள், இரண்டு வருட ஒப்பந்தத்தில் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்று திரும்பி வரும் போது முன்னர் பணியாற்றிய அதே பாடசாலைக்கு மீண்டும் இடமாற்றம் வழங்கப்படுவதில்லை என்று இடமாற்றச் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன் அடிப்படையிலேயே, ஏனைய ஆசிரியர்கள் பலர் முன்னர் சேவையாற்றிய அதே பாடசாலையில் பணியாற்ற அனுமதி கோரியபோதும் கல்வி அதிகாரிகளால் அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தது.

அதேவேளை, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் பௌதீகவியல் ஆசிரியராகப் பணியாற்றும் ஆசிரியர் ஒருவருக்கு அவர் முன்னர் பணியாற்றிய அதே பாடசாலையில், வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரின் அதிகாரத்தால் மீண்டும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இவரது இந்தக் கோரிக்கை ஏற்கனவே இடமாற்றச் சபையினால் நிராகரிக்கப்பட்டிருந்ததும், இவ்வாறு நடைபெற்றுள்ளது.

மற்றைய ஆசிரியர் கிளிநொச்சி தர்மபுரம் ம.வியில் பணியாற்ற வேண்டியவர். அவர் தாயாரின் சுகவீனத்தைக் காரணமாகக் கொண்டு, ஒப்பந்த அடிப்படையில் இடமாற்றச்சபையினால் 26.03.2012 தொடக்கம் இரண்டு வருடங்கள் யாழ். நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. ஆனால் அவரது தாயார் இறந்த நிலையிலும் - ஒப்பந்த காலம் நிறைவடைந்தும் இடமாற்றச் சபையின் எவ்விதமான அனுமதியும் பெறப்படாமல் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரால் அதே பாடசாலையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடுகளானவை அரச தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள, இடமாற்றச் பையின் அதிகாரங்களை மீறும் செயல்கள் என்பதுடன் ஏனைய ஆசிரியர்களினதும் அடிப்படை உரிமையை மீறும் செயலாகும். இலங்கை சனநாயக குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரிமை (12) இற்கு அமைவாக இனம், மதம், மொழி, பால், அரசியல் கொள்கை, பிறப்பிடம் காரணமாக எந்தவொரு நபரும் ஓரம் கட்டப்படுதல் ஆகாது என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் மேற்படி செயலாளர் சட்டம் வழங்கிய அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததாகவே அமையும்.

இதுகுறித்து ஆக்கபூர்வமான விசாரணையை செய்து ஏனைய ஆசிரியர்களின் உரிமைகளைப் பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். - என்று இலங்கை ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது. (ற-4)

### கைதி

பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவைச் சேர்ந்த அவர் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டிருந்தமை மட்டு மன்றி, அவர் முன்னர் பயங் கரவாதச் செயல்களுடனும் தொடர்புபட்டிருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தார்.

கடந்த ஒருவருடகாலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவர், சுகவீனம் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும் சிறைச்சாலை உத்தியோகத் தர்களின் பாதுகாப்புக்கு மத்தியிலும் அவர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் கூறுகின்றனர். (ற-4)

### காணி

கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றைய கூட்டத்தின்போது வலி.வடக்கு மக்கள் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட வேண்டும் என்பதில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டிருப்பவர்கள் எவருக்கும் மாற்றுக் கருத்து இல்லை என்று அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இது தொடர்பிலான முன்மொழிவைச் செய்தார். காணி சுவீகரிப்புச் சட்டத்தின் பிரிவு (2) ன் கீழ், விடுக்கப்பட்ட காணி சுவீகரிப்பு அறிவித்தல் மீளப் பெறப்பட வேண்டும் என்றும், வலி.வடக்கு மக்களின் காணிகள் அவர்களுக்கே மீளவும் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். இதனை அவர் முன்மொழிய அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் வழிமொழிந்தார்.

அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் ஏகமனதாகத் தீர்மானத்தை நிறைவேற்றினர். (ற-5)

### அரசுக்கு

றச்சாட்டுக்கள் முன்னர் முன்வைக்கப்பட்டன. இப்போது தென்னாபிரிக்காவும் தமிழர்களுக்கு ஆதரவாகச் செயற்படுவதால்தான், முன்கூட்டியே அவர்களுடன் நெருக்கமாகப் பழகி விடயங்களைத் தெரிவிக்கிறார்களா? என்பதே அரச தரப்பினரிடையே ஏற்பட்டுள்ள சந்தேகம்.

எனினும் இந்தச் சிக்கலைத் திறம்படக் கையாண்டு, திட்டமிட்டபடி ரமபோஷா இலங்கை வருவார் என்றும் கொழும்பு ராஜதந்திர வட்டாரங்கள் உதயன் பத்திரிகைக்குத் தெரிவித்தன. (உ)

### கையில்

நீதிவான் முன்னிலையில் தெரிவித்தனர்.

இலங்கைச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு, தெற்காசியப் பிராந்தியத்தின் பல்வேறு நாடுகளுக்கும் அவர் சுற்றுப்பயணம் செய்ய இருந்தார். (உ)

### வெற்றிலை

இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன. சந்தைகளில் இடம்பெறக் கூடிய சுகாதாரச் சீர்கேடுகளை தவிப்பதற்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. சந்தையில் சுகாதாரமான முறையில் வியாபாரம் செய்வதற்கு வியாபாரிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் பிரதேச சபை கேட்டுக்கொண்டுள்ளது.

வெற்றிலை, பாக்கு மென்றவாறு வியாபாரம் செய்யும் போது பொருள்களை வாங்குவதற்கு நுகர்வோர் பின்நிற்பர். அதேவேளை வெற்றிலை உண்போர் பொது இடங்களில் உமிழ்வதாலும் பல அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. அவற்றைக் கருதியே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று மேலும் கூறப்பட்டுள்ளது. (ற-14)

# யாழ். மாவட்ட அணியினர் கூடைப்பந்தில் சம்பியன்

வலி. வடக்கு, ஏப். 22
சுன்னாகம் பொலிஸாரும் உடுவில் பிரதேச செயலகமும் இணைந்து புத்தாண்டுகொண்டாட்டத்தையொட்டி நடத்திய பெண்களுக்கான கூடைப் பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.
மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில கடந்த சனிக் கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் மருதனார்மடம் இராம நாதன் கல்லூரி கூடைப் பந்தாட்ட அணியும், யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியும் மோதிக்கொண்டன.
இரு அணிகளும் பலம் மிக்க அணிகளாகக் காணப்பட்ட நிலையில் மாவட்ட அணி 17 : 14 புள்ளிகள் என்ற நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.
இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கடுமையாக மோதிக்கொண்ட போதிலும் மாவட்ட அணி சமநிலை பெற்ற நிலையில் 10:08 புள்ளிகள் என்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.
ஆட்ட நிறைவில் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி 27: 22 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. (து-86)


சம்பியனான அணியினர்.

## எறிபந்துப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.22
யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயது ஆண், பெண் இருபாலாருக்குமான எறிபந்துப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.இதேவேளை 15வயது, 17வயது, 19வயது, பிரிவு அணிகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி நாளை 23ஆம், 24ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (த-23)

## 19 வயதுப் பிரிவு அணிகளின் ஆட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.22
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான 19 வயதுப்பிரிவினருக்கான 11பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் 25ஆம் திகதி திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றன. இதில் 18 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன. (த-23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.22
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் திக்கமுனை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இன்றுசெவ்வாய்க்கிழமைமாலை 4.30மணிக்குஇடம்பெறும்ஆட்டத்தில் விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வல்வை விளையாட்டுக்கழக அணிமோதவுள்ளது. (த-23)

## கூட்டம்

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக்கழகங்களை பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்குடன் இணைப்பதுதொடர்பானகூட்டம் மருதங்கேணி பிரதேச செயலர் திருலிங்கநாதன் தலைமையில் எதிர்வரும் 25ஆம் திகதி மருதங்கேணி பிரதேச செயலக மண்டபத்தில்இடம்பெறவுள்ளது என பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் நவநீதமணி அறிவித்துள்ளார். (த-23)

## பிரதேச செயலக மட்ட எல்லே இரு பிரிவிலும் கரைச்சி வெற்றி

யாழ்ப்பாணம், ஏப்.22
கிளிநொச்சி மாவட்டப் பிரதேச செயலகங்களுக்குஇடையிலான மாவட்ட மட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப் போட்டியின் இறுதியாட்டங்கள் கடந்த சனிக்கிழமை பரந்தன் மத்திய விளையாட் டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றன.
ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கரைச்சி பிரதேச செயலக அணியை எதிர்த்து கண்டாவளை பிரதேச செயலக அணி மோதியது.
அதில் கரைச்சி பிரதேச செயலக அணி 32:16 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கரைச்சி பிரதேச செயலக அணியை எதிர்த்து பூநகரி பிரதேச செய லக அணி மோதிக் கொண்டது.
இதில் கரைச்சி பிரதேச செயலக அணி 55:23என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. (ற-23)

## பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் வவுனியா பிரதேச செயலகம் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப்.22
வவுனியா பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை வவுனியா நகர சபை மைதானத்தில் இடம் பெற்றது.
இறுதியாட்டத்தில் வவுனியா வடக்கு பிரதேச செயலக அணியை எதிர்த்து வவுனியா பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது.
இதில் வவுனியா பிரதேச செயலக அணி 30:15 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (ற-23)

## சைக்கிளோட்டத்தில் வெற்றியீட்டியோர்


சைக்கிளோட்டப் போட்டிக்கு தயார் நிலையில்

வலி.வடக்கு, ஏப். 22
புத்தாண்டை முன்னிட்டு சுன்னாகம் பொலிஸாரும் உடுவில் பிரதேச செயலகமும் இணைந்து கடந்த சனிக் கிழமை நடத்திய ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில் வெற்றியீட்டியவர்களின் விவரம் வருமாறு:
முதலாம் இடம் பா.பிரணவதாஸ் (நவாலி), 2ஆம் இடம் பா.இராகுலன் (அச்சுவேலி), 3ஆம் இடம் ந.கஜிதரன் (அரியாலை), 4ஆம் இடம் க.கமலேஸ்வரன் (அளவெட்டி), 5ஆம் இடம் ரா.டிலவன் (கல்வியங்காடு). (ற-86)

# இறுதியாட்டங்கள் இன்று

கிரிக்கெட் இறுதியாட்டம்


சங்கானை பிரதேச செயலக அணி


ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி

கரப்பந்தாட்ட இறுதியாட்டம்


மாவட்ட செயலக அணி


கரவெட்டி பிரதேச செயலக அணி

வலைப்பந்தாட்டம் இறுதியாட்டம்


ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி


வேலணை பிரதேச செயலக அணி

உதைபந்தாட்டம் இறுதியாட்டம்


கரவெட்டி பிரதேச செயலக அணி


தெல்லிப்பழை பிரதேச செயலக அணி

யாழ்ப்பாணம், ஏப்.22
யாழ்.மாவட்டச் செயலக நலன் புரிக் கழகம் நடத்தும் அரச அதிபர் வெற்றிக் கிண்ண விளையாட்டு விழாவின் இறுதியாட்டங்கள் யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக் கழகத் தலைவர் க.மகேஸ்வரன் தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன.
இன்றைய நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், மானிப்பாய் இந்துக்கல்லூரிஅதிபர்எஸ்.சிவனேஸ்வரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக ஓய்வு நிலை பிரதம கணக்காளர் எஸ்.சண்முகரட்ணம், ஓய்வுநிலைவிளையாட்டுத்துறை அதிகாரி திருமதி எ.ஏப்.ஜே.ரூபசிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ள வுள்ளனர்.
துடுப்பாட்டம், வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் ஆகிய பேர்ட்டிகளின் இறுதியாட்டங்கள் இடம் பெறவுள்ளன.
இதில் துடுப்பாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் சங்கானை பிரதேச செயலக அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி மோதவுள்ளது.
வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணியை எதிர்த்து வேலணை பிரதேச செயலக அணி மோதவுள்ளது.
கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் மாவட்ட செயலக அணியை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலக அணி மோதவுள்ளது.
உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் கரவெட்டி பிரதேசசெயலகஅணியைஎதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலக அணி மோதவுள்ளது. (த-23)

## உலகக் கிண்ண ரிக்கெட் விற்பனை படு தீவிரம்

2014 FIFA WORLD CUP Brasil

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் ஜூன் மாதம் பிரேஸிலில் ஆரம்பமாக உள்ள நிலையில் இந்தப் போட்டிகளுக்கான ரிக்கெட் விற்பனை தீவிரமடைந்துள்ளது.

போட்டி நடைபெறவுள்ள 12 நகரங்களில் 10 நகரங்களில் ரிக்கெட் விற்பனை கடந்த சனிக்கிழமை தொடங்கியது.

உதைபந்தாட்ட ரசிகர்கள் ரியோ டி ஜெனிரோவில் உள்ள மைதானத்தில், ரிக்கெட்டுக்களை வாங்குவதற்கு அலை மோதுகின்றனர்.

உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தின் முதல் போட்டி நடைபெற உள்ள சா பாவ்லோ நகரிலும், ரசிகர்கள் மகிழ்ச்சியுடன் டிக்கெட் கொள்வனவில் ஈடுபட்டுள்ளனர். (த)



## பெடரரை வீழ்த்தினார் வாவ்ரிங்கா

மான்ட் கார்லோ மாஸ்டர்ஸ் சர்வதேச ரென்னிஸ் போட்டி மொனாக்கோவில் நடந்தது. இதன் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் 4ஆம் நிலை வீரரான சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர், சக நாட்டவரும், தரவரிசையில் 3ஆவது இடம் வகிப்பவருமான ஸ்ரானிஸ்லாஸ் வாவ்ரிங்காவை நேற்று எதிர்கொண்டார்.

14 ஆண்டுகளுக்குப் பிறகு சுவிற்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த இருவர் ஏ.டி.பி. இறுதி ஆட்டத்தில் சந்தித்ததால் ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு நிலவியது. இதில் முதல் செற்றை தனதாக்கிய பெடரர், அதன் பிறகு கோட்டை விட்டார். சுதாகரித்து வெகுண்டு எழுந்த வாவ்ரிங்கா அடுத்த இரு செற்றுகளில் ஆக்ரோஷமாக ஆடி பெடரருக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தார்.

பெடரரின் போராட்டத்தை 2 மணி 13 நிமிடங்களில் முடிவுக்கு கொண்டு வந்த வாவ்ரிங்கா 4:6, 7:6 (5), 6:2 என்ற செற் கணக்கில் வெற்றி கண்டு முதல் முறையாக மாஸ்டர்ஸ் கிண்ணத்துக்கு முத்தமிட்டார். பெடரருக்கு எதிராக 15ஆவது முறையாக மோதிய வாவ்ரிங்கா அதில் பெற்ற 2ஆவது வெற்றி இதுவாகும். இதற்கு முன்பு 2009ஆம் ஆண்டு அவரை தோற்கடித்து இருந்தார்.

இந்தக் கிண்ணத்தை ஒரு முறை கூட வெல்லாத பெடரரின் கனவு இங்கு 4ஆவது முறையாக இறுதி ஆட்டத்தோடு தகர்ந்து போயுள்ளது.

மகுடம் சூடிய 29 வயதான வாவ்ரிங்காவுக்கு ரூபா 12 கோடியும், 1000 தரவரிசை புள்ளிகளும், 2ஆவது இடம் பிடித்த பெடரருக்கு ரூபா 7 கோடியும், 600 தரவரிசை புள்ளிகளும் வழங்கப்பட்டன. பெடரர் மட்டும் வெற்றி பெற்றிருந்தால், வாவ்ரிங்காவை இறக்கிவிட்டு தரவரிசையில் 3ஆவது இடத்தை பிடித்திருப்பார் என்பது நினைவு கூரத்தக்கது.

முன்னதாக இரட்டையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் முதல்நிலை ஜோடியான அமெரிக்க இரட்டை சகோதரர்கள் பாப் பிரையன்-மைக் பிரையன் 6:3, 3:6, 10:8 என்ற செற் கணக்கில் இவான் டோடிக் (குரோஷியா)- மார்சிலோ மெலோ (பிரேசில்) இணையை சாய்த்து கிண்ணத்தை வசப்படுத்தினர்.

மைக் பிரையனுக்கு இது 100ஆவது இரட்டையர் பட்டமாகும். பின்னர் 35 வயதான மைக் பிரையன் கூறுகையில், பட்டத்தை வென்றதில் மூன்று இலக்கைத் தொட்டமை வியப்பளிக்கிறது.

100 இரட்டையர் பட்டத்தை கைப்பற்றிய முதல் வீரர் என்பது உண்மையிலேயே சிறந்த சாதனையாகும் என்றார். அதேசமயம் மைக்-பாப் பிரையன் ஒன்றிணைந்து வென்ற 98ஆவது பட்டமாக இது அமைந்துள்ளது. (த)



## மகனுடன் கலக்கும் சச்சின்

மும்பை இந்தியன்ஸ் அணியின் நட்சத்திரமாக விளங்கும் முன்னாள் இந்திய வீரர் சச்சின், வலைப்பயிற்சியில் தனது மகனுடன் பந்துவீசி வீரர்களுக்கு பயிற்சியளித்து வருகிறார். இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார். ஐ.பி.எல் போட்டிகளில் மும்பை அணிக்காக விளையாடி வந்த நிலையில், கடந்த ஆண்டு ஐ.பி.எல் போட்டிகளில் இருந்தும் விடை பெற்றார். ஐ.பி.எல் போட்டிகளில் இருந்து விடை பெற்றாலும் மும்பை அணி வீரர்களுக்கு தனது பல பயிற்சிகளையும், யோசனைகளையும் வழங்கி வருகிறார். இந்த நிலையில் அவரது மகனும் பயிற்சிக் களத்தில் இறங்கியுள்ளார்.

இருவரும் வலைப்பயிற்சியில் ஈடுபட்டும் துடுப்பாட்ட வீரர்களுக்கு பந்து வீசி பயிற்சி அளித்தும் வருகின்றனர். (த)



## எனது திறமையை யாருக்கும் நிரூபிக்கும் அவசியமில்லை

இந்திய அணியின் ஆரம்ப வீரரான விரேந்தர் ஷேவாக் தனது திறமையை யாருக்கும் நிருபிக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறியுள்ளார்.

மோசமான விளையாட்டினால் கடந்த ஜனவரி 2013ஆம் ஆண்டு அணியில் இருந்து நீக்கப்பட்ட ஷேவாக், ஐ.பி.எல் தொடரில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியில் விளையாடி வருகிறார்.

ஐ.பி.எல் தொடர் மூலம் இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செல்லவுள்ள இந்திய அணியில் இடம்பெற நம்பிக்கை தெரிவித்த ஷேவாக் இது பற்றி கூறுகையில்;

எனது 15 வருட கிரிக்கெட் வாழ்க்கையில் 100 டெஸ்ட் போட்டிகள், 250 ஒருநாள் போட்டிகள் மற்றும் பல 20/20 போட்டிகளில் விளையாடி இருக்கிறேன்.

அதனால் இனிமேல் நான் யாருக்கும் எதையும் நிரூபிக்க வேண்டியதில்லை, என்னுடைய திறமைகள் எனக்கு என்னவென்று தெரியும். நடக்கும் ஐ.பி.எல் போட்டியில் என்னால் முடிந்த அளவு கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கு நல்ல தொடக்கத்தைக் கொடுத்து அணியை வெற்றி பெறச் செய்வதே என்னுடைய முக்கிய பணியாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார். (த)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தடையை

னெடுக்கப்படும் விசாரணைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை என்றும் அறிவித்துள்ளது.

அதையடுத்து இலங்கை மீது ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா என்பன பொருளாதாரத் தடைகளை விதிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதுகுறித்துக் கருத் துத் தெரிவிக்கும்போதே வர்த்தக அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது உற்பத்தியில் 70 சத வீதமானவை ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளையே சென்றடைகின்றன. மத்திய கிழக்கு நாடுகளுக்கு 30 சத வீதம் மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வாறானதொரு நிலையில் இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகத்தில் எதிர்காலத்தில் சவால்கள் எதிர்நோக்கப்படுமாயின், அதற்கு மாற்றீடாக வேறு சில நாடுகளுக்கு எமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தென்னாபிரிக்கா, ஜப்பான், ரஷ்யா போன்ற நாடுகளுக்கு எமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கான செயற்றிட்டம் வர்த்தக அமைச்சு மூலம் முன்னெடுக்கப்பட்டுவருகிறது" - என்று தெரிவித்துள்ளார். (ற)

### மோடி

மான இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது விசாரணை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ.

சாத்தூரில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறும் போது,

"இலங்கை ஜனாதிபதி செய்த குற்றங்களை வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இனப்படுகொலை தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு ஆணைக்குழு அமைக்கப்படும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)



## அச்சுறுத்துகிறார் மக்ஸ்வெல்

கிளென் மக்ஸ்வெல்லின் அதிரடி ஆட்டம் கட்டுப்படுத்த முடியாத ஒன்றாக உள்ளது என்று ராஜஸ்தான் அணியின் அணித்தலைவர் வொட்சன் கூறியுள்ளார்.

ராஜஸ்தானுக்கெதிராக நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் பஞ்சாப் அணியின் வீரர் கிளென் மக்ஸ்வெல் அதிரடியாக ஆடி 89 ஓட்டங்கள் எடுத்தார்.

இது அணி 192 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை வெற்றிகரமாக அடைய உதவியாக இருந்தது.

இது குறித்து வொட்சன் கூறுகையில், மக்ஸ்வெல் சிறப்பாக விளையாடினார். அவர் ஏதாவது ஒரு தவறான முடிவை எடுத்து ஆட்டமிழப்பார் என்று நாங்கள் எதிர்பார்த்தோம்.

ஆனால் அவர் ஓட்டங்கள் சேர்ப்பதை எங்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. அது அவருக்கான நாளாக அமைந்துள்ளது என்று கூறியுள்ளார். (த)

# 84 ஓட்டங்களுக்குள் டில்லியை சுருட்டியது சென்னை சுப்பர் கிங்ஸ்



ஐ.பி.எல்லின் நேற்றைய ஆட்டத்தில் டில்லி டேர்டெவில்ஸ் அணியை 84 ஓட்டங்களுக்குள் சுருட்டி 93 ஓட்டங்களால் வெற்றி பெற்றது சென்னை சுப்பர் கிங்ஸ்.

நேற்றைய ஆட்டம் அபுதாபி ஷேக் சயாட் மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அந்த அணியின் வீரர் சுரேஸ் ரெய்னா அதிகபட்சமாக 56 ஓட்டங்களை விளாசினார். அணித் தலைவர் மகேந்திர சிங் டோனி 32 ஓட்டங்களையும், சிமித் 29 ஓட்டங்களையும், பப் டு பிளசிஸ் 24 ஓட்டங்களையும் எடுத்தனர். 20 பந்துப்பரிமாற்றங்கள் முடிவில் சென்னை அணி 7 இலக்குகள் இழப்புக்கு 177 ஓட்டங்களைப் பெற்றது.

டில்லி அணி சார்பில் உனத்கட் 3 இலக்குகளையும், முகமட் சமி, நதீன், நீஸம் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

178 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய டில்லி டேர்டெவில்ஸ் அணி ஆரம்பத்திலேயே இலக்குகளை இழந்து தடுமாறத் தொடங்கியது. சென்னை அணியின் பந்து வீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டனர்.

நீஸம் அதிகபட்சமாக 22 ஓட்டங்களையும், டினேஸ் கார்த்திக் 21 ஓட்டங்களையும், டுமினி 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

15.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் டில்லி அணி 84 ஓட்டங்களுக்குள் அனைத்து இலக்குகளையும் இழந்து படுதோல்வி அடைந்தது.

பந்துவீச்சில் சென்னை அணியின் வீரர்களான பாண்டே, ஜடேஜா, அஸ்வின் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளையும், ஹில்பின்ஹோஸ், சர்மா, சிமித் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் வீழ்த்தினர். சென்னை அணி 93 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக 56 ஓட்டங்களை விளாசிய சுரேஸ் ரெய்னா தெரிவானார்.

இதேவேளை-

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை எதிர்த்து கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி மோதியது. இதில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியே வெற்றி பெற்றது. நேற்றைய உதயனின் 23 ஆம் பக்கத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வெற்றியீட்டியது என்று தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம். (த)

## ஐ.பி.எல். பந்தயம் ஆறு பேர் கைது

இந்தியன் பிறிமியர் லீக் போட்டிகள் தொடர்பில் பந்தயத்தில் ஈடுபட்ட ஆறு பேரை இந்தியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஜெய்ப்பூரில் நடத்தப்பட்ட ரோந்து நடவடிக்கையின்போது இவர்கள் கைது செய்யப்பட்டதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

பணம், பணப் பரிமாற்ற பற்றுச் சீட்டுக்கள், கையடக்கத் தொலைபேசிகள், மடிக்கணனி மற்றும் தொலைக்காட்சி போன்றனவும் இதன்போது மீட்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு ஐ.பி.எல். போட்டிகளில் ஆட்ட நிர்ணயம் இடம்பெற்றமை தொடர்பில் விசாரணை செய்வதற்கு மூவரடங்கிய குழுவை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

Mobile Repairing
100% Job Oriented Studies
Duration - 2Months
Soft Tech
புதிய பிரிவுகள் 26.04.2014
சனிக்கிழமை முதல் ஆரம்பமாகின்றன
Saturday, Sunday Evening : 2.30 - 4.00
14 வருட அனுபவமிக்க ஆசிரியர் மூலம் யாழ்ப்பாணத்தில் இதுவரை கற்பிக்கப்படாத கல்வி நுட்பங்களுடன் தொழில்முறை பயிற்சிகள் வழங்கப்படும்
306. கண்டி வீதி, புங்கன்குளம் சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம்.
021-221-1220, 077-9122997
www.softtech-edu.com

## கில்லர் மில்லர்



ஐ.பி.எல் தொடரில் துடுப்பாட்டத்தில் அதிரடியாக ஓட்டங்களைக் குவித்து வரும் டேவிட் மில்லருக்கு புதிய பெயர் சூட்டப்பட்டுள்ளது.

டேவிட் மில்லர் என்ற பெயருக்கு பதிலாக அவரை கில்லர் மில்லர் (Killer Miller) என தற்போது கிரிக்கெட் விமர்சகர்கள் அழைக்க ஆரம்பித்துள்ளனர்.

மில்லர் 50 ஓட்டங்களைப் பெற்றபோது மைதானத்தில் பொருத்தப்பட்டிருந்த டிஜிற்றல் திரையில் கில்லர் மில்லர் என்ற பெயரைக் காணக்கூடியதாகவும் இருந்தது.

நேற்று முன் தினம் போட்டியில் மில்லர் 19 பந்துகளில் 5 சிக்ஸர்கள் அடங்கலாக 52 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்.

ஏழாவது ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற லீக் போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் மற்றும் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் டேவிட் மில்லர், குல்கர்னி வீசிய 18ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 4 சிக்ஸர்களை அடித்து வெற்றிக்கு வித்திட்டார். இதைத் தொடர்ந்து 19ஆவது ஓவரில் சிக்ஸருடன் இன்னிங்ஸை நிறைவு செய்தார் மில்லர். (த)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இளைஞர், யுவதிகள், அரச, தனியார் ஊழியர்கள், பல்கலை புகுமுக மாணவர்கள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
"ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் இப்பயிற்சியில் இணைந்து சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 26.04.2014 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. காலை 01.00-03.00
4. மாலை 03.00 - 05.00 (இடமில்லை)
எமது 3 மாத பயிற்சி நிறைவில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியாத விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.
குறிப்பு - பயிற்சிநெறி முடிவில் சர்வதேச தரத்திலான Diploma certificate வழங்கப்படும்.
SAAMSON LANGUAGE SCHOOL 179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567

A/L விஞ்ஞான வகுப்புகள்
முறையான Biology by: Narew
பிரயோக Chemistry by: Indran
அழையுங்கள் அருந்துங்கள்
077 773 0840 077 665 5290
தனி/குழு/வீடு வரல் (இரு மொழிகளிலும்) உரலில் இடப்பட்டது உலக்கைக்குத் தப்பாது. தலைமுறைகள் கடந்த நம்பிக்கை. சும்மா படிச்சு கொதறுங்க. (47066) (7.6.3)

FIRST FORM
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் வெளியிடப்படும் முதல் படிவம் FIRST FORM நாளை வெளி வருகிறது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.
அன்னை புத்தகசாலை
(யாழ்ப்பாண முகவர்)
யாழ்ப்பாணம். 021 2229881

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

### மரண அறிவித்தல்

**நாகலிங்கம் குணராசா** (மெக்கானிக் குணம்)



சுதுமலை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், பட்டினசபை வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் குணராசா (மெக்கானிக் குணம்) 20.04.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், விமலா தேவி (தேவி)யின் அன்புக் கணவரும், மங்கையர்க்கரசி (மங்கை), அழகேஸ்வரி, அழகேந்திரராஜா, துரைராஜா (குஞ்சன்), மகேந்திரராசா (மகான்), யோகராசா, ஸ்ரீஜெயமேரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், யசோதரன் (சவூதி), யர்மிலா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயரஜனி, கருணேஸ்வரா (ரவி, சவூதி) ஆகியோரின் அன்பு மாமனும், சயூரன், கிருத்திகா, ஆஜித் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காகப் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (47060)(7.6.3)

பட்டின சபை வீதி, மானிப்பாய். தகவல் : குடும்பத்தினர்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
வங்கியல் கற்கைநெறிகள்
IABF & DABF, CBF & DBF (Tamil & English Medium)
Chartered CAB 1 & CAB 11 (Tamil & English Medium)
Aat (Srilanka) Final (Tamil & English Medium)
Further Details:
JAFFNA COLLEGE
UNDERGRADUATE Dept,
464 Hospital Road, Jaffna
021 2223382

JAFFNA COLLEGE
UNDER GRADUATE DEPT.
கருத்தரங்கு
2014.05.05ஆம் திகதி நடைபெறவுள்ள யாழ். பல்கலைக்கழக BA Part I பரீட்சைக்கான துரித வழிகாட்டல் கருத்தரங்கு
காலம் : 26.04.2014, 27.04.2014
இடம் : யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரிப்பிரிவு
464 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021 2223382
பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்

| பாடங்கள் | சனிக்கிழமை | ஞாயிற்றுக்கிழமை |
|---|---|---|
| தமிழ் | | 08.00 -10.00 |
| இந்துநாகரீகம் | | 12.00 - 02.00 |
| கிறிஸ்தவநாகரீகம் | | 12.00 -02.00 |
| அரசியல் | 08.00 - 10.00 | |
| மெய்யியல் | 12.00 - 02.00 | |
| புவியியல் | | 10.00 - 12.00 |
| வரலாறு | 10.00 - 12.00 | |
| ஆங்கிலம் | | 02.00 - 04.00 |

★ GAQ, BA Part I, BA புதிய பிரிவுகள் 2014.04.26 ஆம் திகதி ஆரம்பம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.